Not for sale

மார்ச் / ஏப்ரல் 2015

தமிழாக்கம்

# The Herald

## of Christ's Kingdom



# இயேசுவின் மரணத்தை நினைவுகூறுதல்

இயேசு கண்ணீர் விட்டார் • எருசலேமுக்குச் செல்லும் வழி

இயேசுவின் கடைசி 24 மணி நேரங்கள் • இறுதி ஆசி

பராமன் மற்றும் பரிபூரண மனுஷன் • ஐக்கியமா அல்லது பொதுவான ஐக்கியமா?

• கிறிஸ்துவின் சரீரத்திலுள்ள ஐக்கியம்

## இயேசுவின் மரணத்தை நினைவுகூறுதல்



# ஆதியிலே

பண்டிகைகளைக்குறித்து இயேசு கிறிஸ்துவுக்கு எந்த அபிப்பிராயமும் இல்லை. இரண்டு அனுசரிப்புகளை மட்டுமே கடைபிடிக்கும்படி இயேசு தம்முடைய சீஷர்களைக் கேட்டுக்கொண்டார். ஒன்று ஞானஸ்நானம், மற்றொன்று அவருடைய மரணத்தை நினைவுகூருதல். ஞானஸ்நானம், ஒரு தனிப்பட்ட நிகழ்வாக இருப்பதினால் எந்த நேரத்திலும் சம்பவிக்கலாம். ஆனால், இந்த நினைவுகூருதல் யூத பஸ்காவோடு ஒத்திருக்கிறது. ஏனெனில், அவ்வேளையில் இயேசு சிலுவையில் மரித்தார். அவருடைய மரணத்திற்குமுன் சாயங்காலத்திலே, தம்முடைய சீஷர்களுக்கு அப்பமும் இரசத்தையும் கொடுத்து, "இதை என் நினைவாகச் செய்யுங்கள்" என்று கூறினார். இந்தப் பிரதியில் நம்முடைய இரட்சகரின் மரணத்தைப் பல கோணங்களில் நினைவுகூருகிறோம்.

ஒரு பிரதான ஆசாரியனாக, இயேசு தம்முடைய சீஷர்கள்மேல் மட்டுமல்ல, புறஜாதியின் உலகத்தில் அவர் சந்தித்த யாவர்மேலும் அவர் வைத்திருந்த இரக்கமும், கருணையும், பல்வேறு வழிகளில் செயலாற்றினதை, "இயேசு கண்ணீர் விட்டார்" என்ற தலைப்பு ஆராய்கிறது. லாசரு மரித்த விஷயத்தில், மரித்தோரிலிருந்து லாசருவை இயேசு எழுப்புவதை அவர் நன்கு அறிந்திருந்தபோதிலும், அந்த குடும்பத்தின்மேல் அவர் கொண்டிருந்த அன்பினிமித்தம் அவர் கண்களில் கண்ணீர் ததும்பியது.

கலிலேயாவிலிருந்து எருசலேமுக்கு இயேசு சென்ற கடைசி பயணத்தின் சிறப்பு அம்சங்களை, "எருசலேமுக்குச் செல்லும் வழி" என்ற தலைப்பு விவரிக்கிறது. இந்தக் கடைசி வாரத்தின்போது, இயேசு தம்முடைய பிரிவுக்காக சீஷர்களை ஆயத்தப்படுத்தனார். மேலும் இந்த வாரத்தில் அவர் தம்முடைய இறுதி அற்புதங்களை நிகழ்த்தி, ஜெபத்தின் முக்கியத்துவத்தை அவர் வலியுறுத்தினார்.

இயேசுவின் வாழ்க்கையின் கடைசி நாளின் கடுமையான அனுபவங்களைக்குறித்து, "இயேசுவின் கடைசி 21 மணி நேரங்கள்" என்ற தலைப்பு ஆராய்கிறது. தம்முடைய சீஷர்களோடு இறுதி போஜனத்தை மகிழ்ச்சியோடு புசித்ததிலிருந்து, தனிமையில் ஆறு மணி நேரம் சிலுவையில் தொங்கி, தம்முடைய இறுதி பணியாகிய - மனுக்குலத்திற்கு ஈடு கிரயத்தைச் செலுத்துவதின்மேல் முழு கவனத்தையும் வைத்து - தம்முடைய மூன்றரை வருட ஊழியத்தின் முடிவுவரைக்கும் உள்ள காரியங்களை இக்கட்டுரை விவரிக்கிறது.

நினைவுகூருதலின் அடையாளங் களின் வழியாக அவருடைய மரணத்தை நினைவுகூரும்படி இயேசு தம்முடைய சிலுவை மரணத்திற்கு முன் அந்த இரவில் மேல் வீட்டறையில் இயேசுவின் சிந்தைகளை "இறுதி ஆசி" என்ற கட்டுரை சிந்திக்கிறது.

இயேசுவின் சோதனையில் பரபாஸ் மிகக் குறைவாகக் குறிப்பிடப்பட்டாலும், இயேசுவுக்குப் பதிலாக அவர் விடுவிக்கப்பட்டதிலிருந்து பல பாடங்களை, "பரபாஸ் மற்றும் பரிபூரண மனுஷன்" என்ற தலைப்பு விவரிக்கிறது.

நம்முடைய நினைவுகூருதலின் ஆராதனையில், ஒரு முழுமையான பகுதியில், அப்பம் மற்றம் பாத்திரத்தில் பங்கெடுப்பதை, "ஐக்கியம் அல்லது பொதுவான ஐக்கியம்" என்ற தலைப்பு தியானிக்கிறது. நாம் அனைவரும் இயேசுவாகிய ஒரே அப்பத்தில் இணைந்து பங்கெடுப்பதினால் 1 கொரிந்தியர் 10:17-ஆம் வசனத்திற்கு இசைவாக, "யுத்தம் செய்வோம் வாரும்" என்ற பாமாலைப் பாடலானது நாம் அனைவரும் "ஒரே சரீரம்" என்று அறிவிக்கிறது.

இறுதியாக, விசுவாசிகளின் சரீரத்தை வளர்ச்சியடையச் செய்து, போஷிப்பதற்காக, பிரதிபலிக்கக்கூடிய கிறிஸ்துவ கோட்பாடுகளின் வழியைக்குறித்து, "கிறிஸ்துவின் சரீரத்தின் ஐக்கியம்" என்ற தலைப்பு சிந்திக்கிறது. சகோதரர்களுக்குள் நிலவும் வேறுபாடுகளைச் சரி செய்வதற்கு நம்மை நாம் சுய பரிசோதனைச் செய்வதற்கு இக்கட்டுரை ஊக்குவிக் கிறது.

நம்முடைய விலையேறப் பெற்ற இரட்சகரும் ஆண்டவருமாகிய இயேசுவை, "நினைவுகூரும்படிக்கு" மிக முக்கியமாக அனுசரிக்க வேண்டிய ஞாபகார்த்த இராபோஜனத்திற்கு, நம்முடைய வாசகர்கள் ஆயத்தப்படுவதற்கு இந்தப் பிரதி உதவியாக இருக்கட்டும்.

### மார்ச் / ஏப்ரல் 2015


**இயேசு கண்ணீர் விட்டார்** 75
கருணை

**எருசலேமுக்குச் செல்லும் வழி** 80
இயேசுவின் மரணம்

**இயேசுவின் கடைசி 21 மணி நேரங்கள்** 89
கடுமையான அனுபவங்கள்

**இறுதி ஆசி** 95
விருப்பத்துடன்

**பரபாஸ் மற்றும் பரிபூரண மனுஷன்** 96
இதோ அந்த மனுஷன்!

**ஐக்கியமா அல்லது பொதுவான ஐக்கியமா?** 100
ஆசீர்வாதத்தின் ஒரு பாத்திரம்

**கிறிஸ்துவின் சரீரத்திலுள்ள ஐக்கியம்** 104
ஒரு சரீரம்

**தீர்க்கதரிசனத்தில் இன்று** 111



Ray Charlton

# இயேசு கண்ணீர் விட்டார்

"நம்முடைய பலவீனங்களைக்குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார்" (எபிரெயர் 4:15).

இயேசு இரண்டு இடங்களில் கண்ணீர் விட்டார். அவர் எருசலேம் பட்டணத்திற்காக அழுதார் (லூக்கா 19:41). மற்றும் தம்முடைய சிநேகிதனாகிய லாசருவின் கல்லறையில் அழுதார் (யோவான் 11:34-35). இரண்டு சம்பவங்களும் இயேசுவின் ஊழியத்தின் முடிவு காலத்தில் சம்பவித்தது. லாசருவின் மரணத்தில் இயேசு கொண்டிருந்த ஆழமான துக்கமானது, தவித்துக்கொண்டிருக்கும் சிருஷ்டிப்புகளைக் கண்டு அவர் எவ்வளவாக துக்கித்துக்கொண்டிருக்கிறார் என்ற ஆழமான கண்ணோட்டத்தை இந்த சம்பாஷணை விவாதிக்கும்.

**இயேசுவின் ஊழியம்**

இயேசு யோர்தானில் ஞானஸ்நானம் பெற்றது முதல், அவர் மூன்றரை வருடங்கள் தேவனுடைய இராஜ்யத்தைக்குறித்துப் பிரசங்கித்து, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மேசியாவும், தேவனுடைய குமாரனும் இவர்தான் என்று யூதர்களுக்கு நிருபிக்கப்படும்படிக்கு, அவர் பல அற்புதங்களையும் அடையாளங்களையும் நிகழ்த்தி, பரலோக தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றினார். அக்காலத்தில் நம்முடைய ஆண்டவர் காணாமற்போன இஸ்ரயேலர்களுக்காக ஊழியம் செய்துகொண்டு, "நரிகளுக்குக் குழிகளும் ஆகாயத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு, மனுஷகுமாரனுக்கோ தலைசாய்க்க இடமில்லை" (லூக்கா 9:58) என்று கூறினார். அவர் பிறப்பதற்குக்கூட இடம் இல்லாதிருந்தது. "அவள் தன் முதற்பேறான குமாரனைப்பெற்று, சத்திரத்திலே அவர்களுக்கு இடமில்லாதிருந்தபடியினால், பிள்ளையைத் துணிகளில் சுற்றி, முன்னணையிலே கிடத்தினாள்" (லூக்கா 2:7).

இயேசு தம்முடைய ஊழியத்தின் பெரும்பாலான நேரத்தை இஸ்ரயேலின் பொது ஜனங்களோடு செலவழித்தார். தங்களையே பரிசுத்தவான்கள் என்று எண்ணின மத தலைவர்கள் இதைக் கவனித்துக்கொண்டிருந்தார்கள். ஆனால், மீதியுள்ளவர்கள் இரட்சிக்கப்பட முடியாத பாவிகளாக இருந்தார்கள். "வேதபாரகரும் பரிசேயரும் அவருடைய சீஷருக்கு விரோதமாக முறுமுறுத்து: நீங்கள் ஆயக்காரரோடும் பாவிகளோடும் போஜனபானம்பண்ணுகிறதென்னவென்று கேட்டார்கள். இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதேயல்லாமல் சுகமுள்ளவர்களுக்கு வேண்டியதில்லை. நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்கவந்தேன் என்றார்.வேதபாரகரும் பரிசேயரும் அவருடைய சீஷருக்கு விரோதமாக முறுமுறுத்து: நீங்கள் ஆயக்காரரோடும் பாவிகளோடும் போஜனபானம்பண்ணுகிற தென்னவென்று கேட்டார்கள். இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதேயல்லாமல் சுகமுள்ளவர்களுக்கு வேண்டியதில்லை" (லூக்கா 5:30-32). ஆயினும், சில பரிசேயர்கள் இயேசுவை அடையாளம் கண்டுகொண்டனர். "ஆகிலும் அதிகாரிகளிலும் அநேகர் அவரிடத்தில் விசுவாசம் வைத்தார்கள். அப்படியிருந்தும் ஜெபஆலயத்துக்குப் புறம்பாக்கப்படாதபடி, பரிசேயர்நிமித்தம் அதை அறிக்கைபண்ணாதிருந்தார்கள். அவர்கள் தேவனால் வருகிற மகிமையிலும் மனுஷரால் வருகிற மகிமையை அதிகமாய் விரும்பினார்கள்" (யோவான் 12:42-43).

**மத ஆளுநர்களின் எதிர்ப்புகள்**

ஏசாயாவினால் வாக்களிக்கப்பட்டதுபோல, ரோமர்களின் அடிமைத்தனத்திலிருந்து அவர்களை இரட்சிக்கக்கூடிய இராஜரீகமான ஒரு மனுஷனை பரிசேயர்கள் எதிர்பார்த்தார்கள். "நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்; நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்; கர்த்தத்துவம் அவர் தோளின்மேலிருக்கும்; அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக்கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப்பிரபு என்னப்படும். தாவீதின் சிங்காசனத்தையும் அவனுடைய ராஜ்யத்தையும் அவர் திடப்படுத்தி, அதை இதுமுதற்கொண்டு என்றென்றைக்கும் நியாயத்தினாலும் நீதியினாலும் நிலைப்படுத்தும்படிக்கு, அவருடைய கர்த்தத்துவத்தின் பெருக்கத்துக்கும், அதின் சமாதானத்துக்கும் முடிவில்லை; சேனைகளின் கர்த்தருடைய வைராக்கியம் இதைச் செய்யும்" (ஏசாயா 9:6-7). அதற்குப்பதிலாக ஒரு பொருட்டாக எண்ணப்படுவதற்கு பாத்திரம் இல்லாத நாசரேத்தூரில் ஒரு தச்சனுடைய மகன் பாவிகளிடம்

பிரசங்கித்துக்கொண்டிருப்பதை அவர்கள் கண்டார்கள். இதுவே ஏசாயாவின் தீர்க்கதரிசனமாக அறிவிக்கப்பட்ட உண்மையாக இருந்தது. "அவர் அசட்டைபண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவரும், துக்கம் நிறைந்தவரும், பாடு அநுபவித்தவருமாயிருந்தார்; அவரைவிட்டு, நம்முடைய முகங்களை மறைத்துக்கொண்டோம்; அவர் அசட்டைபண்ணப்பட்டிருந்தார்; அவரை எண்ணாமற்போனோம். மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்; நாமோ, அவர் தேவனால் அடிபட்டு வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம்" (ஏசாயா 53:3-4). மரியாளிடம் சொல்லப்பட்ட வார்த்தைகளுக்கு இது எவ்வளவு வேறுப்பட்டதாக இருக்கிறது, "இதோ, நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக. அவர் பெரியவராயிருப்பார், உன்னதமானவருடைய குமாரன் என்னப்படுவார்; கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார்" (லூக்கா 1:31-32).

**யோர்தானுக்குச் செல்லும் சாலை**

இயேசு தம்முடைய இளவயதிலேயே, தான் பூமிக்கு வந்த நோக்கத்தை உணர்ந்திருந்தார் "உலகத்தோற்றமுதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியினுடைய ஜீவபுஸ்தகத்தில் பேரெழுதப்பட்டிராத பூமியின் குடிகள்யாவரும் அதை வணங்குவார்கள்" (வெளிப்படுத்தல் 13:8). இயேசுவின் இளவயதைக்குறித்து லூக்கா ஓர் ஆழமானப் பார்வையை நமக்குக் கொடுத்திருக்கிறார். இயேசுவுக்கு பன்னிரண்டு வயதானபோது, ஒரு பஸ்கா பண்டிகையில், எருசலேமுக்கு இயேசுவை அழைத்துச் சென்ற பெற்றோர், அவரை விட்டுவிட்டு வந்ததை லூக்கா பதிவு செய்திருக்கிறார்.

"காணாததினாலே அவரைத் தேடிக்கொண்டே எருசலேமுக்குத் திரும்பிப் போனார்கள். மூன்றுநாளைக்குப் பின்பு, அவர் தேவாலயத்தில் போதகர் நடுவில் உட்கார்ந்திருக்கவும், அவர்கள் பேசுகிறதைக் கேட்கவும், அவர்களை வினாவவும் கண்டார்கள். அவர் பேசக்கேட்ட யாவரும் அவருடைய புத்தியையும் அவர் சொன்ன மாறுத்தரங்களையுங்குறித்துப் பிரமித்தார்கள்" (லூக்கா 2:45-47).

இயேசுவின் 12 வயதிலிருந்து யோவான் ஸ்நானனிடம் வரும்வரையில், அவரைப்பற்றி எந்த விபரமும் வேதாகமத்தில் காணப்படுவதில்லை. ஆயினும், பரிசேயர்களின் வாக்கின்படி, "இவன் தச்சன் அல்லவா?" (மாற்கு 6:3) என்ற வசனம், இயேசு தம்முடைய இளவயதில் தன்னுடைய பூமிக்குரிய தந்தையாகிய யோசேப்பிடம் தச்சு வேலையைக் கற்றுக்கொண்டதாகக் குறிப்பிடுகிறது. இயேசு 30-ஆம் வயதில் ஞானஸ்நானம் எடுக்கும்படி யோர்தானுக்கு யோவானிடம் வந்தார். தேவனோடு ஒப்புரவாக, தங்களுடைய பாவங்களைப் போக்கும்படி யூதர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள்.

இயேசு பாவங்களுக்காக ஞானஸ்நானம் பெறவில்லை. ஏனெனில், அவர் பாவமற்றவராக இருந்தார். மரண தீர்ப்பின் கீழிருந்த ஆதாமின் இடத்தைப் பெற்று, தன்னுடைய சித்தத்தையல்ல பிதாவின் சித்தத்தை மனப்பூர்வமாகச் செய்வதற்கு, இந்த ஞானஸ்நானம் அடையாளமாக இருந்தது. அதற்குப்பின் அவருடைய ஊழியத்தைக்குறித்த ஆவிக்குரிய பதிவுகளை அறிந்துகொள்வதற்கும், தம்முடைய ஆவிக்குரிய வல்லமையை, பூமிக்குரிய நன்மைகளைப் பெற்றுக்கொள்ளும்படி சாத்தானால் சோதிக்கும்படிக்கும் ஆவியினால் அவர் வனாந்தரத்திற்குக் கொண்டுச் செல்லப்பட்டார். "வனாந்தரத்தில் தியானம் பண்ணுவதற்கும், தன்னுடைய அர்ப்பணிப்புக்குத் தொடர்புள்ள வேலைகளைக்குறித்துத் தியானிப்பதையும் அவருடைய ஞானஸ்நானம் அடையாளப்படுத்து கிறது" (R680) என்று சகோதரர் ரஸல் கூறுகிறார்.

**இயேசுவின் அனுபவங்கள்**

இயேசுவின் சோதனைகளைப்பற்றி நாம் யோசிக்கும்போது, சாத்தான் வனாந்தரத்தில் கொடுத்த மூன்று சோதனைகள் உடனடியாக நம்முடைய சிந்தைக்கு வருகிறது. ஆனால், மற்றவைகள் அந்தளவுக்கு வெளிப்படையாக இருக்கவில்லை. தேவனுடைய ஆலயமாகிய தம்முடைய பிதாவின் வீட்டை ஒரு வியாபார ஸ்தலமாகப் பயன்படுத்துவதை இயேசு கண்டபோது அவர் ஆழமாகக் காயப்பட்டிருக்க வேண்டும். மத தலைவர்களின் உடன்பாடோடு, பழுதற்ற மிருகங்களைப் பலி செலுத்துவதற்கு அவைகளைக் கிரயத்திற்கு விற்றுக்கொண்டிருந்தனர்.

இயேசு ஆலயத்தை இரண்டு முறைகள் சுத்திகரித்தார் என்று பதிவுகள் காட்டுகிறது. ஒன்று அவருடைய ஊழியத்தின் துவக்கத்திலும் (யோவான் 2:13-16). மற்றொன்று, அவருடைய ஊழியத்தின் முடிவிலும் (லூக்கா 19:45-46). அந்த ஆலயத்தை முற்றிலுமாகச் சுத்திகரிப்பதற்கு இயேசு தூண்டப்பட்டிருக்க வேண்டும். அதாவது, வியாபாரிகளை மட்டுமல்ல தந்தையின் வார்த்தைகளைப் போதிக்காத யேகோவா தேவனை அடையாளப்படுத்துபவர்களையும் அவர் சுத்தகரிக்க எண்ணியிருக்கலாம்.

அந்த மத தலைவர்கள், ஜனங்களின்மேல் பாரத்தைச் சுமத்தினார்களே தவிர அவர்களைப் பராமரிக்கவில்லை. "சுமப்பதற்கரிய பாரமான சுமைகளைக்கட்டி மனுஷர் தோள்களின்மேல் சுமத்துகிறார்கள்; தாங்களோ ஒரு விரலினாலும் அவைகளைத் தொடமாட்டார்கள். தங்கள் கிரியைகளையெல்லாம் மனுஷர் காணவேண்டுமென்று செய்கிறார்கள்; தங்கள் காப்புநாடாக்களை அகலமாக்கி, தங்கள் வஸ்திரங்களின் தொங்கல்களைப் பெரிதாக்கி, விருந்துகளில் முதன்மையான இடங்களையும், ஜெபஆலயங்களில் முதன்மையான ஆசனங்களையும், சந்தைவெளிகளில் வந்தனங்களையும், மனுஷரால் ரபீ, ரபீ, என்று அழைக்கப்படுவதையும் விரும்புகிறார்கள்" (மத்தேயு 23:4-7) என்று இயேசு குற்றஞ்சாட்டினார்.

அந்தப் பாரத்தை ஜனங்களிடமிருந்து நீக்குவதற்கு இயேசு அதிகமாக வாஞ்சித்திருக்க வேண்டும். ஆயினும், அதற்கான வேளை இன்னும் வரவில்லை என்று அவர் அறிந்திருந்தும் அவர் முயற்சித்தார். அவரைப் பின்பற்றினவர்கள் மட்டுமே அந்த உறுதியைப் பெற்றார்கள். "வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது என்றார்" (மத்தேயு 11:28-30). மேலும், "அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்" (மாற்கு 10:45) என்றும் உறுதியளித்தார்.

**நம்முடைய பலவீனத்தில் இரக்கம் பாராட்டுதல்**

"அஸ்தமனமானபோது, பிசாசு பிடித்திருந்த அநேகரை அவரிடத்தில் கொண்டு வந்தார்கள்; அவர் அந்த ஆவிகளைத் தமது வார்த்தையினாலே துரத்தி, பிணியாளிகளெல்லாரையும் சொஸ்தமாக்கினார். அவர் தாமே நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக்கொண்டு, நம்முடைய நோய்களைச் சுமந்தார் என்று, ஏசாயா தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது" (மத்தேயு 8:16-17).

இயேசு தம்மை வருத்திக்கொண்டு, மற்றவர்களுக்கு சுகமளித்தார். "பின்பு அவர் அவர்களுடனேகூட இறங்கி, சமனான ஒரு இடத்திலே நின்றார். அங்கே அவருடைய சீஷரில் அநேகம் பேரும் அவருடைய உபதேசத்தைக் கேட்கும்படிக்கும், தங்கள் வியாதிகளினின்று குணமாக்கப்படும்படிக்கும், யூதேயா தேசத்துத் திசைகள் யாவற்றிலிருந்தும், எருசலேம் நகரத்திலிருந்தும், தீரு சீதோன் பட்டணங்கள் இருக்கிற கடலோரத்திலிருந்தும் வந்தவர்களாகிய திரளான ஜனங்களும் இருந்தார்கள். அசுத்த ஆவிகளால் வாதிக்கப்பட்டவர்களும் வந்து, ஆரோக்கியமடைந்தார்கள். அவரிடத்திலிருந்து வல்லமை புறப்பட்டு எல்லாரையும் குணமாக்கினபடியினாலே, ஜனங்கள் யாவரும் அவரைத் தொடும்படிக்கு வகைதேடினார்கள்" (லூக்கா 6:17-19) என்று லூக்கா பதிவு செய்திருக்கிறார்.

இயேசுவின் சுகமளிக்கக்கூடிய வல்லமைக்குள் ஆழமான ஒரு கண்ணோட்டத்தை சகோதரர் ரசல் தருகிறார். வியாதிகளைச் சுகமாக்குவதற்கு, நம்முடைய ஆண்டவரின் பங்கு, அனைத்து பலவீனங்களையும் தாமே ஏற்றுக்கொள்ளுவதிலுள்ள தொடர்பை இந்தப் பதிவை வாசிக்கும் பெரும்பாலனவர்களுக்குத் தெளிவாகப் புரிவதில்லை. சுகமளிக்கும் வல்லமையைச் செயலாற்றும்போது, அவருக்கு எந்தவிதமான நஷ்டமும் ஏற்படுவதில்லை என்று பொதுவாகக் கருதப்படுகிறது. ஆனால் வசனங்களில் பதிவு செய்திருக்கிறபடி இயேசுவால் நிகழ்த்தப்பட்ட சுகமாக்குதல், ஒரு மனுஷ வல்லமைக்கு அப்பார்ப்பட்டதாய் இராமல், அவர் தம்முடைய ஜீவனை ஒரு பகுதியினால் சுகமளித்தார். அதன் விளைவாக அதிகமானவர்களை அவர் குணப்படுத்தும்போது, அவருடைய அதிகமான ஜீவனின் வல்லமைக் குறைந்தது (volume 5 pg 124).

ஜனங்களின் வியாதிகளிலும், பலவீனங்களிலும் இரக்கமுள்ளவராக இயேசு தன்னையே ஜனங்களுக்குக் கொடுத்தார். கெட்ட குமாரனுடைய உவமையில், வழி தப்பிய அந்தக் குமாரனை ஓடிபோய்க் கட்டித் தழுவிய பிதாவாகிய தந்தைக்கு, மனுக்குலத்தின் மேலுள்ள கருணை இங்குக் காண்பிக்கப்படுகிறது. "தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக்குறித்துத் தாமதமாயிராமல்; ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்" (2 பேதுரு 3:9).

வியாதியஸ்தர்கள், முடவர்கள், குருடர்கள் மற்றும் பிசாசினால் உபத்திரவப்படுபவர்கள்

மட்டுமல்ல, தங்களுடைய அன்றாட தேவைகளை நிறைவேற்ற முடியாத பொது ஜனங்களுக்காகவும் இரக்கமுள்ளவராக இருந்தார். "ஜனங்களுக்காகப் பரிதபிக்கிறேன், இவர்கள் என்னிடத்தில் மூன்றுநாள் தங்கியிருந்து சாப்பிட ஒன்றுமில்லாதிருக்கிறார்கள்; இவர்களைப் பட்டினியாய் அனுப்பிவிட எனக்கு மனதில்லை, வழியில் சோர்ந்துபோவார்களே என்றார்" (மத்தேயு 15:32). அவர் அற்புதமாக ஜனங்களைப் போஷித்து, மற்ற நேரங்களில் அவருடைய சீஷர்களைப் பயமுறுத்தும் கொந்தளிக்கும் கடலையும் அமர்த்தி, பயம் என்ன என்பதையும் அவர் புரிந்து கொண்டதாகக் காட்டினார்.

**புறஜாதிகளுக்கான இரக்கம்**

காணாமற்போன ஆடாகிய இஸ்ரயேலர்களுக காக இயேசு அனுப்பப்பட்டாலும், அவருடைய உதவியை நாடிவந்த புறஜாதிகளிடம் இரக்கம் பாராட்டினார். "இயேசு கப்பர்நகூமில் பிரவேசித்தபோது, நூற்றுக்கு அதிபதி ஒருவன் அவரிடத்தில் வந்து: ஆண்டவரே! என் வேலைக்காரன் வீட்டிலே திமிர்வாதமாய்க் கிடந்து கொடிய வேதனைப்படுகிறான் என்று அவரை வேண்டிக்கொண்டான். அதற்கு இயேசு: நான் வந்து அவனைச் சொஸ்தமாக்குவேன் என்றார். நூற்றுக்கு அதிபதி பிரதியுத்தரமாக: ஆண்டவரே! நீர் என் வீட்டுக்குள் பிரவேசிக்க நான் பாத்திரன் அல்ல; ஒரு வார்த்தைமாத்திரம் சொல்லும், அப்பொழுது என் வேலைக்காரன் சொஸ்தமாவான்" (மத்தேயு 8:5-8). இந்த விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டதன் காரணத்தை இயேசு கூறுகிறார் - "இஸ்ரவேலருக்குள்ளும் நான் இப்படிப்பட்ட விசுவாசத்தைக் காணவில்லை என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" (மத்தேயு 8:10). சந்தேகத்துடன் இருக்கும் யூத மத தலைவர்களுக்கு எப்படிப்பட்ட மாதிரி!

மற்றொரு விஷயத்தில், பிசாசு பிடித்திருந்த ஒரு மகளை அவளுடைய தாய் இயேசுவிடம் அழைத்துவந்தாள். "ஆண்டவரே, தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும், என் மகள் பிசாசினால் கொடிய வேதனைப்படுகிறாள்" (மத்தேயு 15:22) என்று அவள் அழுதாள். நான் யூதர்களுக்காக மட்டுமே வந்தேன் என்று இயேசு சொன்னபோது அவளுடைய விசுவாசம் சோதிக்கப்பட்டது. "பிள்ளைகளின் அப்பத்தை எடுத்து, நாய்க்குட்டிகளுக்குப் போடுகிறது நல்லதல்ல" (மத்தேயு 15:26) என்று அவர் கூறினார், அதற்கு அவள், "மெய்தான் ஆண்டவரே, ஆகிலும் நாய்க்குட்டிகள் தங்கள் எஜமான்களின் மேஜையிலிருந்து விழும் துணிக்கைகளைத் தின்னுமே" (மத்தேயு 15:27) என்று அவள் பதிலளித்தாள். "ஸ்திரீயே, உன் விசுவாசம் பெரிது; நீ விரும்புகிறபடி உனக்கு ஆகக்கடவது" என்று இயேசு சொன்னார்.

பதிவு செய்யப்பட்ட மற்றொரு சம்பவத்தில் - "அவர் ஊரின் வாசலுக்குச் சமீபித்தபோது, மரித்துப்போன ஒருவனை அடக்கம்பண்ணும்படி கொண்டுவந்தார்கள்; அவன் தன் தாய்க்கு ஒரே மகனாயிருந்தான். அவளோ கைம்பெண்ணாயிருந்தாள்; ஊராரில் வெகு ஜனங்கள் அவளுடனேகூட வந்தார்கள். கர்த்தர் அவளைப் பார்த்து, அவள் மேல் மனதுருகி: அழாதே என்று சொல்லி, கிட்டவந்து, பாடையைத் தொட்டார்; அதைச் சுமந்தவர்கள் நின்றார்கள்; அப்பொழுது அவர்: வாலிபனே, எழுந்திரு என்று உனக்குச் சொல்லுகிறேன் என்றார். மரித்தவன் எழுந்து உட்கார்ந்து, பேசத்தொடங்கினான்." (லூக்கா 7:12-15). ஆலயத்தலைவனின் மகளை உயிர்த்தெழுப்பினதிலும் இதே இரக்கம் காணபிக்கப்பட்டது. "பயப்படாதே; விசுவாசமுள்ளவனாயிரு, அப்பொழுது அவள் இரட்சிக்கப்படுவாள்" (லூக்கா 8:50).

**பெத்தானியா**

எருசலேமிலிருந்து இரண்டு மைல் தூரத்தில் பெத்தானியா என்ற கிராமம் இருந்தது. பெத்தானியாவைக்குறித்து குறைவாக வேதத்தில் பதிவு செய்யப்பட்டிருந்தாலும், கிறிஸ்துவின் வாழ்க்கையின் கடைசி நாட்களில் சில பிரபலமான நிகழ்வுகள் அங்கு நடந்தது. இயேசுவின் சிறந்த அற்புதம் - லாசருவை உயிர்ப்பித்தது - போன்றவை பெத்தானியாவில் நடந்தது. மனிதனுடைய நலிந்துபோன நிலையைக் கண்ட இயேசுவின் ஆழமான இரக்கம் இந்த அற்புதத்தில் காணப்படுகிறது. குஷ்டரோகியாகிய சீமோன், மரியாள், மார்த்தாள் மற்றும் லாசரு பெத்தானியாவிலுள்ள வீட்டில் இருந்தார்கள். தலை சாய்க்க இடம் இல்லாத இயேசுவுக்கு அவர்களின் வீடு, இளைப்பாறுதலுக்குரிய ஓர் இடமாக இருந்தது.

"மரியாளும் அவள் சகோதரியாகிய மார்த்தாளும் இருந்த பெத்தானியா கிராமத்திலுள்ளவனாகிய லாசரு என்னும் ஒருவன் வியாதிப்பட்டிருந்தான். கர்த்தருக்குப் பரிமளதைலம் பூசி, தன் தலைமயிரால் அவருடைய பாதங்களைத் துடைத்தவள் அந்த மரியாளே; அவளுடைய சகோதரனாகிய லாசரு வியாதியாயிருந்தான். அப்பொழுது அவனுடைய சகோதரிகள்: ஆண்டவரே, நீர் சிநேகிக்கிறவன் வியாதியாயிருக்கிறான் என்று சொல்ல, அவரிடத்திற்கு ஆள் அனுப்பினார்கள்" (யோவான்

11:1-3). இயேசு அவர்களின் குடும்பத்தை அதிகமாக நேசித்தார். அவர்களும் அவரை நேசித்தார்கள். நூற்றுக்கதிபதியின் வேலைக்காரனை சொஸ்தப்படுத்தியதுபோல, லாசருவையும் இயேசு சுகப்படுத்தியிருக்கலாம். இயேசு தாமதிக்கும் ஒவ்வொரு நாளும் லாசரு மரித்துப் போவார் என்று மரியாளும், மார்த்தாளும் மிகுந்த வேதனையோடு பயந்துகொண்டிருந்தார்கள்.

இயேசுவின் வருகை தாமதித்ததினிமித்தம் மார்த்தாள் மற்றும் மரியாள் மிகவும் துக்கத்துடன் இருந்தார்கள். "ஆண்டவரே, நீர் இங்கேயிருந்தீரானால் என் சகோதரன் மரிக்கமாட்டான்" (யோவான் 11:21). இயேசு இல்லாதபோதும், அநேகரை அவர் சுகப்படுத்தினார் என்பதை இவர்கள் அறிந்திருந்தார்கள். ஒருநாள் லாசரும் உயிரோடு எழுந்திருப்பார் என்று அவர்கள் அறிந்திருந்தார்கள். "அதற்கு மார்த்தாள்: உயிர்த்தெழுதல் நடக்கும் கடைசிநாளிலே அவனும் உயிர்த்தெழுந்திருப்பான் என்று அறிந்திருக்கிறேன் என்றாள்" (யோவான் 11:24).

ஆயினும், அந்தக் குடும்பத்தின் உறவு மிக உறுதியாக இருந்தது. ஆகவே, லாசருவின் மரணம் அந்தச் சகோதரிகளை அதிகமாகப் பாதித்தது. "அவள் அழுகிறதையும் அவளோடே கூட வந்த யூதர்கள் அழுகிறதையும் இயேசு கண்டபோது ஆவியிலே கலங்கித்துயரமடைந்து" (யோவான் 11:33). இயேசு மனுஷருடைய பலவீனமான உணர்வுகளால் தொடப்பட்டார். அவருடைய பரிபூரணமான சிந்தை, நம்மைக்காட்டிலும் அதிக உணர்வுள்ளவராகவும், உறுதியான இரக்கமுள்ள வராகவும், வேதனை உணர்வுள்ளவராகவும் இருந்தார் (R5103).

"இயேசு கண்ணீர் விட்டார்" (யோவான் 11:35) என்று யோவான் கூறுகிறார். மற்றவர்களை மரணத்திலிருந்து எழுப்பும்போது இப்படிப்பட்ட உணர்வுகளை அவர் வெளிப்படுத்தவில்லை. இத்தருணத்தில் இயேசு கண்ணீர் விட்டதற்குப் பல விளக்கங்கள் உண்டு. முதலில், அந்தக் குடும்பம் இயேசுவோடு மிக நெருங்கிய நட்புடையவர்களாக, அவருக்குத் தேவைப்படும்போது இளைப்பாறுதலுக்கு இடங்கொடுத்தார்கள். "ஆண்டவரே, நீர் சிநேகிக்கிறவன் வியாதியாயிருக்கிறான்" (யோவான் 11:3) என்ற வார்த்தைகள் இயேசு அந்த குடும்பத்தோடு கொண்டிருந்த நெருக்கத்தைக் காட்டுகிறது. இரண்டாவதாக இயேசு, "அவர் துக்கம் நிறைந்தவருமாயிருந்தார்" (ஏசாயா 53:3). லோகாசாக இருந்தபோது, காயீன் ஆபேலைக் கொன்றுபோட்டதைப் பார்த்துக்கொண்டிருந்தார். அவர் யேகோவா தேவனோடு, எகிப்தில் இஸ்ரயேலர்களின் கதறலைக் கேட்டுக்கொண்டிருந்தார். ஆயினும், இந்தமுறை அவர் கண்ணீர் சிந்தும்படி அசைக்கப்பட்டார். நம்மைச் சுற்றியிருக்கும் ஜனங்கள் பாவம் மற்றும் மரணத்தின் கொடூரங்களை அனுபவிப்பதை நாம் பார்க்கும்போது வேதனைப்படுகிறோம். ஆனால், விசேஷமாக நாம் நேசித்தவர்கள் இப்படிப்பட்ட மரண வேதனைகளை அடையும்போது நாம் உண்மையில் பதறுகிறோம். இயேசு அந்தக் குடும்பத்தாரை அதிகமாக நேசித்ததினால் அவர் கண்ணீர் விட்டார்.

காலபோக்கில் லாசரு மீண்டும் மரித்து போவார். ஆயினும், ஆதாமுக்காகக் கொடுக்க வேண்டிய ஈடு கிரயத்தைக் கொடுக்கக்கூடிய காலம் மிகச் சமீபமாக இருப்பதையும், வசனங்களில் எழுதியிருக்கிறபடி, அவர் சகலத்தையும் நிறைவேற்றும் பட்சத்தில் மரணத்தீர்ப்பிலுள்ள அனைவரையும் அவர் விடுவிப்பதற்கான வழியை ஏற்படுத்துவார் என்று இயேசு அறிந்திருந்தார். வெகு சீக்கிரத்தில் அவருடைய உயிர்த்தெழுதலில் இந்த வெற்றி காணப்பட்டது.

**அது ஒரு பூமியின் மட்கலயம்**

மிகவும் சிறியதாய் வெற்று குடமாய்,
எஜமானுக்கருகினிலிருந்ததுவே, வெறுமையாகத்தான் அது இருக்க விரும்புதே, எஜமான்
அதனை நீர் வீழ்ச்சிக்கு எடுத்துச் சென்றே, விளிம்புவரை நீர் பிடித்தாரே, சிறுசேவை ஒன்றை
செய்திட்டோம் என்றே கலயமும் மகிழ்ச்சி கொண்டதுவே, அவர் கையினால் நீரினை
எடுத்துவந்தே, தாகம் கொண்ட செடிகளுக்கே ஊற்றித் தாகம் தீர்த்து வைத்தாரே,
நீர் வீழ்ச்சிக்கோர் சேதி சொல்லவே, கலயம் தன்னைப் பணித்தாரே, கலயம் அவற்றின்
காதினிலே, மெதுவாய் செய்தி கூறியதே அவர் என்னைத் தரையினில் வைக்கையிலே, அவர்
போகிற பாதையில் கிடப்பேனே, எஜமானுக்கருகினில் இருப்பேனே, வெறுமையாகவே
கிடப்பேனே, என்றாவது ஓர்நாள் என்னைத்தான், மீண்டும் கையினில் எடுத்துத்தான்,
பூத்துக்குலுங்கும் செடிகளுக்கே, தண்ணீர் வார்ப்பார் என்னாலே, பயன்படுத்துவார்
என்னைத்தான். அதுவரையில் நானும் தான் பொறுத்திருப்பேன் தன்னாலே.

# எருசலேமுக்குச் செல்லும் வழி



"அதுமுதல் இயேசு, தாம் எருசலேமுக்குப்போய், மூப்பராலும் பிரதான ஆசாரியராலும் வேதபாரகராலும் பல பாடுகள் பட்டு, கொலையுண்டு, மூன்றாம் நாளில் எழுந்திருக்கவேண்டும் என்பதைத் தம்முடைய சீஷர்களுக்குச் சொல்லத் தொடங்கினார்" (மத்தேயு 16:21).

Ernie Kuenzli

இயேசு எருசலேமுக்குத் தம்முடைய இறுதி பயணத்தைத் துவங்கும்போது, கிபி 33-ஆம் வருடமாக இருந்தது. கலிலேயாவில் துவங்கி, சுமார் 80-100 மைல்கள் அவருடைய பூமிக்குரிய ஊழியம் நிறைவடையக்கூடிய யூத தலைநகரமாகிய எருசலேமுக்கு அவர் பயணிக்க வேண்டியதாக இருந்தது. இந்தப் பயணத்தில் நடந்த குறிப்பான ஐந்து சம்பவங்களை நாம் கவனிக்கலாம்.

**அவருடைய மரணத்தை நோக்கிச் செல்லுதல்**

"இயேசு எருசலேமுக்குப் போகும்போது, வழியிலே பன்னிரண்டு சீஷரையும் தனியே அழைத்து: இதோ, எருசலேமுக்குப் போகிறோம்; மனுஷகுமாரன் பிரதான ஆசாரியரிடத்திலும் வேதபாரகரிடத்திலும் ஒப்புக்கொடுக்கப்படுவார்; அவர்கள் அவரை மரண ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்து, அவரைப் பரியாசம்பண்ணவும், வாரினால் அடிக்கவும், சிலுவையில் அறையவும் புறஜாதியாரிடத்தில் ஒப்புக்கொடுப்பார்கள்; ஆகிலும் மூன்றாம் நாளிலே அவர் உயிரோடே எழுந்திருப்பார் என்றார்" (மத்தேயு 20:17-19).

எருசலேமில் இயேசு கொல்லப்படுவார் என்று அவர் தம்முடைய சீஷர்களுக்கு முன்னதாகவே அறிவித்திருந்தார். பேதுரு இதற்கு எவ்வளவு முரண்பாடாகப் பதிலளித்தார் என்பதை நாம் நினைவில் கொண்டிருக்கிறோம். "பேதுரு அவரைத் தனியே அழைத்துக்கொண்டுபோய்: ஆண்டவரே, இது உமக்கு நேரிடக்கூடாதே, இது உமக்குச் சம்பவிப்பதில்லை என்று அவரைக் கடிந்துகொள்ளத் தொடங்கினான்" (மத்தேயு 16:22). இயேசுவாகிய மேசியா எதற்காக மரிக்க வேண்டும் என்ற காரணத்தை பேதுருவின் இயல்பான சிந்தையில் புரிந்துகொள்ள இயலவில்லை.

"எனக்குப் பின்னாகப்போ, சாத்தானே, நீ எனக்கு இடறலாயிருக்கிறாய்; தேவனுக்கு ஏற்றவைகளைச் சிந்தியாமல் மனுஷருக்கு ஏற்றவைகளைச் சிந்திக்கிறாய்" (மத்தேயு 16:23) என்று இயேசு பேதுருவுக்குப் பதிலளித்தார். இயேசுவின் வார்த்தைகள் பேதுருவுக்கு நிச்சயமாகவே தேள் கொட்டியதுபோல் இருந்திருக்கும். ஆயினும், எருசலேமுக்குப் போகக்கூடிய நம்முடைய ஆண்டவரை எதிர்த்ததினால், அவர் தேவனுடைய திட்டங்களையே எதிர்க்கக் கூடியவராக இருந்தார்.

தம்மைப்போல பேதுருவும் தன்னுடைய பூமிக்குரிய வாழ்க்கையை மனப்பூர்வமாகப் பலி செலுத்த வேண்டுமென்று இயேசு தம்முடைய சீஷர்களுக்குக் கற்பித்தார். "அப்பொழுது, இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி: ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன். தன் ஜீவனை ரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்துபோவான்; என்னிமித்தமாகத் தன் ஜீவனை இழந்துபோகிறவன் அதைக் கண்டடைவான்" (மத்தேயு 16:24-25). பலியின் அர்த்தத்தை சீஷர்கள் புரிந்துகொண்டனர். இயேசுவைப் பின்பற்றுவதற்காக அவர்கள் அனைத்தையும் விட்டு வந்தார்கள். ஆனால், செலுத்தக்கூடிய பலியானது அவர்களை மரணத்திற்கு அழைத்துச் செல்லும் என்பதை அவர்கள் அறியாதிருந்தார்கள்.

"இவைகளில் ஒன்றையும் அவர்கள் உணரவில்லை; அவைகளின் பொருள் அவர்களுக்கு மறைவாயிருந்தது, அவர் சொன்னவைகளை அவர்கள் அறிந்து கொள்ளவில்லை" (லூக்கா 18:34) என்ற இயேசுவின் வெளிப்படையான வார்த்தைகளை சீஷர்கள் கேட்டபோதும் அவர்கள் புரிந்துகொள்ளாததன் காரணமென்ன? இயேசு இராஜ்யத்தை இஸ்ரயேலர்களிடம் திரும்பக் கொடுப்பார் என்று சீஷர்கள் எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள். அவர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய மேசியா என்பதால் (மத்தேயு 16:16) அவர் மரித்துப் போவதை அவர்களால் தங்களுடைய சிந்தையில் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. கூடுதலாக, அவர்கள் இயேசுவின் பலியைத் தடுத்துவிடாதபடிக்கும், மேல் அதிகாரிகளுக்குத் தம்மை ஒப்புக்கொடுப்பதைத் தடை செய்யாதபடிக்கும் இந்த வாக்கியத்தின் விளக்கம் அவர்களுக்கு மறைக்கப்பட்டது.

இயேசு தாம் மரிக்கப்போவதை, அவருடைய சீஷர்களிடம் சொன்ன காரணமென்ன? முதலில், இது

நடக்கக்கூடியது உண்மையாக இருந்தது. "அப்பொழுது அவர் பன்னிருவரையும் அழைத்து, தமக்குச் சம்பவிக்கப்போகிறவைகளை அவர்களுக்கு மறுபடியும் சொல்லத்தொடங்கினார்" (மாற்கு 10:32). அவரை மறுதலிப்பதினாலும், புறக்கணிப்பதினாலும், அவர் மரிக்கப்போவதினாலும், சீஷர்களின் விசுவாசம் ஒழிந்து போகாதபடிக்கு அவர் அவர்களை ஆயத்தப்படுத்தினார்.

இரண்டாவது - உடனடியாக பூமிக்குரிய இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் என்ற சீஷர்களின் எதிர்பார்ப்பை தடைசெய்யும்படிக்கு, அவருடைய மரணத்தைப்பற்றிக் கூறினார். அவருடைய பயணத்திற்கு முன் பேதுரு இயேசுவிடம், "இதோ, நாங்கள் எல்லாவற்றையும்விட்டு, உம்மைப் பின்பற்றினோமே, என்று" (மாற்கு 10:28) கேட்டார். "அதற்கு இயேசு: மறுஜென்மகாலத்திலே மனுஷகுமாரன் தம்முடைய மகிமையுள்ள சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கும் போது, என்னைப் பின்பற்றின நீங்களும், இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களையும் நியாயந்தீர்க்கிறவர்களாகப் பன்னிரண்டு சிங்காசனங்களின்மேல் வீற்றிருப்பீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" (மத்தேயு 19:28) என்று இயேசு பதிலளித்தார். இயேசுவின் பதிலை அடிப்படையாகக்கொண்டும், அவர்கள் எருசலேமுக்குச் செல்வதை அவர்கள் கண்டதினால் - கிறிஸ்துவின் பூமிக்குரிய ஆட்சியையும், அதில் அவர்களுக்கு ஒரு பங்கு கொடுக்கப்படும் என்றும் அவர்கள் உடனடியாக எதிர்பார்த்தார்கள். ஆனால் இப்படி நடக்கப் போவதில்லை என்று இயேசு அறிந்திருந்தார்.

இந்த அனுபவத்திலிருந்து நாம் என்ன பாடத்தை கற்றுக்கொள்ளலாம்? முதலில் என்ன நடந்தாலும் சரி, தேவனுடைய சித்தத்தை இயேசு நிறைவேற்றுவதில் மிக உறுதியாக இருந்தார். தம்முடைய ஜீவனை ஈடுபலியாகக் கொடுப்பதற்கு மனப்பூர்வமாக ஒப்புக்கொடுப்பதைப்பற்றி இயேசு பேசினார். "நான் என் ஜீவனை மறுபடியும் அடைந்துகொள்ளும்படிக்கு அதைக் கொடுக்கிறபடியினால் பிதா என்னில் அன்பாயிருக்கிறார். ஒருவனும் அதை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளமாட்டான்; நானே அதைக் கொடுக்கிறேன், அதைக் கொடுக்கவும் எனக்கு அதிகாரம் உண்டு, அதை மறுபடியும் எடுத்துக்கொள்ளவும் எனக்கு அதிகாரம் உண்டு. இந்தக் கட்டளையை என் பிதாவினிடத்தில் பெற்றுக்கொண்டேன் என்றார்" (யோவான் 10:17-18).

பாடுகளையும் மரணத்தையும் எதிர் நோக்கக்கூடிய தைரியத்தை நாம் இயேசுவினிடத்தில் காணலாம். அவருடைய தைரியம், தேவன் பேரில் அவர் வைத்திருந்த விசுவாசத்தைச் சார்ந்திருந்தது. யோனாவைப்போல தேவ சித்தத்தைச் செய்வதற்குப் பயந்து ஓடாமல், தலை நிமிர்ந்தவராக மரணத்தை நோக்கிச் சென்றார். "மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும், செத்ததேயாகில் மிகுந்த பலனைக்கொடுக்கும். தன் ஜீவனைச் சிநேகிக்கிறவன் அதை இழந்துபோவான்; இந்த உலகத்தில் தன் ஜீவனை வெறுக்கிறவனோ அதை நித்திய ஜீவகாலமாய்க் காத்துக்கொள்ளுவான்" (யோவான் 12:24-25).

இயேசுவை வெற்றிகரமாகப் பின்பற்றுவதற்கு இதே அர்ப்பணிப்பும், தேவன் மேலுள்ள விசுவாசத்தை அடிப்படையாகக்கொண்டிருக்கும் தைரியமும் நமக்குத் தேவை. இயேசுவைப்போல நம்முடைய பலியின் மரணத்திற்குத் தலை நிமிர்ந்தவர்களாகச் செல்ல வேண்டும்.

**மன்றாடிய விதவை**

இயேசு கலிலேயா மற்றும் சமாரியாவின் வழியாக எருசலேமுக்குச் செல்லும் வழியில், அவர் சீஷர்களுக்கு ஒரு உவமையைச் சொன்னார். "சோர்ந்துபோகாமல் எப்பொழுதும் ஜெபம்பண்ணவேண்டும் என்பதைக் குறித்து அவர்களுக்கு அவர் ஒரு உவமையைச் சொன்னார்:" (லூக்கா 18:1).

"ஒரு பட்டணத்திலே ஒரு நியாயாதிபதி இருந்தான்; அவன் தேவனுக்குப் பயப்படாதவனும் மனுஷரை மதியாதவனுமாயிருந்தான். அந்தப் பட்டணத்திலே ஒரு விதவையும் இருந்தாள்; அவள் அவனிடத்தில் போய்: எனக்கும் என் எதிராளிக்கும் இருக்கிற காரியத்தில் எனக்கு நியாயஞ்செய்யவேண்டும் என்று விண்ணப்பம் பண்ணினாள். வெகுநாள்வரைக்கும் அவனுக்கு மனதில்லாதிருந்தது. பின்பு அவன்: நான் தேவனுக்குப் பயப்படாமலும் மனுஷரை மதியாமலும் இருந்தும், இந்த விதவை என்னை எப்பொழுதும் தொந்தரவு செய்கிறபடியினால், இவள் அடிக்கடி வந்து என்னை அலட்டாதபடி இவளுக்கு நியாயஞ்செய்யவேண்டும் என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டான் என்றார்" (லூக்கா 18:2-5).

அவருடைய சீஷர்கள் இந்தக் குறிப்பைத் தவறாகப் புரிந்துகொண்டனர். இந்த உவமையிலிருந்து எடுத்துக்கொள்ள வேண்டிய பாடத்தைக்குறித்து இயேசு அவர்களுக்கு

விவரித்தார். "அந்தப்படியே தேவன் தம்மை நோக்கி இரவும் பகலும் கூப்பிடுகிறவர்களாகிய தம்மால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் விஷயத்தில் நீடிய பொறுமையுள்ளவராயிருந்து அவர்களுக்கு நியாயஞ்செய்யாமலிருப்பாரோ? சீக்கிரத்திலே அவர்களுக்கு நியாயஞ்செய்வார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆகிலும் மனுஷகுமாரன் வரும்போது பூமியிலே விசுவாசத்தைக் காண்பாரோ என்றார்" (லூக்கா 18:7-8).

இந்நேரத்தில், இயேசு ஜெபத்தை வலியுறுத்தக்கூடிய காரணமென்ன? இயேசுவின் வாழ்க்கையையும் அவருடைய மாதிரியையும் பின்பற்றுவதற்கு, ஜெபம் எவ்வளவு முக்கியமானது என்று இயேசு நன்கு அறிந்திருந்தார். இயேசு வல்லமையுள்ள ஜெப வாழ்க்கையைக் கொண்டிருந்தார். ஆகவே, "ஆண்டவரே, யோவான் தன் சீஷருக்கு ஜெபம்பண்ணப் போதித்ததுபோல, நீரும் எங்களுக்குப் போதிக்கவேண்டும் என்றான்" (லூக்கா 11:1). முடிவுகளை எடுப்பதற்கு முன்னும் ஜனங்களை சுகப்படுத்துவதற்கு முன்னும் இயேசு அடிக்கடி ஜெபித்தார். தேவனுடைய சித்தத்தைப் பின்பற்றுகிறோமா என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள இயேசு தொடர்ந்து ஜெபித்து, பரலோகப் பிதாவோடு நெருங்கிய ஐக்கியங்கொண்டிருந்தார். தேவனுக்காகப் பிரியமாக இருப்பதற்கு இதே வழியை சீஷர்கள் பின்பற்ற வேண்டும் என்று இயேசு விரும்பினார்.

ஜெபத்தைக்குறித்த பல பாடங்களை இயேசு தம்முடைய சீஷர்களுக்குக் கொடுத்தார். சீஷர்கள் பிசாசுகளைத் துரத்த முடியாமல் போனபோது, அவர்கள் ஜெபத்தின் குறைவினால் இதைச் செய்ய முடியவில்லை என்று இயேசு அவர்களிடம் கூறினார் (மத்தேயு 17:21). அதுபோல, ஜெபம் இன்றி, எந்தச் சூழ்நிலையிலும், தேவனுடைய சித்தத்தை வெற்றிகரமாகச் செய்ய முடியாது.

இயேசு 12 அப்போஸ்தலர்களைத் தெரிந்துகொண்டபோது, அவருடைய தேர்வு தேவனுடைய சித்தத்திற்கு இசைவாக இருக்க வேண்டியது மிக அவசியமாக இருந்தது. ஆகவே இயேசு "அந்நாட்களிலே, அவர் ஜெபம்பண்ணும்படி ஒரு மலையின்மேல் ஏறி, இராமுழுவதும் தேவனை நோக்கி: ஜெபம்பண்ணிக்கொண்டிருந்தார். பொழுது விடிந்தபோது, அவர் தம்முடைய சீஷர்களை வரவழைத்து, அவர்களில் பன்னிரண்டுபேரைத் தெரிந்து கொண்டு, அவர்களுக்கு அப்போஸ்தலர் என்று பேரிட்டார்" (லூக்கா 6:12-13).

பூமிக்குரிய ஊழியத்தின் இறுதி மணி நேரத்தில் தன்னை ஆயத்தப்படுத்துவதற்கும், தன்னை பலப்படுத்தி வழிநடத்துவதற்கும் இயேசு கெத்செமனே தோட்டத்தில் பிதாவினிடம் ஜெபித்தார். "நான் ஜெபம்பண்ணுமளவும் இங்கே உட்கார்ந்திருங்கள்" (மாற்கு 14:32) என்று அவர் சீஷர்களிடம் கூறினார். மரணத்தைக்குறித்து அவர் வியாகுலப்படும்போது அவர் ஜெபித்தார். "அப்பா பிதாவே, எல்லாம் உம்மாலே கூடும்; இந்தப் பாத்திரத்தை என்னிடத்திலிருந்து எடுத்துப்போடும், ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்றார்" (மாற்கு 14:36).

இதற்கு எதிரிடையாக சேவல் கூவும் முன்னே என்னை மூன்று தரம் மறுதலிப்பாய் என்று இயேசு பேதுருவை எச்சரித்தபோதிலும் பேதுரு ஜெபிக்கவில்லை. இயேசு ஜெபித்தபின் அவர் சீஷர்களிடத்தில் வந்தபோது, பேதுருவையும் மற்ற அப்போஸ்தலர்களையும், நித்திரை செய்வதைக் கண்டு, "சீமோனே, நித்திரைபண்ணுகிறாயா? ஒரு மணிநேரம் நீ விழித்திருக்கக்கூடாதா? நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள். ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பலவீனமுள்ளது" (மாற்கு 14:37-38) என்று கூறினார்.

பூமிக்குரிய ஊழியத்தின் இறுதி மணி நேரங்களில் ஜெபமே இயேசுவை வெற்றியடையச் செய்தது. அதே நேரத்தில் ஜெபத்தின் குறைவினால், பேதுருவை மிகப் பெரிய தோல்வியை அடையச் செய்தது.

இதில் நமக்குள்ள பாடமென்ன? புது சிருஷ்டிகளாக நம்மை வெற்றியடையச் செய்வது - விடாமுயற்சியோடு கூடிய ஜெபமே. தேவன் நம்முடைய ஜெபங்களுக்குப் பதிலளிப்பாரென்று நாம் அவர்மேல் வைத்திருக்கும் விசுவாசமே இந்த விடாமுயற்சிக்கு ஆதாரமாக உள்ளது. நாம், "இடைவிடாமல் ஜெபிக்கவேண்டும்" (1தெசலோனிக்கேயர் 5:18). "நாம் விடாமுயற்சியோடு ஜெபிக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். மற்றும் நம்முடைய விடாமுயற்சி நம்முடைய விருப்பத்தின் ஆழத்தை அளவிட்டுக் குறிப்பிடக்கூடியதாக இருக்கிறது" என்று சகோதரர் ரஸல் R2865-இல் கூறுகிறார். நம்முடைய முழு வாழ்க்கையையும் ஜெபத்திற்கு அர்ப்பணித்து அதற்குப்பின் இயேசு கிறிஸ்துவைப்போல, தேவனுடைய பதிலுக்காகக் காத்திருப்பதும், இந்த விடாமுயற்சிக்குள் அடங்கும். "இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள், ஸ்தோத்திரத்துடன் ஜெபத்தில் விழித்திருங்கள்" (கொலோசெயர் 4:2).

நம்முடைய ஜெபங்களுக்கு தேவன் பதிலளிப்பார் என்ற விசுவாசமே நாம் விண்ணப்பிக்கக்கூடிய காரியத்தைப் பெற்றுக்கொள்வதற்கான திறவுகோலாக உள்ளது. "ஆதலால், நீங்கள் ஜெபம்பண்ணும் போது எவைகளைக் கேட்டுக்கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக்கொள்வோம் என்று விசுவாசியுங்கள், அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும்" (மாற்கு 11:24-25). இந்த வசனத்தை கவனித்துப் பாருங்கள். "நீங்கள் கேட்டதைப் பெற்றுக்கொண்டீர்கள்" என்று நம்புங்கள், அப்போது பெற்றுக்கொள்வீர்கள் என்று கூறுகிறார். கூடுதலாக யாக்கோபு, "அவன் எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கக்கடவன்;" (யாக்கோபு 1:6) என்று கூறுகிறார். தேவன் அவருடைய ஜெபங்களுக்குப் பதிலளிப்பார் என்று இயேசு அதிகமாக நம்பினார். இயேசுவைப்போல நாமும் நம்பிக்கையுள்ளவர்களாக இருக்க வேண்டும். "எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம்பண்ணி, அதன்பொருட்டு மிகுந்த மனஉறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக்கொண்டிருங்கள்" (எபேசியர் 6:18 ) என்று பவுல் எழுதுகிறார்.

**இயேசுவின் இடது வலது பக்கங்களில் அமருதல்**

இயேசு தம்முடைய சீஷர்களுக்கு இவ்வளவு காரியங்களைச் செல்லியிருந்தாலும், அவர்கள் எருசலேமுக்குப் போனபோது, அங்கு இயேசு தம்முடைய இராஜ்யத்தை ஸ்தாபிப்பார் என்று எதிர்பார்த்தார்கள். இந்த எதிர்பார்ப்பினிமித்தம், இராஜ்யத்தில் அவர்களுக்கு உண்டாகப்போகும் பதவிகளைக்குறித்த பேச்சுக்கள் முக்கியத்துவம் பெற்றது.

"அப்பொழுது செபெதேயுவின் குமாரராகிய யாக்கோபும் யோவானும் அவரிடத்தில் வந்து: போதகரே, நாங்கள் கேட்டுக்கொள்ளப்போகிறதை நீர் எங்களுக்குச் செய்யவேண்டுமென்று விரும்புகிறோம் என்றார்கள். அவர் அவர்களை நோக்கி: நான் உங்களுக்கு என்ன செய்யவேண்டுமென்று விரும்புகிறீர்கள் என்று கேட்டார். அதற்கு அவர்கள்: உமது மகிமையிலே, எங்களில் ஒருவன் உமது வலது பாரிசத்திலும், ஒருவன் உமது இடதுபாரிசத்திலும் உட்கார்ந்திருக்கும்படி எங்களுக்கு அருள்செய்யவேண்டும் என்றார்கள்" (மாற்கு 10:35-37).

யாக்கோபு மற்றும் யோவானின் தாயாகிய சலோமி, இயேசுவினிடத்தில் ஒரு விண்ணப்பம் வைத்தாள் என்று மத்தேயு 20:21-22 வசனங்கள் கூறுகிறது. அதற்குப்பதிலாக, அவருடைய பலியின் மரணத்தைக்குறித்த பாடத்தை எடுத்தார். அதற்குப்பின் அதை சீஷர்களுக்குப் பொருத்தினார். அவர்கள் இயேசுவின் ஞானஸ்நானத்திலும் அவருடைய பாத்திரத்திலும் பங்கெடுக்க வேண்டியதைப்பற்றியும், அதற்குப்பின் இராஜ்யத்தில் அவரோடு பங்கு பெறுவதைப்பற்றியும் அவர் கூறினார். "இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் கேட்டுக்கொள்ளுகிறது இன்னது என்று உங்களுக்கே தெரியவில்லை. நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிக்கவும், நான் பெறும் ஸ்நானத்தை நீங்கள் பெறவும், உங்களால் கூடுமா என்றார். அதற்கு அவர்கள்: கூடும் என்றார்கள். இயேசு அவர்களை நோக்கி: நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிப்பீர்கள், நான் பெறும் ஸ்நானத்தையும் நீங்கள் பெறுவீர்கள். ஆனாலும் என் வலதுபாரிசத்திலும் என் இடதுபாரிசத்திலும் உட்கார்ந்திருக்கும்படி எவர்களுக்கு ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிறதோ அவர்களுக்கேயல்லாமல், மற்றொருவருக்கும் அதை அருளுவது என் காரியமல்ல என்றார்" (மாற்கு 10:38-40).

இயேசுவின் இராஜ்யத்தில் என்ன காரியங்கள் சீஷர்களுக்குத் தொடர்புடையதாக இருக்கும் என்று யாக்கோபும், யோவானும் அவர்களின் தாயாகிய மரியாளும் அறியாதிருந்தார்கள். ஆனால், பாத்திரம் மற்றும் ஸ்நானத்தை அடையாளமாகப் பயன்படுத்தி, இயேசு இதற்கான பதிலை அளித்தார். இந்தப் பாத்திரம் இயேசுவின் அனுபவங்களைச் சித்தரிக்கிறது. ஞானஸ்நானம், மரிக்கும்வரையில் பலி செலுத்தக்கூடிய இயேசுவின் உடன்படிக்கையை அடையாளப்படுத்துகிறது. யாக்கோபு, யோவான் மற்றும் எந்த சீஷனானாலும் சரி, இயேசுவோடு இராஜ்யத்தில் இருப்பதற்கு இரண்டிலும் பங்கெடுக்க வேண்டும்.

யோவான் 18:11-ஆம் வசனத்தில் சொல்லப்பட்டிருக்கும் அதே பாத்திரத்தைப்பற்றி இயேசு இங்கே குறிப்பிடுகிறார். "அப்பொழுது இயேசு பேதுருவை நோக்கி: பிதா எனக்குக் கொடுத்த பாத்திரத்தில் நான் பானம்பண்ணாதிருப்பேனோ என்றார்." நம்முடைய உத்தமத்தையும், சத்தியம் மற்றும் நீதியின் கோட்பாடுகளுக்கு நம்முடைய கீழ்ப்படிதலையும் நிரூபித்துக் காண்பிக்கும்படி தேவன் இயேசுவுக்குக் கொடுத்ததுபோல நமக்கும் ஒரு பாத்திரத்தைக் கொடுத்திருக்கிறார். இதனால் நாமும் இரக்கமுள்ள மெல்கிசேதேக்கின் முறைமையின்படி ஆசாரியர்களாக

வளர்ச்சியடையலாம். இந்த உலகம் மற்றும் சாத்தானின் உபத்திரவங்கள் இந்த அனுபவங்களுக்குள் அடங்கும்.

"நீங்கள் உலகத்தாராயிருந்தால், உலகம் தன்னுடையதைச் சிநேகித்திருக்கும்; நீங்கள் உலகத்தாராயிராதபடியினாலும், நான் உங்களை உலகத்திலிருந்து தெரிந்து கொண்டபடியினாலும், உலகம் உங்களைப் பகைக்கிறது. ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்லவென்று நான் உங்களுக்குச் சொன்ன வார்த்தையை நினைத்துக்கொள்ளுங்கள். அவர்கள் என்னைத் துன்பப்படுத்தினதுண்டானால், உங்களையும் துன்பப்படுத்துவார்கள்; அவர்கள் என் வசனத்தைக் கைக்கொண்டதுண்டானால், உங்கள் வசனத்தையும் கைக்கொள்ளுவார்கள்" (யோவான் 15:19-20). இயேசுவோடு அவருடைய இராஜ்யத்தில் இருப்பதற்கு, அவமானம், பாடுகள், உபத்திரவத்தின் கசப்பான இறுதி நிலையையும் இயேசுவைப் போல அந்தப் பாத்திரத்திலிருந்து நாம் பருக வேண்டும்.

மேலும் இயேசு லூக்கா 12:50-ஆம் வசனத்தில் சொல்லப்பட்ட ஞானஸ்நானத்தைப்பற்றி, அங்குக் குறிப்பிட்டார். "ஆகிலும் நான் முழுகவேண்டிய ஒரு ஸ்நானமுண்டு, அது முடியுமளவும் எவ்வளவோ நெருக்கப்படுகிறேன்." யோர்தானிலிருந்து சிலுவை வரைக்கும் - நம்முடைய ஆண்டவரின் பலியின் ஜீவியத்தை இது விவரிக்கிறது. இந்த உலகத்திற்காக இயேசு தம்முடைய பூமிக்குரிய ஜீவனைப் பலி செலுத்தினார். "நானே வானத்திலிருந்திறங்கின ஜீவ அப்பம்; இந்த அப்பத்தைப் புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான்; நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே என்றார்" (யோவான் 6:51). இயேசுவோடு ஆட்சி செய்வதற்கு முன் யாக்கோபு, யோவான் மற்றும் எந்த சீஷனானாலும் சரி, மரணத்திற்குள்ளான ஸ்நானத்தில் பங்கெடுக்க வேண்டும்.

ரோமர் 6:3-5-ஆம் வசனங்களில், பவுல் இதே காரியத்தைக் குறிப்பிடுகிறார். "கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம்பண்ணப்பட்டோம். ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம்." இயேசுவின் இராஜ்யத்தில் பங்கு பெறுவதற்கு, அவருடைய மரணத்திற்குள் பங்கு பெற வேண்டும்.

"மற்றப் பத்துப்பேரும் அதைக்கேட்டு, அந்த இரண்டு சகோதரர்பேரிலும் எரிச்சலானார்கள்" (மத்தேயு 20:24). இயேசுவின் பூமிக்குரிய ஊழியத்தின்போது இயேசுவின் சீஷர்களைப் பாதிப்புக்குள்ளாக்கிய - போட்டியிடும் ஆவியையும், பேராசையின் ஆவியையும் இங்குக் காணலாம். பஸ்கா அனுசரிப்பதற்காக மேலறையில் அவர்கள் கூடினபோதும், "அன்றியும் தங்களில் எவன் பெரியவனாயிருப்பான் என்று அவர்களுக்குள்ளே வாக்குவாதம் உண்டாயிற்று" (லூக்கா 22:24).
இயேசு இந்தப் போட்டியிடும் ஆவியைக்குறித்து அறிந்திருந்ததினால், பாதிக்கப்பட்ட அந்த 10 பேரை நோக்கி, "உங்களுக்குள்ளே அப்படி இருக்கலாகாது; உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்குப் பணிவிடைக்காரனாயிருக்கக்கடவன். உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவன். அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ் செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்" (மத்தேயு 20:26-28) என்று கூறினார். தாழ்மை மற்றும் ஊழியத்தைக் குறித்தப் பாடங்களை இயேசு கற்பித்தார். "நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளைகளைப் போல் ஆகாவிட்டால், பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆகையால் இந்தப் பிள்ளையைப்போலத் தன்னைத் தாழ்த்துகிறவன் எவனோ, அவனே பரலோகராஜ்யத்தில் பெரியவனாயிருப்பான்" (மத்தேயு 18:3-4). மேல் வீட்டறையில் சீஷர்களின் பாதங்களைக் கழுவி, தாழ்மையைக் குறித்தப் பாடத்தைக் கற்பித்தார்.
"ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால், நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள். நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன். நீங்கள் இவைகளை அறிந்திருக்கிறபடியினால், இவைகளைச் செய்வீர்களானால், பாக்கியவான்களாயிருப்பீர்கள்" (யோவான் 13:14-15,17).

பலியின் ஜீவியம், மனத்தாழ்மை மற்றும் ஊழியத்திற்கு இயேசுவின் மாதிரி - நமக்கும் நேரடியாக பாடமாக வைக்கப்பட்டுள்ளது. நாம் பின்பற்ற வேண்டிய மாதிரியை இயேசு நமக்கு முன் வைத்திருக்கிறார். "ஏனென்றால், எந்த மிருகங்களுடைய இரத்தம் பாவங்களினிமித்தமாகப் பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரதான ஆசாரியனாலே கொண்டுவரப்படுகிறதோ, அந்த மிருகங்களின் உடல்கள் பாளயத்துக்குப் புறம்பே சுட்டெரிக்கப்படும். அந்தப்படியே, இயேசுவும் தம்முடைய சொந்த இரத்தத்தினாலே ஜனத்தைப் பரிசுத்தஞ்செய்யும்படியாக நகரவாசலுக்குப் புறம்பே பாடுபட்டார். ஆகையால், நாம் அவருடைய நிந்தையைச் சுமந்து, பாளயத்துக்குப் புறம்பே அவரிடத்திற்குப் புறப்பட்டுப்போகக்கடவோம்" (எபிரெயர் 13:11-13) என்று அப்போஸ்தலர் பவுல் எழுதுகிறார்.

ஆண்டவரின் சரீர அங்கத்தினராகிய நாம் அவருடைய பலியிலும், நீதிமானாக்கப்பட்ட நிலையை மரணத்தில் பலி செலுத்துவதிலும் நாம் பங்கெடுப்போம். இயேசுவைப்போல நாமும் தாழ்மைப்படுவோம் (பிலிப்பியர் 2:5-8).

இயேசுவைப்போல நாமும் தாழ்மையைத் தரித்துக்கொள்வோம் (1 பேதுரு 5:5-6). இயேசுவைப்போல அன்பினால் ஒருவருக்கொருவர் ஊழியஞ்செய்வோம். "சகோதரரே, நீங்கள் சுயாதீனத்திற்கு அழைக்கப்பட்டீர்கள், இந்தச் சுயாதீனத்தை நீங்கள் மாம்சத்திற்கேதுவாக அநுசரியாமல், அன்பினாலே ஒருவருக்கொருவர் ஊழியஞ்செய்யுங்கள்" (கலாத்தியர் 5:13). "அவர் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம்; நாமும் சகோதரருக்காக ஜீவனைக்கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம்" (1 யோவான் 3:16).

**பார்வையற்ற பர்திமேயு சுகமாக்கப்படுதல்**

இயேசு எரிகோவுக்கு வந்தபோது, பிச்சை எடுத்துக்கொண்டிருந்த ஒருவரை எதிர்பாராமல் சந்தித்தார். "ஜனங்கள் நடக்கிற சத்தத்தை அவன் கேட்டு, இதென்ன என்று விசாரித்தான். நசரேயனாகிய இயேசு போகிறார் என்று அவனுக்கு அறிவித்தார்கள். அப்பொழுது அவன்: இயேசுவே, தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும் என்று கூப்பிட்டான். முன் நடப்பவர்கள் அவன் பேசாமலிருக்கும்படி அவனை அதட்டினார்கள். அவனோ: தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும் என்று மிகவும் அதிகமாய்க் கூப்பிட்டான். இயேசு நின்று, அவனைத் தம்மிடத்தில் கொண்டுவரும்படி சொன்னார். அவன் கிட்டவந்தபோது, அவர் அவனை நோக்கி: நான் உனக்கு என்னசெய்யவேண்டும் என்றிருக்கிறாய் என்று கேட்டார். அதற்கு அவன்: ஆண்டவரே, நான் பார்வையடையவேண்டும் என்றான். இயேசு அவனை நோக்கி: நீ பார்வையடைவாயாக, உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்றார். உடனே அவன் பார்வையடைந்து, தேவனை மகிமைப்படுத்திக்கொண்டே, அவருக்குப் பின்சென்றான். ஜனங்களெல்லாரும் அதைக் கண்டு, தேவனைப் புகழ்ந்தார்கள்" (லூக்கா 18:36-43).

"தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி, அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான்" (2 கொரிந்தியர் 4:4). சுவிசேஷ யுகத்தில், தங்களுடைய ஆவிக்குரிய பார்வையற்ற நிலையை உணர்ந்தவர்களாக சுகம் பெறுவதற்கு இயேசுவிடம் வருபவர்களுக்கு இவர் ஒரு சிறப்பான மாதிரியாக இருக்கிறார்.

இவர் இயேசுவைக்குறித்து எவ்வாறு அறிந்துகொண்டார்? அவர் இயேசுவை மேசியா என்று அறிந்துகொண்டதினால் அவரை, "தாவீதின் குமாரனே" என்று அழைத்தார். இயேசு செய்திட்ட சில அற்புதங்களை அவர் கேள்விப்பட்டிருக்க வேண்டும். (1) இயேசு தான் மேசியா என்றும் மற்றும் (2) இயேசு அவருடைய கண்களை சொஸ்தமாக்குவார் என்றும் விசுவாசித்தார்.

இவர் இயேசுவை அழைத்தபோது, அங்கிருந்த ஜனக்கூட்டம் அவரை ஏசியது ஏன்? மிகப் பெரிய ஆசிரியராகிய இயேசு சாலையோரத்தில் அமர்ந்திருக்கும் பிச்சைக்காரர்களால் தொந்தரவு செய்யப்படக்கூடாது என்று அவர்கள் எண்ணியிருக்கலாம். உதவி கேட்டு அவரை அழைத்த அனைவருக்கும் இயசே சுகமளித்தார் என்பதை ஜனங்கள் மறந்து போனார்கள். ஆவிக்குரிய பார்வையற்ற நிலையிலுள்ளவர்களின் அழைப்புக்கு, நாம் பெற்றிருக்கும் தனிப்பட்ட பொறுப்புகளை நமக்கு இது நினைப்பூட்டுகிறது.

தன்னைக் கடிந்துகொண்ட ஜனங்களிடம் அவர் கவனம் செலுத்தவில்லை. அதற்குப்பதிலாக அவர் அதிகமாகச் சத்தமிட்டார். இயேசுவின் கவனத்தை தன் வசப்படுத்தினால் மட்டுமே அவருடைய பார்வையற்ற நிலை சுகமளிக்கப்படும் என்ற சூழ்நிலை ஏற்பட்டது. அந்தக் குருடனுடைய விடாமுயற்சி அவருடைய விசுவாசத்தை செயலாற்றியது. அதுவே இயேசுவின் கவனத்தை ஈர்த்தது. அவருடைய விசுவாசத்தைப் புரிந்தவராக, அந்தப் பிச்சைக்காரனை இயேசு அழைத்து,

"உனக்கு என்ன வேண்டும்" என்று கேட்டார். ஐசுவரியமா? கனமா? மற்ற தற்காலிகமான ஆசீர்வாதங்களா? இல்லை. அவர் பார்வையைப் பெற விரும்பினார். இயேசுவினிடத்தில் அவர் கொண்டிருந்த விசுவாசம் உண்மை மற்றும் அவர் கொண்டிருந்த விடாமுயற்சிக்குப் பலனளிக்கப்பட்டது. இயேசு அவரை சொஸ்தமாக்கினார்.

அவர் குணமடைந்தபின் இயேசுவின் சீஷராகிய அவர், பெற்ற சுகத்திற்காக நம்முடைய ஆண்டவரைத் துதித்து, மகிழ்ந்து, அவருடைய நேர்மையை வெளிபடுத்தினார். இயேசு தான் மேசியா என்பதற்கான உயிர் வாழும் சாட்சியாக, லாசருவைப்போல இவரும் இருந்தார். இயேசுவின் நாட்களில் அநேகர் பார்வையற்றவராக இருந்தார்கள். ஆனால் வெகு சிலரே நம்முடைய ஆண்டவரிமிருந்து பார்வையைப் பெற்றுக்கொண்டனர். அதற்குத் தேவைப்படும் விசுவாசத்தை மற்றவர்கள் பெறவில்லை. சுவிசேஷ யுகத்தில் அநேகர் ஆவிக்குரிய விதத்தில் பார்வையற்றவர்களாக இருக்கிறார்கள். இவரைப்போல சிலர் மட்டுமே குணமடைகிறார்கள். மற்றவர்களோ, போதுமான விசுவாசம் இல்லாதவர்களாகக் காணப்படுகிறார்கள்.

நமக்குண்டான பாடம் என்ன? நாம் அவரைப்போல நம்முடைய பார்வையற்ற நிலையிலிருந்து சொஸ்மாக்கப்பட்டிருக்கிறோம். மேசியாவாகிய நம்முடைய ஆண்டவரையும் தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தைப்பற்றிய சத்தியத்திற்கும், நம்முடைய கண்கள் திறக்கப்பட்டிருப்பதினால் நாம் இயேசுவுக்கு நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும். இவருடைய மாதிரியைப் பின்பற்றுவோம். (1) இயேசுவைப் பின்பற்றுவோம். (2) நம்முடைய பார்வையற்ற கண்களுக்கு அவர் பார்வைக் கொடுத்ததினால் அவரைப் போற்றித்துதிப்போம். இப்படிச் செய்வதினால், நம்மோடு தொடர்பு வைக்கக்கூடிய அனைவருக்கும் நம்முடைய ஒளி பிரகாசிக்கும்.

**ஆரவாரத்துடன் எருசலேமுக்குள் பிரவேசித்தல்**

இயேசு நீசான் 10-ஆம் தேதி எருசலேமுக்குள் நுழைந்தார். அந்த நாளில் பஸ்காவுக்காக ஆடு தெரிந்தெடுக்கப்பட்டது (யாத்திராகமம் 12:3-5). இயேசு எருசலேமுக்குள் நுழையும்போது, சகரியா 9:9-ஆம் வசனம் நிறைவேறியது. "சீயோன் குமாரத்தியே, மிகவும் களிகூரு; எருசலேம் குமாரத்தியே, கெம்பீரி; இதோ, உன் ராஜா உன்னிடத்தில் வருகிறார்; அவர் நீதியுள்ளவரும் இரட்சிக்கிறவரும் தாழ்மையுள்ளவரும், கழுதையின்மேலும் கழுதைக்குட்டியாகிய மறியின்மேலும் ஏறி வருகிறவருமாயிருக்கிறார்." மேசியாவாகவும், இராஜாவாகவும் இயேசு தன்னை எருசலேமுக்கு முன் நிறுத்தினார். அவரைக்குறித்துச் சொல்லப்பட்ட எல்லா தீர்க்கதரிசனங்களையும் நிறைவேற்றி தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிந்து, அவர் இஸ்ரயேல் இராஜா என்று அவர் தம்மைக் காண்பித்து, யூதர்கள் அவரைப் புறக்கணிக்க வழியில்லாதபடிக்கு அனைத்தையும் செய்தார்.

இயேசு எருசலேமுக்குள் நுழைந்தபோது, அவர் சவாரி செய்ய வேண்டிய கழுதையைப் பெற்றுக்கொள்ளுவதற்கு, இயேசு தம்முடைய வல்லமையைச் செயலாற்றினார் (மத்தேயு 21:1-9). அந்தக் கழுதையை எடுத்துச் செல்லும்படி அதன் உரிமையாளர் அனுமதிப்பார் என்றும் அவர் தீர்க்கதரிசனம் உரைத்தார். இஸ்ரயேலின் இராஜாக்கள் வெள்ளை நிற கழுதைகளில் சவாரி செய்வது வழக்கமாக இருந்ததினால் அந்தக் கழுதை வெள்ளை நிறத்தில் இருந்திருக்க வேண்டும் என்று சகோதரர் ரஸல் கருதுகிறார். தொடர்ந்து அவருடைய கட்டுரையை வாசிக்கும்போது - "இந்தத் தீர்க்கதரிசனம் யூதர்கள் மத்தியில் பிரபலமாக இருந்ததினாலும், பல நூற்றாண்டுகளாக மேசியாவுக்காகக் காத்திருந்ததினாலும், நம்முடைய ஆண்டவர் சொல்லர்த்தமாகவே, தீர்க்கதரிசிகள் முன் அறிவித்ததை நடப்பிக்க வேண்டியதாக இருந்தது" (R3850).

ஆண்டவர் எருசலேமுக்குள் பிரவேசிக்கக்கூடிய காரியத்தை நாம் மூன்று அம்சங்களாகக் காணலாம்.

* அவரை வரவேற்ற சீஷர்களும் மற்றும் ஜனக்கூட்டத்தார்களும் மேசியா வருவார் என்ற எதிர்பார்ப்பைப் பெற்றிருந்தார்கள். இயேசு வெகு சீக்கிரத்தில் இராஜ்யத்தை ஸ்தாபிப்பார் என்று அவர்கள் எதிர்பார்த்தார்கள்.

* ஏரோது, பிலாத்து மற்றும் யூத தலைவர்கள் இந்த ஊர்வலத்தை கவனத்தில் கொண்டார்கள். யூத மத தலைவர்கள் இயேசுவால் பயமுறுத்தப்படுவதாக எண்ணினார்கள். அங்கிருந்த ஜனக்கூட்டங்கள் அதிக உற்சாகத்துடன் அவரை வரவேற்றதினால், இவர்களைக்குறித்த அச்சம் அவர்களுக்கு உண்டானது.

* நம்முடைய ஆண்டவர், தூதர்கள் மற்றும் சபைக்கு அவருடைய வருகை தூர தேசத்திலிருந்து திரும்பி அவருடைய இராஜ்யத்தை ஸ்தாபிக்கக்கூடிய அவருடைய மகிமையான இரண்டாம் வருகைக்கு நிழலாக இருந்தது.

எருசலேமிலே பஸ்கா அனுசரிப்புக்கு கிட்டதட்ட ஒரு மில்லியன் யூதர்கள் கூடியிருந்ததாக சகோதரர் ரஸல் கருதுகிறார். இவர்களனைவரும்,

இயேசுவை தங்களுடைய இராஜாவாக ஏற்றுக்கொண்டு ஆர்ப்பரித்தார்களா? இயேசு எருசலேமுக்குள் நுழைந்தபோது இரண்டு வகுப்பார் அங்கு இருந்திருக்க வேண்டும். (1) அவருக்கு முன் நடப்பாரும் (2) அவருக்குப்பின் நடப்பாரும். அவருக்குப் பின் சென்றவர்கள் அவருடைய சீஷர்களாக இருக்க வேண்டும் - சொல்லப்போனால் எரிகோவிலிருந்து அவரைப் பின் தொடர்ந்திருக்க வேண்டும். இயேசுவைச் சந்திப்பதற்கு எருசலேமிலிருந்து வந்தவர்கள் அவருக்கு முன் நடந்திருக்க வேண்டும் என்று யோவான் கூறுகிறார் (யோவான் 12:12-13).

இயேசுவைத் தங்களுடைய இராஜாவாக கனப்படுத்தும்படியாக அந்த ஜனக்கூட்டம், ஒலிவ மலையிலிருந்து எருசலேமை நோக்கி வருகையில், "திரளான கூட்டமாகிய சீஷரெல்லாரும் தாங்கள் கண்ட சகல அற்புதங்களையுங்குறித்துச் சந்தோஷப்பட்டார்கள்" (லூக்கா 19:37).

"முன்நடப்பாரும் பின்நடப்பாருமாகிய திரளான ஜனங்கள்: தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா! கர்த்தரின் நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர், உன்னதத்திலே ஓசன்னா" (மத்தேயு 21:9) என்று ஜனங்கள் ஆர்ப்பரித்தார்கள். இயேசுவை அவர்களின் இராஜாவாகக் கண்டடைந்ததினால், "ஓசன்னா, கர்த்தருடைய நாமத்தினாலே வருகிற இஸ்ரவேலின் ராஜா ஸ்தோத்திரிக்கப்பட்டவர்" (யோவான் 12:13) என்று அவர்கள் ஆர்ப்பரித்தார்கள். இயேசுவின் கீழ் தாவீதின் இராஜ்யம் மறுபடியும் ஸ்தாபிக்கப்படும் என்று தங்களுடைய எதிர்பார்ப்புகளை வெளிப்படுத்தும்படியாக, "கர்த்தரின் நாமத்தினாலே வருகிற நம்முடைய பிதாவாகிய தாவீதின் ராஜ்யம் ஆசீர்வதிக்கப்படுவதாக; உன்னதத்திலே ஓசன்னா என்று சொல்லி" (மாற்கு 11:10) ஆர்ப்பரித்தார்கள். கிறிஸ்துவின் பூமிக்குரிய இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதை எதிர்பார்த்த ஜனங்கள், "கர்த்தருடைய நாமத்தினாலே வருகிற ராஜா ஸ்தோத்திரிக்கப்பட்டவர், பரலோகத்திலே சமாதானமும் உன்னதத்திலே மகிமையும் உண்டாவதாக என்று மிகுந்த சத்தத்தோடே தேவனைப் புகழ்ந்தார்கள்" (லூக்கா 19:38).

இதற்குப் பரிசேயர்கள் எவ்வாறு பதிலளித்தார்கள்? "கூட்டத்திலிருந்த பரிசேயரில் சிலர் அவரை நோக்கி: போதகரே, உம்முடைய சீஷரை அதட்டும் என்றார்கள்" (லூக்கா 19:39). "அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக: இவர்கள் பேசாமலிருந்தால் கல்லுகளே கூப்பிடும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" (லூக்கா 19:40) என்றார். மேசியாவாகிய தங்களுடைய இராஜா வருகிறார் என்பதை எருசலேமுக்கு அறிவிக்க வேண்டியதாக இருந்தது. சீஷர்கள் இதை அறிவிக்காவிட்டால் இந்தக் கல்லுகள் கூப்பிட்டுச் சொல்லும் என்று சொன்னார். அந்த நகரம், இயேசுவின் வருகையை எவ்வாறு ஏற்றுக்கொண்டது? "அவர் எருசலேமுக்குள் பிரவேசிக்கையில், நகரத்தார் யாவரும் ஆச்சரியப்பட்டு, இவர் யார்? என்று விசாரித்தார்கள். அதற்கு ஜனங்கள்: இவர் கலிலேயாவிலுள்ள நாசரேத்திலிருந்து வந்த தீர்க்கதரிசியாகிய இயேசு என்றார்கள்" (மத்தேயு 21:10-11). இவ்வளவு ஆதாரங்கள் இருந்தபோதிலும், அநேக யூதர்கள் தங்களுடைய தலைவராகிய இயேசுவைப் புறக்கணித்தார்கள்!

இயேசு எருசலேமுக்குள் நுழைந்தார் என்பதில் நமக்கென்ன பாடம்? முதலாவது, இயேசு நம்முடைய இராஜா, அவர் தம்முடைய இராஜ்யத்தை ஸ்தாபிக்க திரும்பி வந்திருக்கிறார். முதலாம் வருகையில் மாம்ச இஸ்ரயேலர்களுக்காக இயேசு தம்மை வெளிப்படுத்தினதுபோல, 1874-ஆம் வருஷம் ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுக்கு அவர் தம்மை வெளிப்படுத்தினார். பெயரளவிலான ஆவிக்குரிய கிறிஸ்தவர்களைப்போல நாமிராமல், நம்முடைய இராஜாவாகிய மேசியாவை நாம் கண்டுபிடித்து, அவரை ஏற்றுக்கொண்டும் இருக்கிறோம். ஆகவே, நாம் அவருடைய மாதிரியைப் பின்பற்றி, அவருடைய பிரமாணங்களைக் கைக்கொள்ளுவோம். "என் கற்பனைகளைப் பெற்றுக்கொண்டு அவைகளைக் கைக்கொள்ளுகிறவனே என்னிடத்தில் அன்பாயிருக்கிறான், என்னிடத்தில் அன்பாயிருக்கிறவன் என் பிதாவுக்கு அன்பாயிருப்பான்; நானும் அவனில் அன்பாயிருந்து, அவனுக்கு என்னை வெளிப்படுத்துவேன் என்றார்" (யோவான் 14:21). இதனிமித்தம் நாம் அவரை உண்மையில் நேசிக்கிறோம் என்பதைக் காண்பிக்கலாம்.

இரண்டாவதாக, ஆண்டவருடைய வல்லமையுள்ள செயல்களைக் கண்டு சீஷர்கள் தேவனைப் போற்றியதுபோல நாமும் தேவனையும், இயேசுவையும் அவர் செய்கிற பலத்த கிரியைகளுக்காகவும், வாக்குத்தத்தம் செய்யப்பட்ட பூமிக்குரிய இராஜ்யத்திற்காகவும் அவரைப் போற்றித் துதிப்போம். நம்முடைய வார்த்தைகளினாலும், கிரியைகளினாலும், இயேசுவை நம்முடைய மேசியா என்று நம்முடைய வாழ்க்கைப் பாதையில் நாம்

அவருடைய சீஷர்களாக நடந்து நம்முடைய துதித்தலை வெளிப்படுத்துவோமாக.

இயேசுவை நமக்குச் சிறந்த மாதிரியாகக் கொடுத்த தேவனுக்கு நாம் நன்றிகளை ஏறெடுப்போம். தேவனுடைய சித்ததைச் செய்வதில் இயேசு கொண்டிருந்த தைரியத்தையும், அவருடைய அர்ப்பணிப்பையும் பின்பற்றி, நம்முடைய பலியின் மரணத்தை நோக்கி தலை நிமிர்ந்தவர்களாக நடை போடுவோம். நம்முடைய ஜெபங்களுக்குத் தேவன் பதிலளிப்பார் என்று எதிர்பார்க்கும் விசுவாசத்தோடு இயேசுவைப்போல நாமும் ஜெபத்தில் உறுதியாக இருப்போம். தாழ்மையிலும், ஒருவருக்கொருவர் ஊழியம் செய்வதிலும், ஒருவருக்காக மற்றவர்கள் ஜீவனைக் கொடுக்கக்கூடிய அன்பைச் செலுத்துவதிலும் இயேசுவின் மாதிரியைப் பின்பற்றுவோம். அந்தப் குருடனைப்போல, சத்தியத்திற்காக நம்முடைய கண்கள் திறக்கப்பட்டதை எண்ணி தேவனைப் புகழுவோம். நம்மைச் சுற்றியிருப்போருக்கும், இயேசு திரும்பி வந்து விட்டார் என்று பிரகடனம் செய்து அவர் தான் மேசியாவாகிய நம்முடைய இராஜா என்று வெளிப்படுத்தி, இயேசுவைப் பின்பற்றி, அவருடைய கற்பனைகளைக் கடைபிடித்துத் தொடர்ந்து அவருடைய நாமத்தைத் தொழுதுகொள்வோமாக.

**மறைக்கப்பட்ட சிலுவை**

ஓ, தெரிந்தெடுக்கப்பட்ட மூன்று சீடர்களே, ஒருமணி நேரம் கூட உங்களால் விழித்திருந்தே
இராஜாவைப்பார்த்துக்கொள்ள முடியாதா?
அந்த கெத்செமனேயின் காரிருள் வேளையிலே, நீவீர் அந்த பாரமான சிலுவை தன்னின் பாரம்
குறைக்க முயலவில்லையே, பற்றி எரியும் பெருந்துன்பம் தன்னை பங்கு போட்டுக்கொள்ள
மனமில்லையோ?
ஐயகோ, ஐயகோ, உங்கள் கண் இமைகள் பெருந்தூக்கத்தினாலே
கனத்துவிட்டதே, நீஙகள் எல்லாம் களைப்பினாலே பெருந்தூக்கத்தினாலே
கனத்துவிட்டதே, நீங்கள் எல்லாம்களைப்பினாலே தூங்கிவிட்டீரே,

எனவே, களைப்படைந்த சகோதரரே, இப்போது நிம்மதியாய் உறக்கம் கொள்வீர்,
ஓய்வுகொள்வீர். ஓர் பரலோக தூதனின் இறக்கைகள் தாமே மறைக்கப்பட்ட சிலுவைதன்னின்
பாரம் குறைக்க உதவியதே,
உங்கள் எஜமான் பலம் பெற்றே, வேறோர் சிலுவையைச் சுமக்கவே ஆயத்தம் ஆகிவிட்டாரே,
கல்வாரிக்குக்கொண்டுச் செல்ல எந்த சிலுவை மிகப்பாரமாகும்? ரோம போர்வீரர்
ஆசீர்வதிக்கப் பெற்றவர் தோளினில் சுமத்திய மரச் சிலுவையா?
இல்லை, இல்லை. அது பார்க்கவியலா கண்ணுக்குத் தெரியா மறைக்கப்பட்ட சிலுவைதானே,
அதுவே அவரை பூமியின் மேலே மிகப்பாரமாகவே அழுத்தி நசுக்கியதே,
வெளிறிய இதழ்கள் மென்மையாய்திறந்தே, எனது தந்தையே, எனது தந்தையே, என்னை
ஏனோ கைவிட்டீரே? பூமி கூட சோகமடைந்ததே, அவர் மார்பின்மீதே அதைச் சுமந்து
கொண்டாரே, சூரியன்கூட இருளாய் மாறியதே,
எல்லாம் முடிந்தது, நிறைவேறிற்று, சரிநிகர் சமான விரை கொடுத்தாயிற்று, மறைக்கப்பட்ட
சிலுவையோ, அந்த அன்பால் தளர்ந்த இதயம் தன்னை ஊடுருவவே குத்திக் கிழித்ததே,
உன் சிலுவையை எடுத்தே என்னைப் பின்பற்றிவா - எஜமான் சொன்னார்,
ஆம். அவர் உண்மை மணவாட்டியும் ஓர் சிலுவைதன்னை சுமந்தாக வேண்டும்,
மறைக்கப்பட்ட சிலுவை, வாழ்க்கையின் சூழ்நிலை மாற்றங்களாலே உருவானதல்ல,
அதன் நோய்கள், வலிகள், இழப்புகள், ஏழ்மை, பெருங்கூட்டம்
வெளிப்புற பார்வைக்காக அடையாளமாகக்கொண்டதுவே, இல்லை, இல்லை,
எனக்கு முன்பாய் கடந்துபோனவர் சென்ற இடுங்கிய பாதையில் சென்றிடுவோம்,
நாங்கள்கூட அப்பெருந்துன்பம் சுமப்போம், உலகத்தின் மனஉறுதியற்ற ஒழுக்கக்கேட்டின்
உணர்வுகளினின்றே மீறப்பட்ட சட்டத்தின் பாவத்தின் சாபத்தின் பாரம், நாம் அவரண்டை
செல்வோம், தடையேதும் விதிக்காமலே, நம் வாழ்வதனை ஜீவபலியாக்கிடுவோம்.

தொடரும் , ,

# இயேசுவின் இறுதியான 21 மணி நேரங்கள்



Russell Marten

"பஸ்கா பண்டிகைக்கு முன்னே, இயேசு இவ்வுலகத்தைவிட்டுப் பிதாவினிடத்திற்குப் போகும்படியான தம்முடைய வேளை வந்ததென்று அறிந்து, தாம் இவ்வுலகத்திலிருக்கிற தம்முடையவர்களிடத்தில் அன்புவைத்தபடியே, முடிவுபரியந்தமும் அவர்களிடத்தில் அன்புவைத்தார்" (யோவான் 13:1).

நம்முடைய கால அட்டவணையைப் பார்க்கும்போது, பூமியின்மேல் இயேசுவின் கடைசி நாள், இந்த வருடத்தில் சரியாக ஏப்ரல் 3-ஆம் தேதியாகும். அவர், 33 1/2 வருடம் பரிபூரண மனுஷனாகவும், அதில் கடைசி 3 1/2 வருடம் தன்னுடைய ஊழியத்திற்காகச் செலவழித்தார். அவருடைய குறுகிய வாழ்க்கையில், அந்தக் கடைசி நாளில் நிர்ப்பந்தமான மணி நேரங்களை அவர் கடக்க வேண்டியதாக இருந்தது. ஆதாமின் சந்ததி தங்களுடைய பாவ நிலையினால் நித்தியமாக அழியாது என்பதே இதன் பொருளாகும்.

நம்முடைய நாள் நடுராத்திரியில் துவங்குகிறது. ஆனால், யூதர்களுக்கு ஒருநாள் 6 மணி நேரத்திற்கு முன்னதாகவே துவங்குகிறது. அதாவது, சூரியன் அஸ்தமனமாகும்போது, கிட்டத்தட்ட மாலை 6 மணிக்கு துவங்குகிறது. கிமு 33-ஆம் வருஷம், அந்தநாள் ஒரு வெள்ளிக் கிழமையாக இருந்தது. (13-ஆம் தேதி மாலை 6 மணிக்கு 14-ஆம் தேதி துவங்கியது). அந்த நாள் (14-ஆம் தேதி) முடிவதற்கு மூன்று மணி நேரத்திற்கு முன்னே இயேசு மரித்தர். அதற்கு முன்னிருந்த 21 மணி நேரங்களும் இயேசு ஏழு முக்கியமான அனுபவங்களைச் சகித்துக்கொண்டார். ஒவ்வொரு அனுபவமும் ஏறக்குறைய மூன்று மணி நேரங்களைக் கொண்டதாக இருக்கிறது.

வசனங்களில் மூன்று மணி நேரம் என்பது ஒரு "ஜாமம்" ஆகும். ஒருநாளின் குறிப்பான மணி நேரத்தில் நடக்கக்கூடிய சம்பவங்களைக் கூறுவது அரிதானக் காரியமாக இருப்பதினால், நடைமுறைக்கு இயல்பாக மூன்று மணி நேரம் என்றளவில் சம்பவங்களை விவரிப்பது சாத்தியமாகும்.

### (1)சகோதர ஐக்கியமும் நெருங்கிய தொடர்பும் (மேல் வீட்டறையில்)

இக்கால பகுதிகளில் முதல் பகுதியானது சகோதர ஐக்கியத்தையும், நெருங்கிய தொடர்பையும் சிறந்த முறையில் தொகுக்கப்பட்டு, சூரிய அஸ்தமனத்திற்கும், நடுவான மாலை நேரத்திற்கும் இடையில், தோராயமாக, 6-9 மணி மாலை நேரமாகும். இதில் நடந்த முக்கிய சம்பவங்கள் பஸ்காவின் அனுசரிப்பு மற்றும் நினைவுகூருதலாகும்.

இந்தநாள் எவ்வாறு நிறைவுபெறும் என்பதை இயேசு தம்முடைய சிந்தையில் முன்னறிந்தவராக, மேல் வீட்டறையில் அப்போஸ்தலர்களோடு இணைந்து பஸ்காவைப் புசிக்கும்படிச் சென்றார். ஆயினும், கடந்த சில வருடங்களாக, அவரோடு நெருங்கி வாழ்ந்தவர்களுக்கு இது நிச்சயமாக ஊக்கமளிக்கக்கூடியதாக இருந்திருக்கும்.

இயேசுவுக்குப் பிதாவாகிய தேவனோடு நேரடியான தொடர்பு இருந்ததினால் மனுஷரோடிருந்த தொடர்பு குறைவாக இருந்திருக்கும் என்று ஒருவர் சிந்திக்கலாம். ஆயினும், அவருக்கு முன்னிருந்த சோதனைகளும் மரணமும் முற்றிலுமாக மனுஷ இயல்பில் இருந்தது. மற்றும் அதற்கு முன் நம்முடைய ஆண்டவர் இப்படிப்பட்ட அனுபவங்களைப் பெற்றதில்லை. அவர் பரலோகத்தில் பெற்ற அனுபவங்கள் அல்லது இதுவரையில் அவர் மனுஷனாக வாழ்ந்த நாட்களிலும் பெற்ற அனுபவங்களுக்கு இனிவரும் அனுபவத்தோடு ஒப்பிட முடியாது. தேவைப்படும் நேரங்களில் நம்முடைய மனித இயல்பு மற்றவர்களின் இரக்கத்திற்காக ஏங்கும். நமக்கு மற்றவர்களின் அனுதாபத்தைச் சம்பாதிக்க வேண்டும் என்பதற்காக அல்ல மாறாக, மனித இனம் தன்னுடைய உணர்வுகளை சிநேகிதர்கள் அல்லது குடும்பத்தினரோடு பகிர்ந்துகொண்டு ஒரே சிந்தையைக் கொண்டவர்களின் ஆதரவைத் தேடக்கூடியவர்களாக இருக்கிறோம்.

இயேசுவுக்குள் செதுக்கப்பட்டிருந்த மனித இரக்கம் அவருடைய பலவீனத்திற்கு அடையாளமாக இருக்கவில்லை. அவர் விருப்பு வெறுப்பற்றவரும் இல்லை, வலிகளுக்கும் வேதனைகளுக்கும் உணர்வற்றவராகவும் இருக்கவில்லை. மேலும், அவமானமான உணர்வுகளுக்கும், நஷ்டங்களுக்கும் அவர் விதிவிலக்கானவரும் இல்லை. மற்ற அனைவரைக்காட்டிலும் இவர் மிக உயர்வானவராக இருந்தபோதிலும் அவர் பெருமைக்கொள்ளாமலும், சுயநலம் தேடாதவருமாக இருந்தவர். அவர் தூய்மையான இயல்புள்ளவராக இருந்தார். நன்மையானவைகள் மற்றும் அன்பைப்பற்றி நன்கு உணர்ந்தவராகவும், அதற்கு எதிரான உணர்வுகளாகிய வேதனைகளையும், வலிகளையும் அவர் முழுமையாக உணரக்கூடியவராய் இருந்தார்

மனித சீரழிவு மற்றும் மனித கடுந்துயரம் இயேசுவின் பூமிக்குரிய வாழ்க்கையில் தொடர்ந்து

பாரசுமையாக இருந்திருக்க வேண்டும். ஆனால் இந்த மணி நேரத்தில் உலகத்தின் மொத்த வேதனைகளும் சுமைகளும் அவருடைய தோளின்மேல் சுருட்டி வைக்கப்பட்டது. அவர் ஒரு பாவியைப்போல மரணத்தை உத்தரிக்க வேண்டியதாக இருந்தது. அவர் மரித்து, உயிர்த்தெழுவதற்காக, பிதாவின் கிருபையை மட்டுமே நம்பியிருந்தார். நாம் சந்திக்கக்கூடிய மரணத்தையல்ல, இயேசுவைப் பொறுத்தவரையில் அது ஒரு வித்தியாசமானக் காரியமாக இருந்தது. அப்போஸ்தலர்களும், இயேசு சந்தித்த காரியங்களை முழுமையாக உணராதிருந்தாலும், அவர்கள் விசுவாசமுள்ள ஆதரவாளர்களாக, அவருடைய சுமையைப் பகிர்ந்துகொண்டார்கள்.

இயேசு தன்னுடைய தவிர்க்க இயலாத மரணத்தை மிக இலேசானதாகக் குறிப்பிட்டதுமன்றி, தன்னைக்குறித்துக் கவலைப்படாமல், சீஷர்களுக்காகக் கவலைப்பட்டாரென்று அப்போஸ்தலர்கள் கூறுகிறார்கள். இதையும் தாண்டி சற்று நேரத்தில், ஒருவர் காட்டிக்கொடுக்கவும், ஒருவர் மறுதலிக்கவும் செய்வார் என்பதை அவர் அறிந்திருந்தார். இந்தச் சாதகமற்ற உணர்வுகளைத் தவிர்த்து அங்குக் கூடியிருந்தவர்களோடு ஒருமித்திருந்தக் காரியமானது, அந்த ஏழு கால பகுதிகளில், இயேசுவுக்கு மிகவும் இன்பமான பகுதியாக இருந்தது. அவர்களின் முன்கூட்டிய சிந்தனைகளுக்கு எதிராக சீஷர்களின் பாதங்களைக் கழுவி, தாழ்மையான பணியின் முக்கியத்துவத்தைக் கற்பித்தார். அவருடைய சரீர அங்கத்தினர் தொடர்ந்துவரும் காலத்தில் அந்த சாயங்காலத்தில் அவருடைய மரணத்தை நினைவுகூரும்படி ஒரு ஏற்பாட்டைச் செய்தார்.

### (2) ஆயத்தம் (பிரசங்கம், தோட்டத்தில் ஜெபம், கடிந்துகொள்ளுதல் மற்றும் கைது செய்தல்) சகோதரர்களுக்குள் விரோதம்

அவர்கள் அந்த மேல்வீட்டறையவிட்டு, எருசலேமின் வீதிக்குள் நுழைந்து கெதரோன் பள்ளத்தாக்கிற்குச் செல்லும்போது ஏறக்குறைய 9 மணியாக இருந்தது. 21 மணி நேரத்தில் இது இரண்டாவது மூன்று மணி நேரமாகும்.

யோவான் மட்டுமே இயேசுவின் பிரசங்கங்களை 15-17 அதிகாரங்களில் விவரமாகப் பதிவு செய்த ஒரே சுவிசேஷகர். அவரோடு சென்றவர்கள் அவருடைய பேச்சைக் கேட்க நின்றார்களோ அல்லது அவருடைய பேச்சைக் கேட்டுக்கொண்டே நடந்தார்களோ தெரியவில்லை. இப்படியாக அனைவரும் கெதரோன் ஆற்றைக் கடந்து கெத்செமனே தோடத்திற்குள் நுழைந்தார்கள் (யோவான் 18:1).

இதற்கிடையில் வழியில் இயேசு திராட்சச்செடியைப்பற்றியும், கொடியைப்பற்றியும், தோட்டக்காரரைப்பற்றியும் எடுத்துக்காட்டுகளை விவரித்துக்கொண்டுப்போனது நியாயமாகத் தோன்றுகிறது (யோவான் 15-16). அதில் செடியோடு கொடி இணைந்திருப்தையும், கொடிகள் வளர்ச்சியடைவதையும் குறித்துப் பேசினார். இயேசு இனி அவர்களோடு இருக்கப்போவதில்லை என்று 16-ஆம் அதிகாரத்தில் மிகத் தெளிவாகக் கூறினார். ஆயினும், அவர்களின் ஊழியத்திற்குத் தேவைப்படும் உதவிகளுக்கு மிகப் பெரிய முன்னேற்பாட்டைச் செய்தார். அந்த ஏற்பாட்டின்படி, தேவனிடத்திலிருந்துவரும் பரிசுத்த ஆவியானது தொடர்ந்து அவர்களுக்குக் கொடுக்கப்படும் என்று கூறினார்.

### தோட்டத்திற்குள் பிரவேசித்தல்

யோவான் மற்றும் யாக்கோபு அந்தத் தோட்டத்தின் பாரம்பரிய உரிமைக்காரர்களாக இருந்தார்கள். இப்படியாக இயேசுவும் மற்ற அப்போஸ்தலர்களும், தனிமையாக பாதுகாப்போடு இருப்பதற்கு அந்த இடத்தைப் பயன்படுத்திக்கொண்டிருந்தனர். மாற்கும் இவர்களின் உறவினராக இருந்திருக்க வேண்டும்.

ஜெபிப்பதற்காக இயேசு அப்போஸ்தலர்களைவிட்டு தன்னைத் தனிமைப்படுத்தினாரென்று மத்தேயு, மாற்கு மற்றும் லூக்கா எழுதின சுவிசேஷங்கள் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. பிதாவாகிய தேவனோடு இயேசு கொண்டிருந்த நெருக்கத்திற்கு எதிரிடையாக அப்போஸ்தலர்கள் அனைவரும் நித்திரை மயக்கமடைந்தார்கள். எதைச் செய்தாலும் நாம் விழித்திருக்க வேண்டுமென்ற எச்சரிப்பான பாடத்தை நாம் பெறுகிறோம்.

### (3)கைது செய்தல் மற்றும் தனிமைப்படுத்துதல் (சகோதரர்களின்றி எதிர்ப்பு)

இயேசு நடுராத்திரியில் கைது செய்யப்பட்டிருக்க வேண்டும். கைது செய்யப்பட்ட நேரத்திற்கும் பிலாத்துவினிடத்தில் இயேசுவை இழுத்துச் சென்றதற்கும் இடையிலுள்ள சம்பவங்கள் நடந்த காலளவு குறிப்பாகச் செல்லப்படவில்லை. ஆயினும், வசனத்தில் காணப்படும் சாட்சிகள் நமக்குண்டு.

யூதர்கள் இயேசுவைக் கைது செய்தவுடன், ஏதோ ஓர் அறையில் பல மணி நேரங்கள் அவரை வைத்திருக்க வேண்டும். இயேசு கைது செய்யப்பட்ட பின், அன்னா மற்றும் காய்பாவினிடம் கொண்டுச் செல்லப்பட்டார் என்று மத்தேயு, மாற்கு மற்றும்

லூக்காவின் பதிவுகள் சொல்லுகிறது. இவைகள் விடியலுக்கு முன் நடந்திருக்க வேண்டும். அவருக்கு நடந்த விசாரணைகள் மிகச் சுருக்கமாகக் கொடுக்கப்பட்டுள்ளது. ஏனெனில், இந்த இரண்டு சம்பவங்களுக்கும் கிட்டத்தட்ட ஆறு மணி நேரம் கணக்கிடப்படுகிறது. இந்த நீண்ட நேரத்தில் சட்ட ரீதியாக அவரை விசாரணை செய்ததுபோல தோன்றவில்லை.

இப்படியாக, காலையில் ஆலோசனை சங்கத்தாரை கூட்டிச்சேர்த்து, இயேசுவை விசாரிப்பதற்குச் செய்ய வேண்டிய ஆயத்தத்திற்காக, கைது செய்த இயேசுவைக் கொஞ்சம் நேரம் தனிமையில் வைத்திருக்க வேண்டும்.

ஆகவே, நடுராத்திரியிலிருந்து விடியல் 3-ஆம் மணிவரைக்கும் இயேசு தனிமையில் இருந்தார். ஆதரவின்றி, சிநேகிதர்களின்றி, 40 நாட்கள் இயேசு வனாந்தரத்தில் இருந்ததுபோல அவர் தனிமையில் இருந்தார். கூடியிருந்தவர்கள் அவரை விட்டு விரைந்தோடினார்கள். "நான் ஒருவனாய் ஆலையை மிதித்தேன்; ஜனங்களில் ஒருவனும் என்னோடிருந்ததில்லை; நான் என் கோபத்திலே அவர்களை மிதித்து, என் உக்கிரத்திலே அவர்களை நசுக்கிப்போட்டேன்; அதினால் அவர்கள் இரத்தம் என் வஸ்திரங்களின்மேல் தெறித்தது, என் உடுப்பையெல்லாம் கறைப்படுத்திக்கொண்டேன். நான் பார்த்தேன், துணைசெய்வார் ஒருவருமில்லை; தாங்குவார் ஒருவருமில்லை என்று ஆச்சரியப்பட்டேன்; அப்பொழுது என் புயமே எனக்கு இரட்சிப்பாகி, என் உக்கிரமே என்னைத் தாங்கிற்று" (ஏசாயா 63:3, 5).

சிலுவையில் தொங்கும்வரைக்கும் கடைசி மணி நேரம்வரைக்கும் அவருடைய சகோதரர்களோடு தொடர்புகொள்ள முடியாது என்பதை இயேசு நன்கு அறிந்திருந்தார். குறிப்பாக மனித இயல்பானது, வேதனை மற்றும் அழுத்தங்களுள்ள சூழ்நிலையில், பகிர்ந்துகொள்வதற்கு இசைவான நண்பர்கள் அல்லது தோழர்களைத் தேடுவதுண்டு. ஆனால் இயேசு தனிமையில் எந்தவிதமான ஆதரவுமின்றி, பிதாவோடு ஜெபத்தில் ஐக்கியப்பட்டிருந்தார். மீதியிருக்கக்கூடிய அவரின் வாழ்க்கை தனிமையில் விடப்பட்டது.

### (4)பொய்யான குற்றச்சாட்டு மற்றும யூதர்களின் விசாரணை

இந்த மணி நேரங்கள் மெதுவாகக் கடந்து சென்றது. தனிமையில் அவர்பட்ட உபத்திரவம் முடிந்தது. அதற்குப்பின் நேரடியாக தன்னுடைய எதிராளிகளோடு அவருடைய உபத்திரவம் துவங்கியது. ஜெபிக்கவும், அமைதியாக தியானிக்கவும் இயேசுவுக்கு இனி சமயம் இல்லை. ஆயினும் இனி நடக்கக்கூடிய சம்பவங்களுக்கு இயேசு ஆயத்தமானார்.

அவர் என்ன போதித்தார் என்று அறிந்துகொள்ள முதலில் அன்னாவுக்கு முன் இயேசு நிறுத்தப்பட்டார். இரகசியமாக அல்ல, ஜெப ஆலயங்களிலும் பொது இடங்களிலும் இயேசு பிரசங்கித்ததாக உண்மையோடு பதிலளித்தார். அதற்குப்பின் அவர் சரீரத்தில்பட வேண்டிய உபத்திரவம் துவங்கியது. விசாரணை நடந்துக்கொண்டிருக்கும்போதே, பிரதான ஆசாரியனுடைய ஊழியக்காரன் இயேசுவை கன்னத்தில் அறைந்தான்.

அடுத்து, இயேசு காய்பாவிடம் இழுத்து வரப்பட்டார். அங்கு சில சிநேகிதர்களாகிய யோவான், பேதுரு மற்றும் ஸ்திரீகளின் முகம் காணப்பட்டது. இன்னும் அவர்களின் செல்வாக்கு செயல்படுவதற்கு வாய்ப்பில்லை. இயேசுவுக்கு, யூதர்களால் நடத்தப்பட்ட விாசரணையை அவர்கள் பார்த்துக்கொண்டு மட்டுமே இருக்க முடிந்தது. 6 மணி நேரத்திற்கு முன், உம்மோடுக்கூட மரிக்க வேண்டுமானாலும் நான் மரிப்பேன் என்று தீவிரமாகச் சொன்ன பேதுரு, இப்போது சேவல் கூவுவதற்கு முன் மூன்று முறை மறுதலித்தார்.

பேதுருவின் விசுவாசத்திற்கு எதிரிடையாக, வெளிப்படுத்தப்பட்ட அவருடைய கிரியைகள் இன்று அனைத்து கிறிஸ்தவர்களுக்கும் சிறந்த ஒரு பாடமாக முன்வைக்கப்படுகிறது. பேதுரு எப்போது தைரியமாக இருந்தார்? தோட்டத்தில் தன்னுடைய சகோதர்கள் சூழ்ந்து நின்றுகொண்டிருக்கும்போது தன்னுடைய விசுவாசத்தை வெளிப்படுத்தும்படியாக இயேசுவைப் பாதுகாக்கும்படி தன்னுடைய பட்டயத்தை உறையிலிருந்து உருவினார். ஆயினும், இப்போதும் அருகில் சகோதரர்கள் இல்லாமல், குற்றம் சாட்டுபவர்கள் சூழ்ந்திருக்க, ஆயுதங்கள் ஏதுமில்லாததினாலும், அவர் இருளில் மறைந்துகொண்டு, இயேசு யார் என்பதை தனக்குத் தெரியாதென்று மறுதலித்து, இயேசுவை சபிக்கவும், சத்தியம் பண்ணவும் துவங்கினார்.

நமக்கு எப்படிப்பட்ட பாடம்! சகோதரர் நம்மைச் சுற்றியிருந்தால் நம்முடைய விசுவாசம், பயம் மற்றும் தோல்விகளை மேற்கொள்ளும் பலம் நமக்குள் அதிகமாகக் காணப்படும். நம் அருகில் அவர்களின் பிரசன்னம், நம்முடைய விசுவாசத்தையும் வைராக்கியத்தையும் அதிகரிக்கும். நாம் தனிமையில் இருக்கும்போது, ஆதரவின்றி இருக்கும்போது, சோதிக்கப்படும்போது, பேதுரு செய்ததுபோல நாமும் விழுவதற்கு வாய்ப்புண்டு. அவரைப்போல நாமும் விழுந்துபோகும் நேரத்தில்,

நம்முடைய விசுவாசக் குறைச்சலை எண்ணி ஏமாற்றமடைவோம். நம்முடைய சகோதரர்களோடு நெருங்கியிருக்கும்போது, நாம் தேவனிடத்திலும் நெருங்கியிருக்கலாம்.

ஆலோசனை சங்கத்திற்கு முன், பொய்சாட்சிகள், தேவதூஷணம் சொன்னதாகக் குற்றம் சாட்டப்படுதல் - இந்த அனுபவங்கள் அனைத்தும் ஆதாமின் விழுந்துபோனவர்களாகிய அபூரணமான பாவிகளாகிய நாம் தாங்குவது இயல்பான காரியம். பாவம் மற்றும் தீமைகளின் பாதிப்புகளினால் நம்முடைய உணர்வுகளும், நல்லறிவும் மந்தமாகிவிட்டது. ஆனால், நம்முடைய ஆண்டவரைப் பொறுத்தவரையில் அப்படியல்ல. அவருடைய உணர்வுகள் மென்மையாகவும், கூர்மையாகவும் இருந்தது. அவர்கள் சாட்டின குற்றங்கள் எதையும் இயேசு செய்யவில்லை. அவர் பரிபூரணமானவரும், அன்பு நிறைந்தவரும், விசுவாசமுள்ளவரும், பிதாவை மகிமைப்படுத்தக் கூடியவருமாக இருந்தார். மனித வரலாற்றில் மிகப் பெரிய பலியைச் செலுத்துவதே இயேசு பெற்றிருந்த பணியாக இருந்தது. ஆனால் அவர் தேவனுடைய குமாரனென்று ஒப்புக்கொண்டபோது, அவருடைய விதி, அந்தத் தேசத்தின் மத தலைவர்களின் பார்வை குருடானது.

**(5)உண்மையான குற்றச்சாட்டு மற்றும் ரோமாபுரியில் நடந்த விசாரணை**

விடிந்தபின், அடுத்த மூன்று மணி நேரத்திற்குள் இயேசு பிலாத்தினிடம் அழைத்துச் செல்லப்பட்டார். இதற்குமுன் யூதர்களால் நடத்தப்பட்ட விசாரணைகள் பல காரணங்களுக்காக சட்டத்திற்குப் புறம்பாக நடத்தினார்கள். மேலும், அவைகள் பொய்கள் நிறைந்ததாகவும், அவருடைய குணங்களை எதிரிடையாகவும் அங்கு வெளிப்படுத்தப்பட்டது. இதற்கு எதிரிடையாக, பிலாத்து மற்றும் ஏரோதுக்கு எதிராக நடந்த சோதனைகள் சட்டப்பூர்வமாகவும், உண்மையாகவும் நடந்தது. அவர்மேல் சாட்டப்பட்ட குற்றங்கள் தவறாக இருந்தாலும், பிலாத்தின் விசாரணை உண்மையின் அடிப்படையில் இருந்தது. மற்றும் ரோம சட்டங்களை இயேசு மீறினாரா என்று அறிந்துகொள்ள பிலாத்து முயற்சித்தான். இராயனுடைய அதிகாரத்திற்குமேல் இயேசு அவருடைய ஆளுகையை உயர்த்தினாரா? இதற்கான இயேசுவின் பதில் எளிமையாகவும், வல்லமையுள்ளதாகவும் இருந்தது. "என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல, என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதானால் நான் யூதரிடத்தில் ஒப்புக்கொடுக்கப்படாதபடிக்கு என் ஊழியக்காரர் போராடியிருப்பார்களே; இப்படியிருக்க என் ராஜ்யம் இவ்விடத்திற்குரியதல்ல" (யோவான் 18:36).

ஏரோதின் அரமனையிலிருந்து இயேசுவை மீண்டும் பிலாத்துவினிடத்தில் கொண்டு வந்தார்கள். இப்போது ரோம ஆளுநர்கள் மற்றும் யூத தேசத்தின் தலைவர்களுக்கு இடையில் நடந்த சமாதான பேச்சு வார்த்தைகளை இயேசு பார்த்துக்கொண்டிருந்தார்.

இயேசு ரோமாபுரிக்கு எந்தவிதத்திலும் பயமுறுத்தும் எதிராளி அல்லவென்று பிலாத்து நம்பினார். மேலும் அவர் மரணத்திற்குப் பாத்திரவான் அல்லவென்றும் அவர் கண்டறிந்தார். ஆனாலும் யூத மத தலைவர்களுக்கு இயேசு ஒரு பயமுறுத்தலாக இருந்தார். நம்முடைய நாட்களில், உண்மையும், நீதியும் அடிக்கடி அரசியலுக்கு விலை போவதைப்போல அன்று நடந்தது.

இயேசு தண்டிக்கப்படுவதற்கான அழுத்தங்களை பிலாத்து முதலில் தடுக்க முயற்சித்தார். பஸ்காவின் நாட்களில் இயேசுவை விடுதலையாக்கும்படி கேட்டுக்கொண்டார். ஆயினும் அடுத்து மற்றொரு அவமானம் காத்துக்கொண்டிருந்தது. ஜனங்கள் இயேசுவுக்குப்பதிலாக, திருடனும் கொலைக்காரனுமான பரபாஸை விடுவிக்கும்படி கோஷமிட்டார்கள். இந்த ஒரு அவமானத்தில் ஓர் அருமையான நிழல் அடங்கியுள்ளது. நம்முடைய ஆண்டவரின் பரிபூரணமான ஜீவன் நீதியுள்ளவர்களுக்கும், விசுவாசிகளுக்கும் பலியாகக் கொடுக்கப்படாமல் கொடூரமான குற்றவாளிக்குப் பதிலாகக் கொடுக்கப்பட்டது. ஈடுபலி - சிறிய அளவில் நாம் பார்க்கும்போது, பரபாஸ் - கடந்த 6000 வருடங்களாகப் பிறந்த அபூரணமான சீரழிந்துக்கொண்டிருக்கும் ஜனங்களைக் குறிக்கும். யூதர்கள் ஒரு பாவியின் விடுதலையையும், இரட்சகரின் மரணத்தையும் வேண்டினார்கள். காலையில் இயேசுவுக்கு மரண தீர்ப்பளிக்கப்பட்டது.

**(6)கசையடி, பரியாசம் மற்றும் சிலுவை மரணம்**

இந்தப் பூமியில் நம்முடைய ஆண்டவரின் கடைசி நாளில் கொடூரமானதும், மிகுந்த வேதனையான காலம் வர துவங்கியது. இயேசுவை சிலுவையில் அறைவதற்கு முன் ரோம வீரர்கள் உண்மையில் எவ்வளவு கொடூரமாக நடத்தினார்கள் என்பதை நாம் அறியோம். ஆனால் இக்கால சூழ்நிலையைப் பார்க்கும்போது அவருக்கு அளிக்கப்பட்ட தண்டனை கொடூரமாகவும், காட்டுமிராண்டித்தனமாகவும் இருந்திருக்க வேண்டும். இந்த உலகத்தின் அடுத்த யுகத்தில் அவருடைய முழுமையான பாடுகளை அனைவரும் அறிந்துகொண்டு, தங்களுடைய இரட்சகரைப்பற்றி உணர்ந்துகொள்வார்கள். அனைவரும் ஓரளவுக்கு மன

உளைச்சல் அடைந்து, தங்களுடைய பாவத்தின் விளைவினால் மகிமையான பரிபூரண மனுஷனாக இருக்க வேண்டியவர்களை, இப்படிப்பட்ட மிருகத்தன்மைக் கொண்டவர்களாக மாற்றிவிடுவதை நன்கு உணருவார்கள்.

நம்முடைய ஆண்டவரைப் பரியாசம் செய்தபோது, உடல் ரீதியாக வேதனைகளை அனுபவித்ததைக்காட்டிலும் மனரீதியான வேதனை கொடியதாக இருந்திருக்கும். நாம் செய்த சில நன்மையான காரியங்களைப் பாராட்டாமல் விடுவது ஒரு காரியம் - ஆனால் இயேசு மௌனமாக இருந்தபோதும், இவர் தேவதூஷணம் சொன்னார் என்று நிரூபித்து, அதைக் காரணம் காட்டி இறுதியாக, அவருடைய பலியைச் செலுத்துவது - தாங்கிக்கொள்வதற்கு எவ்வளவு வேதனையாக இருந்திருக்கும். - "அவர் அசட்டைபண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவரும், துக்கம் நிறைந்தவரும், பாடு அநுபவித்தவருமாயிருந்தார்; அவரைவிட்டு, நம்முடைய முகங்களை மறைத்துக்கொண்டோம்; அவர் அசட்டைபண்ணப்பட்டிருந்தார்; அவரை எண்ணாமற்போனோம்" (ஏசாயா 53:3).

**சிலுவை மரணம், வசைமொழிகளும்**

வெள்ளிக் கிழமை காலை 9 மணிக்கு சற்று முன் நம்முடைய ஆண்டவரின் உடல் ரீதியான சோதனைகளும், மனரீதியான சோதனைகளும் வலுவடையத் துவங்கியது.

"கபாலஸ்தலம் என்று அர்த்தங்கொள்ளும் கொல்கொதா என்னும் இடத்துக்கு அவரைக் கொண்டுபோய், வெள்ளைப்போளம் கலந்த திராட்சரசத்தை அவருக்குக் குடிக்கக் கொடுத்தார்கள்; அவர் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. அப்பொழுது அவரைச் சிலுவையில் அறைந்தார்கள். அதன்பின்பு அவருடைய வஸ்திரங்களைப் பங்கிட்டு, ஒவ்வொருவன் ஒவ்வொரு பங்கை எடுத்துக் கொள்ளும்படி அவைகளைக் குறித்துச் சீட்டுப்போட்டார்கள்" (மாற்கு 15:22-24).

உடல் வலியைக் குறைப்பதற்காகக் கொடுக்கப்படும் பானம் அங்கு இயேசுவுக்குக் கொடுக்கப்பட்டது. இயேசு அந்த பானத்தினால் தம்முடைய உதடுகளை நனைத்து, தம்முடைய நன்றியை வெளிப்படுத்தியிருக்க வேண்டும். ஆனால் அவர் தம்முடைய உடன்படிக்கைக்கு உண்மையாக இருப்பதற்காக எந்தவிதத்திலும் அவர் படும் வேதனைகளைக் குறைக்க உட்படவில்லை. முழு அனுபவமும், உடல் ரீதியான வேதனைகளை எந்தவிதத்திலும் குறைக்க வகைதேடாமல், அவர் எல்லாவற்றையும் சகித்தார். கடைசி நொடி பொழுதுவரைக்கும், முழு உணர்வோடு அவருடைய சிந்தையை விழித்திருக்கச் செய்ய விரும்பினார்.

நம்முடைய ஆண்டவரின் கால்களிலும் கைகளிலும், ஆணிகள் பாய்ச்சப்படும்போது, வார்த்தைகளினால், சொல்லமுடியாத வேதனைகள் - அவருடைய வாழ்க்கையில், எதிர்பார்க்கப்பட்ட அதிகப்பட்சமான வேதனையின் துவக்கமாக இருந்தது. இந்த ஆணிகள், கூர்மையாகவும், வழவழப்பான ஸ்டீலினாலும் செய்யப்படவில்லை. ஆகவே, அவருடைய மாம்சத்தில் அது எளிதாகப் பாய்ச்சப்படவில்லை. அவைகள் கரடுமுரடான நுனிகளைக்கொண்ட துருப்பிடித்த ஆணிகளாக இருந்தது. இப்படியாக, அவர் சிலுவையோடு, ஆணிகள் பாய்ச்சப்பட்டு, தாங்க முடியாத வேதனையின் உச்சக்கட்டத்தை அவர் அடைந்துகொண்டிருந்தபோது, சுற்றியிருந்த ஜனக்கூட்டத்தின் மத்தியில், இயேசு அந்த சிலுவையோடு உயர்த்தப்பட்டு, கைகள் மற்றும் கால்களில் அறைந்த ஆணியில், அவருடைய முழு சரீரத்தின் பாரமும் தொங்கியது.

சிலுவை மரணம், கொடுமையான மரணங்களில் மிகக் கொடூரமானது என்று சொல்லப்படுகிறது. அது மரண வேதனையோடும், பொது ஜனங்களின் பார்வையில், பரியாசம் செய்யப்படுவதோடும்கூட நிறைவேற்றப்படும். இது மனுஷ சரீரத்தைச் சிதைத்து நாசமாக்கிவிடும். இந்நாளில் பயன்படுத்தக்கூடிய எந்தமுறையும் சிலுவை மரணத்தைக் காட்டிலும் கொடூரமானதல்ல.

நம்முடைய ஆண்டவரின் விசுவாசமும், அன்பும் தொடர்ந்தது. இயேசு சிலுவையில் தொங்கின அந்த மூன்று மணி நேரத்தில், அவரால் பேசுவதும்கூட மிகக் கடினமாக இருந்திருக்க வேண்டும். அந்த நேரத்திலும், தேவையான தற்காலிக காரியங்களை அவர் விட்டுவிடவில்லை.

"இயேசுவின் சிலுவையினருகே அவருடைய தாயும், அவருடைய தாயின் சகோதரி கிலெயோப்பா மரியாளும், மகதலேனா மரியாளும் நின்றுகொண்டிருந்தார்கள். அப்பொழுது இயேசு தம்முடைய தாயையும் அருகே நின்ற தமக்கு அன்பாயிருந்த சீஷனையும் கண்டு, தம்முடைய தாயை நோக்கி: ஸ்திரீயே, அதோ, உன் மகன் என்றார். பின்பு அந்தச் சீஷனை நோக்கி: அதோ, உன் தாய் என்றார். அந்நேரமுதல் அந்தச் சீஷன் அவளைத் தன்னிடமாய் ஏற்றுக்கொண்டான்" (யோவான் 19:25-27).

இயேசு தன்னுடைய இருண்ட மணி நேரத்திலும், அவருடைய சூழ்நிலையைக்குறித்து கவனம் செலுத்தாதவராக, தன்னுடைய

தாய்க்காகக்கொண்டிருந்த பொறுப்புகளை, யோவானிடம் கையளித்தார்.

**(7)இருள் மற்றும் மரணம்**

இயேசுவின் வாழ்கையின் இறுதி காலத்தில், இருளான அந்த மத்தியான வேளையில் அவர் கடைசியாக மூன்று மணி நேரம் அவர் கடும் உபத்திரவப்பட்டார்.

மத்தியான வேளையில் சூரியன் இருளடைந்தது. இந்த உலகத்தின் ஒளி அணைந்துக் கொண்டிருந்ததை (யோவான் 8:12)-ல் இது காட்டுகிறது. சிலுவையில், கொடிதான வேதனையின் ஒவ்வொரு நொடியிலும், பலமும் உயிராற்றலும் தளர்ந்தது, தவிர்க்க இயலாத மூச்சுத்திணறல் அதிகரித்துக்கொண்டே இருந்தது. அவர் பெலன் மிகவும் குறைந்த‌ததினால், அவர் காலூன்றி மூச்சு விடுவதும் இயலாத காரியமானது.

இந்த உலகத்தில் ஒரு சிறிய வகுப்பார் மட்டுமே இந்தச் சம்பவங்களை அறிந்திருந்தார்கள். ஆனால் சந்தேகத்திற்கு இடமின்றி பரலோகத்தில், அவர் மரிக்கும்வரையில், முழு பரலோகமும் அவர் உபத்திரவப்பட்டு மரிக்கும்வரையில் அனைவரும் துக்கங்கொண்டிருந்தார்கள். தேவ ஆட்டுக்குட்டி, இந்த உலகத்தின் பாவத்தைச் சுமந்து மரித்தார். "எல்லாம் முடிந்தது" (யோவான் 19:30) என்ற இரண்டு வார்த்தைகளில் எல்லாவற்றையும் முடித்தார்.

தேவன் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குச் செல்லும் திரைச்சீலையை மேல்துவங்கிக் கீழ்வரைக்கும் கிழித்தார். இதை யூதர்கள் ஒரு அச்சுறுத்தும் அடையாளமாக எடுத்துக கொண்டிருக்க வேண்டும். ஆனால் இயேசு தம்முடைய பணியை முடித்ததற்கு முதல் அடையாளமாக இருந்தது. உச்சக்கட்டமான வேதனைகளின் விளைவாக இடுக்கமானப் பாதை திறக்கப்பட்டபடியால், பரலோகம் பேசபட முடியாத மகிழ்ச்சியில் ஆழந்தது. குமாரனுடைய விசுவாசமுள்ள ஊழியம் மற்றும் அவருடைய ஈடுபலி அங்கீகரிக்கப்பட்டது. சர்ப்பத்தின் தலை நசுக்கப்பட்டு ஆதாமின் சந்ததி மீண்டும் ஜீவனைப் பெறுவதற்கான உறுதி பெறப்பட்டது (ஆதியாகமம் 3:15).

மனிதனாக வருவதற்கு முன் இயேசு இருந்த நிலைமையையே தனக்கு திரும்பக் கொடுக்கும்படி இயேசு பிதாவிடம் விண்ணப்பித்தார். அதாவது, ஒரு ஆவிக்குரிய ஜீவியாக மட்டும் இருப்பதற்கு அவர் விரும்பினார். ஆனால் பிதாவாகிய தேவன், இயேசு விரும்பியதை மட்டும் கொடாமல், கொடூரமான சூழ்நிலையின் மத்தியில் தன்னுடைய ஜீவனைக் கொடுத்ததனிமித்தம் தெய்வீக சுபாவத்தையே கொடுத்தார். அழியாமை - சர்வத்திற்கும் மேலான ஒரு நிலை. ஆ! நமக்கு எப்படிப்பட்ட ஒரு இரட்சகர்!

**என்னை நினைவுகூரும்**

உமது இரக்கப்பெருக்கத்தின் வார்த்தையின்படியே,
தாழ்மையான தன்னடக்கத்துடனே நான் செல்வேனே,
எம் அன்பான தேவனே, உம் மரணத்தில் சொன்னதை
நினைவில்கொண்டு உள்ளேனே.
எனக்காக பிட்கப்பட்ட உம் சரீரமே,
பரலோகத்திலிருந்து எனக்குக்கொடுத்த மன்னாவோ, உம் உடன்படிக்கைப்
பாத்திரத்தை நானெடுத்தே,
இப்படித்தான் உம்மை நினைவுகூரச் செய்தேனோ?

என் கண்களை சிலுவையின் மீதேறெடுக்கையிலே,
கல்வாரியின் மீது வைத்துப் பதிக்கையிலே,
எனக்காக பலியான தேவாட்டுக்குட்டியே,
நான் உம்மை நினைவுகூருகிறேன் தேவனே.
உம்மை நினைத்து, உம் துன்பங்கள் நினைத்து,
உம் அன்பு எல்லாம் எனக்காகவே அன்றோ,
ஒரு மூச்சும், ஒரு துடிப்பும் இருக்கையிலே,
உம்மையே நினைவுகூர்ந்திடுவேனே,

விருப்பத்துடன்

# இறுதியான ஒரு விருப்பம்



"அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: நான் பாடுபடுகிறதற்கு முன்னே உங்களுடனேகூட இந்தப் பஸ்காவைப் புசிக்க மிகவும் ஆசையாயிருந்தேன்" (லூக்கா 22:15).

Mitchell Blicharz

இந்த வசனப்பகுதியில், இயேசு தம்முடைய கடைசி இராபோஜனத்தை அப்போஸ்தலர்களோடு புசிப்பதற்கு அவர் மிகவும் ஆசையுள்ளவராக இருந்ததினால், "ஆசை" என்ற வார்த்தையை இயேசு இரண்டுமுறை பயன்படுத்தினார். "ஆசை" என்ற வார்த்தைக்கு "ஏங்குதல்" என்று பொருள் (எப்பித்துமியா - epithumia G1939) ஆசை என்பதற்கானப் பொருளைக்காட்டிலும் ஆழத்திலுள்ள அழுத்தத்தின் உணர்வுகளை இது குறிக்கிறது.

இதே வார்த்தையை நாம் மத்தேயு 13:16-17-ஆம் வசனங்களிலும் வாசிக்கலாம். "உங்கள் கண்கள் காண்கிறதினாலும், உங்கள் காதுகள் கேட்கிறதினாலும், அவைகள் பாக்கியமுள்ளவைகள். அநேக தீர்க்கதரிசிகளும் நீதிமான்களும் நீங்கள் காண்கிறவைகளைக் காணவும், நீங்கள் கேட்கிறவைகளைக் கேட்கவும் விரும்பியும், காணாமலும் கேளாமலும் போனார்களென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்." ஆசை என்ற இந்த வார்த்தைக்குக் கொடுக்கப்பட்ட வசனத்தில், இயேசு இந்த வார்த்தையைப் பயன்படுத்தின காரணத்தைக்குறித்து மத்தேயு இன்னும் ஆழமான ஒரு கண்ணோட்டத்தைத் தருகிறார். மத்தேயு சுவிசேஷத்தில், இதுவரைக்கும் தீர்க்கதரிசிகளால் உரைக்கப்பட்டிருந்தபோதிலும் புரிந்துகொள்ள இயலாத பரலோக இராஜ்யத்தின் இரகசியங்களைப்பற்றி இயேசு குறிப்பிடுகிறார்.

### சரியான நேரத்தை இயேசு அறிந்திருந்தார்

இயேசு தம்முடைய 30-ஆம் வருஷம், அக்டோபர் மாதம் ஞானஸ்நானம் பெற்று பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டார். ஆறு மாதங்களுக்குப்பின் ஏப்ரல் மாதத்தில், யூத பஸ்காவை தம்முடைய சீஷர்களோடே அனுசரித்தார்.

யோர்தானில் பரிசுத்த ஆவியினால் தெளிவான அறிவைப் பெற்றவராக, யூத பஸ்காவின் நிஜமான ஆடு அவர் தான் என்று இயேசு நன்கு புரிந்துகொண்டார். இயேசு சீஷர்களோடு, நிழலான பஸ்காவை அனுசரித்தாலும் குறித்த நேரம் வரும்வரையில் சீஷர்கள் நிஜத்தைப்பற்றி புரிந்துகொள்ள முடியவில்லை. அவருடைய மரணத்திற்குச் சற்று நேரத்திற்கு முன் - சரியான நேரம் என்பதை இயேசு நன்கு அறிந்திருந்தார். இதற்குப் பல காரணங்கள் உள்ளது.

(1) "நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்துமுடித்தேன்" (யோவான் 17:4). மீண்டும் சிலுவையில், "எல்லாம் முடிந்தது" (யோவான் 19:30) என்று இயேசு கூறினார். பிதா தனக்குக் கொடுத்திருந்த வேலைகளை முடித்தபோது அவர் தம்முடைய மரணத்தை நினைவுகூரும்படியான (யோர்தானில் துவங்கினது அல்ல சிலுவையில் முடித்ததை) ஒரு அனுசரிப்பை அவர் ஏற்படுத்தினார். "ஆயுதம் தரித்திருக்கிறவன், ஆயுதம் உரிந்து போடுகிறவனைப்போலப் பெருமைபாராட்டலாகாது" (1 இராஜாக்கள் 20:11) இந்த வசனத்தில் இராஜாவாகிய ஆகாபின் வார்த்தைகள் இந்தக் கோட்பாட்டைப்பற்றி எடுத்துரைக்கிறது.

(2) அவர் உயிரோடிருக்கையில் 3-1/2 வருடங்களாகத் தம்முடைய மரணத்தை நினைவுகூரும்படி சொல்லியிருந்தால் அவருடைய சீஷர்கள் குழப்பமடைந்திருப்பார்கள்.

(3) இயேசுவின் மரணம், உயிர்த்தெழுதல் மற்றும் பெந்தெகொஸ்தே நாள்வரைக்கும் இந்த பொருட்களினால் (அப்பம், ரசம்) அடையாளப்படுத்தப்படும் அர்த்தங்களைப்பற்றி அவர்கள் புரிந்துகொள்ளமாட்டார்கள் என்பதை இயேசு அறிந்திருந்தார்.

இனி நடக்கக்கூடிய நம்முடைய தனிப்பட்ட பலியை எண்ணி நாம் இந்த நினைவுகூருதலில் பங்கு கொள்கிறோம் என்பது பொருளல்ல. மாறாக, சரீர அங்கத்தினர்கள் முழுமையாக தங்களுடைய பலிகளைச் செலுத்தி முடித்தப்பின் இந்தப் பண்டிகை கொண்டாடப்படும் என்று கருதப்படுகிறது. சபையாகிய சரீரம் பெந்தெகொஸ்தே நாளிலே செய்த பலியின் உடன்படிக்கையைக் கடிவாளமாகப் போட்டுக்கொண்டது. இந்தக் கடிவாளம் சரீரத்தின் கடைசி நபர் திரைக்கு அப்பால் செல்லும்போது எடுக்கப்படும். அப்போது இயேசு வாக்களித்தப்படி பிதாவின் இராஜ்யத்தில் நிறைந்த பின் புதிதான திராட்சரசத்தை முழுமையான மணவாட்டியுடன் அருந்துவார் (மத்தேயு 26:29).

தம்மைப்பற்றி நினைவுகூரும்படி இயேசு சரீர அங்கத்தினரிடம் கேட்டுக்கொண்டார். ஒருவேளை தானும் தன்னுடைய சரீர அங்கத்தினர் மனுக்குலத்திற்குச் செய்ததை நினைவுகூரும்படியாக ஒரு ஏற்பாட்டைச் செய்யலாம். அப்போது அது மகிழ்ச்சியின் பாத்திரமாக இருக்கும்.

# பரபாஸ் மற்றும் பரிபூரண மனுஷன்



David Christiansen

"இயேசு, முள்முடியும் சிவப்பங்கியும் தரித்தவராய், வெளியே வந்தார். அப்பொழுது பிலாத்து அவர்களை நோக்கி: இதோ, இந்த மனுஷன் என்றான்" (யோவான் 19:5).

குறிப்பாக, இயேசுவை மரணத்திற்கு ஒப்புகொடுக்க வேண்டுமென்று இஸ்ரயேல் மூப்பர்கள் பிலாத்துவிடம் வேண்டினபோது, "இதோ இந்த மனுஷன்" என்று பிலாத்து ஜனங்களை நோக்கிக் கூறினார். இந்த வார்த்தைகளை பிரதான ஆசாரியர்களும், பிரதானிகளும் கேட்டார்கள். அப்போது, இயேசு சிவப்பங்கித் தரித்தவராக, தலையில் முள்முடி சூட்டப்பட்டு அவர்களுக்கு முன் நிறுத்தப்பட்டார். அவரைக் கனப்படுத்தும்படியல்ல, அவரைப் பரியாசம் பண்ணும்படி ரோம வீரர்கள் இப்படிச் செய்தார்கள்.

இயேசு யூதர்களுக்கு முன்பாக நின்றார். ரோம வீரர்களால் அவர் அடிக்கப்படுவதையும், கேலி செய்யப்படுவதையும் யூதர்கள் கவனித்துக்கொண்டிருந்தார்கள். "யூதருடைய ராஜாவே, வாழ்க என்று சொல்லி, அவரைக் கையினால் அடித்தார்கள்" (யோவான் 19:3).

இதைக் கண்ட யூத தலைவர்கள் என்ன சொன்னார்கள்? நிரபராதியான அந்த மனுஷனுக்காக அவர்கள் இரக்கம் பாராட்டினார்களா? அவர்களின் மனதை மாற்றிக்கொண்டு பரபாஸை சிலுவையில் அறைந்து இயேசுவை விடுதலையாக்க வேண்டுமென்று எண்ணினார்களா? இயேசுவிடம் எந்தக் குற்றமும் காணப்படவில்லை என்று பிலாத்து மூன்றுமுறை சொன்னதை அவர்கள் கேட்கவில்லையா? அவர்களுடைய இருதயத்தை இலகுவாக மாற்றுவதற்குப்பதிலாக, "அவரை சிலுவையில் அறையும்" என்று அனைவரும் கூச்சலிட்டார்கள். இஸ்ரயேலரின் மூப்பர்கள் பிடிவாதமுள்ளவர்களாக இருந்ததினால், பரபாஸை விடுதலை செய்து, இயேசுவைக் கொல்ல வேண்டும் என்று விரும்பினார்கள்.

**பரபாஸ்**

பரபாஸ் அதிகமாக விவரிக்கப்படாத ஒருவன். உண்மையான வாழ்க்கையில், பேசப்படாத ஒரு கதாபாத்திரம்போல இருந்தாலும், அவனுடைய பிரசன்னம் அந்தக் காட்சியை சற்று திசைத்திருப்பியது. நம்முடைய ஆண்டவருடைய உண்மையான வாழ்க்கை வரலாற்றில், பரபாஸ் இப்படிப்பட்ட ஒரு பாத்திரமாக இருந்ததன் காரணமென்ன? இந்தக் கதையில் பரபாஸ் இருக்க வேண்டுமென அவசியமில்லையே. இயேசு சிலுவையில் உயிரைவிடுவதற்கு அவன் அவசியப்படவில்லை. ஆனால், பரபாஸ் அங்கிருந்தான். அவன் வசனங்களில் பதிவு செய்யப்படுமளவுக்கு முக்கியத்துவம் பெற்றிருந்தான். ஆகவே, ஒருவேளை தேவன் நமக்குச் சில பாடங்களை வைத்திருக்கலாம்.

"கலகம்பண்ணி அந்தக் கலகத்தில் கொலைசெய்து, அதற்காகக் காவல்பண்ணப்பட்டவர்களில் பரபாஸ் என்னப்பட்ட ஒருவன் இருந்தான்" (மாற்கு 15:7). பரபாஸ் செய்த குற்றமென்ன? இதைக்குறித்துப் பல கூற்றுகள் உள்ளது.

சில கிரேக்க கைப்பிரதிகளில், பரபாஸ் என்ற பெயர் உண்மையில், "Yeshua bar Abba" என்று அராமிக் மொழியில் அழைக்கப்பட்டதாகவும், இதற்குப் "பிதாவினுடைய குமாரன்" என்று பொருள் கூறப்படுகிறது. ஒருவேளை பொதுவாக யூதர்களின் மனதுக்குள் **இயேசுவை** விடுதலைச் செய்யும்படி கூக்குரல் இட்டிருக்கலாம் என்று ஒரு கூற்று கருதுகிறது.

இது வசனங்கள் அடிப்படையில்கொண்ட **கூற்றல்ல**. இந்த அனுமானம், மிகச் சிறிய அளவிலான பழைய பிரதிகளின் அடிப்படையில் கூறப்படுகிறது. பரபாசின் பெயர் உண்மையில் யெசுவா பார் அப்பா-வாக இருந்தாலும், வேதம் நமக்குக் கூறுவதற்கு எதிரிடையாக யூதர்கள் கூக்கூரலிட்டார்கள் என்பதற்கு அவசியமில்லையே.

விக்கிப்பீடியாவில் மற்றொரு கூற்று கொடுக்கப்பட்டுள்ளது. இந்தக் கூற்று அதிகமாகப் பின்பற்றப்படுவதினால், இதை ஆராய்ந்துப்பார்க்க வேண்டும்.

"பிதாவாகிய தேவனை "அப்பா" என்று ஜெபத்தில் அழைப்பது அவர்களுக்குப் பழக்கமாக இருந்தது. ஹையாம் மாக்கோபி (Hyam Maccoby) மற்றும் சில வேத வல்லுனர்கள் இயேசு, "Bar Abba" என்று அழைக்கப்பட்டார் என்று உறுதியளிக்கின்றனர். ஆகவே பிலாத்துவுக்கு முன் நின்ற ஜனக்கூட்டம் "பார் அப்பா"-வை விடுதலைச் செய்யும் என்று கூக்குரலிட்டபோது அவர் இயேசு என்று சொல்லியிருக்கக்கூடும். கிறிஸ்துவ சபைகளின் மத்தியில் இந்த வாக்குவாதங்கள் நடந்துகொண்டிருக்கிறது. விவாதம் எவ்வாறு செல்லுகிறதென்றால், கிறிஸ்தவ திருச்சபையிலுள்ள சில எபிரெய மொழி, பேசத்தெரியாத சிலர், வேறொருவரை (கொள்ளைக்காரன்) அதாவது,

பரபாசை விடுதலைச் செய்ய கோரிக்கை எழுப்பினதைப்போல் வேதத்தில் திருத்தி எழுதிவிட்டதாகக் கூறப்படுகிறது. கிறிஸ்துவை சிலுவையில் அறைந்த பழி யூதர்களிடமிருந்து மாற்றப்பட்டு ரோமர்களே அதற்குக் காரணம் என்று அந்த ஆராய்ச்சிக் கூறுகிறது.

ஆனால் உண்மையில் யூத தலைவர்கள் கிறிஸ்து இயேசுவை தொலைத்துவிடவும், அவரை சிலுவையில் ஏற்றுவதிலும் குறியாக இருந்தார்கள். ஆகையால் எபிரெய மொழி தெரியாதவர்களாக இதை எழுதியவர்கள் இருக்க முடியாது. எந்தவித சான்றுமின்றி, பரபாஸைத்தான் விடுதலை செய்ய வேண்டுமென்று ஜனங்கள் கோரிக்கை வைத்ததாக மாற்றியமைத்து எபிரெய மொழி அறியாதவர்களே என்று கூறுகிறது என்று ஏற்றுக்கொள்ள இயலாத ஒன்றாக உள்ளது. யூத தலைவர்கள் பலரை கிறிஸ்துவிற்கு எதிராக தூண்டினார்கள். தேவன் இந்தப் பூமியை மீட்கும் திட்டத்தில் முக்கியமான பாகமும் அதுதானே.

யூத தலைவர்களின் நடத்தையிலிருந்தே அவர்கள் இயேசுவை கைதுசெய்து, சிலுவையில் அறைய வேண்டுமென்ற நோக்கத்துடனே செயல்பட்டார்கள். இந்த உண்மை வெளிச்சத்திற்கு வந்தபிறகு, மேலே கூறப்பட்ட ஆராய்ச்சிகள் இரண்டும் சிறிதளவும் உண்மைபோல் தோன்றவில்லை. இயேசு போதிக்கத் துவங்கியது முதல் இஸ்ரயேல் தலைவர்கள் அவருக்குப் பகையாக தான் இருந்தார்கள்.

இயற்கையைக் கடந்த கருத்துக்கள் என்ன கூறுகிறது என்றால், நமது வேதாகமம் எதைப்பற்றியாவது, யாரைப்பற்றியாவது, கொஞ்சம் தகவல் அளித்தால், உண்மைக்கு அப்பாற்பட்ட பல கருத்துக்களை ஜனங்கள் உருவாக்குவார்கள்.

எபிரெய மொழி தெரியாத மொழி பெயர்ப்பாளர் மீது பழியைச் சுமத்திவிட்டது என்று நாம் தீர்மானிக்கலாம். ஆனால் யூத எழுத்தாளர்களிடமிருந்து இப்படி ஒரு எண்ணம் உதித்தது சாத்தியமா? நாம் வேதத்தின் உண்மையானப் பதிவுகளை கருத்தில்கொள்வது நலமாக இருக்கும்.

**பரபாஸின் பெயர்**

ஸ்டிராங்க்ஸ் ஒத்த வாக்கிய அகராதியைப் பொறுத்தவரையில் பரபாஸ் என்பதற்கு, "பிதாவின் குமாரன்" என்று பொருள். இயேசுவும் தேவனுடைய குமாரன் என்று பலமுறை அழைக்கப்பட்டார். எடுத்துக்காட்டாக, "தேவனுடைய குமாரனாகிய இயேசு" (மாற்கு 1:1).

"தேவனுடைய குமாரன்" என்று மற்றொருவரும் அழைக்கப்பட்டிருக்கிறார். "ஆதாம் தேவனுடைய குமாரன்" (திருவிவிலியம் லூக்கா 3:38).

மிகப் பெரிய திட்டத்தின் ஒரு சிறிய மாதிரி காணப்படுகிறது. இயேசு ஆதாமுக்குப் பரிபூரண ஜீவனுக்குப்பதிலாக பரிபூரண ஜீவனைக்கொடுத்து ஈடுபலியைச் செலுத்தினார் என்று வசனங்களிலிருந்து அறிந்துகொள்ளலாம். இயேசு தேவனுடைய பரிபூரணமான குமாரன். தேவனுடைய மற்றொரு குமாரன் ஆதாமுக்காக ஈடு கிரயத்தைக் கொடுத்தார் (1 கொரிந்தியர் 15:22). ஆயினும், இயேசுவின் சிலுவை மரணத்தில் பரலோக தந்தை தம்முடைய குமாரனின் ஜீவனை பரபாசுக்குப்பதிலாகக் கொடுத்தார். ஆகவே பரபாஸ் தற்செயலாகத் தேர்வு செய்யப்பட்டான் என்று தோன்றவில்லை. நேர்த்தியான ஒரு காரணத்திற்காக தேவன் பரபாஸை தேர்வு செய்தார். இது ஈடுபலியின் மற்றொரு சித்திரத்தைக் கொடுக்கிறது.

"கலகம்பண்ணி அந்தக் கலகத்தில் கொலைசெய்து, அதற்காகக் காவல்பண்ணப்பட்டவர்களில் பரபாஸ் என்னப்பட்ட ஒருவன் இருந்தான்" (மாற்கு 15:7) என்று மாற்கு கூறுகிறார்.

பரபாஸ்: (1) கைது செய்யப்பட்டவன் அல்லது சிறைப்பட்டவன்; (2) கலகக்காரனாக இருந்தான்; (3) ஒரு கொலைக்காரன். இம்மூன்று காரியங்களும் ஆதாமின் அனுபவங்களுக்கு எவ்வாறு ஒப்பிடுவது?

துவக்கத்தில் ஆதாம் கட்டுப்பாடின்றி சுற்றித்திரிந்தார் - தோட்டத்தில் சுதந்தரமாக உலாவிக்கொண்டிருந்தார். தேவனைத் தொழுதுகொள்ள சுதந்தரம் பெற்றிருந்தார். அதுபோல ரோம அதிகாரத்தின் கீழ் பரபாஸ் முழுமையான சுதந்தரம் பெற்றவனாக இருந்தான். பரபாஸ் தன்னுடைய முற்பிதாக்களாகிய ஆபிராகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபின் தேவனைத் தொழுதுகொண்டு சுதந்தரமாகச் சுற்றித் திரிந்திருப்பான். அப்படி அவன் சுற்றித் திரியும்போது, ரோம அரசாங்கம் அவனை எவ்விதத்திலும் மீண்டும் தண்டிப்பதற்கு வாய்ப்பில்லை. சட்டத்தை மீறினால் ரோம அரசாங்கம் மரண தீர்ப்பு கொடுப்பதற்கு அதிகாரம் பெற்றிருந்தாலும் பரபாஸ் செய்த குற்றங்களுக்கு ரோம அரசாங்கம் அவரைத் தண்டிக்கவில்லை.

பரபாஸ் ஒரு கலகக்காரனாக இருந்தான். அவன் ரோமர்களுக்கு எதிராகக் கலகம் செய்தவன். ஆதாம் ஒரு கலகக்காரரா? புசிக்க வேண்டாம் என்ற கனியைப் புசித்து அவர் தேவனுக்கு விரோதமாகக் கலகம் செய்தாரா? சகோதரர் ரஸலின் விமர்சனத்தைப் பார்க்கலாம் - "ஆதாமை ஏதேனிலிருந்தும், அதனுடைய நன்மைகளிலிருந்தும் வெளியேற்றி, இனி அவரை நேசிக்கப்பட்ட சிருஷ்டியாகவும், நண்பனாகவும் கருதாமல், ஒரு

எதிரியைப்போல பாவித்தார், "நீ உன் பாதையைத் தெரிந்துகொண்டாய், இப்போது அதில் நடந்துசெல்" என்று தேவன் வெளிப்படையாகக் கூறினார் (R1176).

மாற்கு 15:7-ஆம் வசனத்தில் பரபாஸ் கொலை செய்தவன் என்று கடைசியாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இப்படியிருக்க நம்முடைய அடுத்த கேள்வி - "ஆதாம் கொலை செய்தாரா?" இந்தக் கேள்விக்கான விடையை சற்று ஆராய்ந்துப் பார்க்கலாம். "பரபாஸ் மற்றும் ஆதாம் தேவனுக்கு விரோதமாகக் கலகம் செய்து கொலை செய்தார்களா? ஆதாமின் கீழ்ப்படியாமையில் செய்த கலகத்தினாலேயே, அவருடைய சந்ததி அனைவரும் மரணத்திற்கு வழிநடத்தப்பட்டார்கள் என்று மிகத் தெளிவாகக் காணப்படுகிறது.

"ஒரு பாவியை மாதிரியாக முன் வைத்து, பாவத்தின் இயல்பான பின்விளைவுகளை அனைவரும் அறிந்துகொள்ள வேண்டுமென்று தேவன் தீர்மானித்ததினால், பாவத்திற்கான தண்டனை அமுலுக்கு வந்தது" (R1176). "பாவத்தின் சம்பளம் மரணம்" என்று ரோமர் 6:23-ஆம் வசனம் கூறுகிறது. எல்லா ஜனங்களும், ஆதாமின் கீழ்ப்படியாமையினாலே பாவத்தையும் மரணத்தையும் பெற்றார்கள். மற்ற ஜனங்கள் மரிப்பதற்கு ஆதாமின் கலகம் காரணமாக இருந்தது. இது நேரடியான கொலையாக இராவிட்டாலும், அதற்கு மிக நெருக்கமாக உள்ளது (ரோமர் 5:12, 17-19).

"கலகம்பண்ணி அந்தக் கலகத்தில் கொலைசெய்து, அதற்காகக் காவல்பண்ணப்பட்டவர்களில் பரபாஸ் என்னப்பட்ட ஒருவன் இருந்தான்" (மாற்கு 15:7) என்று சொல்லப்படுகிறது. ஆதாம் மற்றும் ஏவாள் இருவருமே தேவனுக்குக் கீழ்ப்படியவில்லை. அவர்கள் தோட்டத்தைவிட்டு வெளியே வந்தபோது பாவமும், மரணமும் திடீரென்று அவர்களை அடிமைப்படுத்தியது. அதுபோல, பரபாசும் அவனுடைய கூட்டாளிகளாகிய கலகக்காரர்களும் பிடிப்பட்டபோது அனைவரும் மரண தீர்ப்பைப் பெற்றார்கள். சொல்லர்த்தமாக அவர்கள் சிறையில் அடைக்கப்பட்டார்கள்.

ஆகவே ஆதாமுக்கும் பரபாசுக்குமுள்ள சம்பந்தத்தையும் நாம் இங்குக் காணலாம். இயேசு மரணத்தில் இந்த இருவருடைய இடத்தையும் எடுத்துக்கொண்டார். பரபாஸ் தன்னை மன்னித்து விட வேண்டும் என்று அவன் வேண்டினதாக வேதாகமத்தில் எங்கும் காணப்படுவதில்லை. அல்லது பரபாசுக்குப் பதிலாக இயேசு மரிக்க வேண்டியதை அவர் தடைசெய்யவுமில்லை. இது ஈடுபலியின் ஒரு அருமையான வரைபடமாக உள்ளது. சொல்லர்த்தமாக கிறிஸ்து தன்னுடைய பரிபூரணமான ஜீவனை இலவசமாக ஒரு பாவியாகிய பரபாசுக்குக் கொடுத்ததுபோல, ஒரு பெரியளவில், இயேசு தன்னுடைய ஜீவனை இந்த உலகத்திலுள்ள அனைத்துப் பாவிகளுக்கும் கொடுத்தார். "தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே. எல்லாரையும் மீட்கும்பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே; இதற்குரிய சாட்சி ஏற்ற காலங்களில் விளங்கிவருகிறது" (1 தீமோத்தேயு 2:5-6). மற்றும் (அப்போஸ்தலர் 24:15; 1கொரிந்தியர் 15:20-23; 1 தீமோத்தேயு 4:10; எபிரெயர் 2:9 வசனங்களையும் காண்க).

**விருந்து**

மற்றும் ஒரு பாடமும் உண்டு. ஒரு குற்றவாளி பஸ்காவின்போது விடுதலையாக்கப்பட்டார் என்பதற்கு பராபாசின் சம்பவமே வேதாகமத்தில் ஆதாரமாகப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அது இயேசுவை கைது செய்து சிலுவையில் அறையப்படும்போது நடந்தது.

* "காவல்பண்ணப்பட்டவர்களில் எவனை விடுதலையாக்கவேண்டுமென்று ஜனங்கள் கேட்டுக்கொள்வார்களோ, அவனை அவர்களுக்காக விடுதலையாக்குவது பண்டிகைதோறும் தேசாதிபதிக்கு வழக்கமாயிருந்தது. அப்பொழுது காவல்பண்ணப்பட்டவர்களில் பரபாஸ் என்னப்பட்ட பேர்போன ஒருவன் இருந்தான். பொறாமையினாலே அவரை ஒப்புக்கொடுத்தார்கள் என்று பிலாத்து அறிந்து, அவர்கள் கூடியிருக்கையில், அவர்களை நோக்கி: எவனை நான் உங்களுக்கு விடுதலையாக்கவேண்டுமென்றிருக்கிறீர்கள்? பரபாசையோ? கிறிஸ்து என்னப்படுகிற இயேசுவையோ? என்று கேட்டான்"(மத்தேயு 27:15-18).

* "காவல் பண்ணப்பட்டவர்களில் எவனை விடுதலையாக்க வேண்டுமென்று ஜனங்கள் கேட்டுக்கொள்வார்களோ, அவனை அவர்களுக்காக விடுதலையாக்குவது பண்டிகைதோறும் பிலாத்துவுக்கு வழக்கமாயிருந்தது" (மாற்கு 15:6).

* "பண்டிகைதோறும் அவர்களுக்கு ஒருவனை அவன் விடுதலையாக்குவது அவசியமாயிருந்தபடியால் அப்படிச் சொன்னான்" (லூக்கா 23:17).

* "பஸ்காபண்டிகையில் நான் உங்களுக்கு ஒருவனை விடுதலைபண்ணுகிற வழக்கமுண்டே; ஆகையால் யூதருடைய ராஜாவை நான் உங்களுக்காக விடுதலைபண்ண உங்களுக்கு மனதுண்டா என்றான்" (யோவான் 18:39).

"காவல் பண்ணப்பட்டவர்களில் எவனை விடுதலையாக்க வேண்டுமென்று ஜனங்கள்

கேட்டுக்கொள்வார்களோ, அவனை அவர்களுக்காக விடுதலையாக்குவது பண்டிகைதோறும் பிலாத்துவுக்கு வழக்கமாயிருந்தது" (மாற்கு 15:6) என்று கூறப்படுகிறது. இதற்குப் பிலாத்து ஒரு குற்றவாளியை விடுதலையாக்குவது வழக்கமாக இருந்தது என்று அர்த்தம். லூக்காவைப் பொறுத்தவரையில் இது மூல பிரதிகளில் இல்லை என்றும், யோவான் இதை வழக்கம் என்றும் கூறுகிறார். ஆனால் அந்த வழக்கம் இஸ்ரயேலுடையதா? ரோமர்களுடையதா? அப்போது இஸ்ரயேல் ரோமர்களுக்கே அடிமைகளாக இருந்ததினால் யூதர்களுக்குச் சாதகமாக இருக்கும் எந்த பழக்கமும் ரோமர்களின் பழக்கத்திற்கு ஒத்திருந்தது. ஆகவே யூதர்களைச் சாந்தப்படுத்துவதற்கு இது ஒரு ரோம வழக்கமாக இருந்திருக்க வேண்டும்.

ஆயினும், "உங்களுக்கு ஒரு வழக்கமுண்டு" என்று யோவான் கூறுகிறார். இந்தக் காரியம் எதிரிடையாகத் தோன்றகிறது. ஒரு நெருங்கியப் பார்வை நமக்கு உதவியாக இருக்கும்.

* "ஆனால் இது உங்களுக்கு வழக்கமாக ..." என்று டைகிலாட்டு மொழிபெயர்ப்பு கூறுகிறது. "ஆனால் இது உங்களுக்கு வழக்கமாக ..." என்று இன்டர்லீனியர் (interlinear) மொழிபெயர்ப்பு கூறுகிறது.

* "எனக்கு உங்களோடு ஒரு ஒப்பந்தம் உண்டு" என்று பிலிப்பு மொழிபெயர்ப்பு கூறுகிறது.

இந்தக் குறிப்புகளை நாம் பார்க்கும்போது ஒரு குற்றாவாளி விடுவிக்கப்படுவதை, ரோம ஆளுநர் விவேகத்துடன் பயன்படுத்தியதால், யூதர்களுக்கு இது பழக்கமானது. "பஸ்கா பண்டிகையின்போது ஒரு குற்றவாளியை விடுதலையாக்கக்கூடிய பழக்கமானது, சுவிசேஷத்திற்கு வெளியே எங்கும் காணப்படுவதில்லை." ஆயினும், ரோமாபுரியிலும் மற்றும் பாலஸ்தீனாவிலும் வழக்கமாக இருந்திருக்க வேண்டும். ஜனங்களின் வேண்டுதலுக்கு இணங்கும் ஒரு ரோம அதிகாரி ஒரு கைதியை விடுதலை செய்தான். இதைக்குறித்து (Papyrus Florentinus 61:59 ff.) என்ற புத்தகத்தில் காணலாம், "நீ அடிக்கப்படுவதற்குப் பாத்திரவனாக இருந்தபோதிலும் நான் உன்னை இந்த ஜனங்கள்வசமாக ஒப்புக்கொடுக்கிறேன்" என்று எகிப்திலுள்ள ரோம ஆளுநர் அந்த குற்றவாளியான பிலிப்பியானை நோக்கிக்கூறினான்.

மேலே கூறப்பட்டுள்ள அதே கட்டுரையில், பண்டிகையின் காலத்தில் பொதுவாக ஒருவனை மன்னித்துவிடுவது உலகமெங்கும் பழக்கமாக இருந்தது. அந்தக் காலத்தில் இப்படிப்பட்ட காரியங்கள் பாலஸ்தீனாவில் நடந்ததாக எந்த ஆதாரமும் இல்லை. ஆனால் ஒருவன் சிறையிலிருந்து விடுவிக்கப்படுவதற்கு வாக்குப் பெற்றிருந்தால் அவனுக்குப்பதிலாக ஒரு பஸ்கா ஆடு அடிக்கப்பட வேண்டுமென்ற பிரமாணம் யூதர்களின் முறைமை கூறுகிறது." மீண்டுமாக, இது ரோமர்களின் சம்மதமில்லாமல் நடைபெறாது என்று நாம் அறிந்துகொள்ள வேண்டும். இயேசுவின் மரணதீர்ப்பு - மரணத்திலிருந்தும், ஆயுள் கைதியாகத் தீர்ப்புப்பெற்றிருந்த பரபாஸை விடுவித்தது. ஈடுபலியின் எவ்வளவு அழகான ஒரு சித்திரம்!

**ஒரே சமயத்தில் நிகழ்ந்ததா?**

இந்தக் கதையில் ஒரு கடைசி பகுதி உண்டு. இயேசுவின் சிலுவை மரணத்தின்போது, ஜனங்களும், நடந்த சம்வங்களும், சரியான நேரத்தில் ஒருமித்து வந்தது. வேதாகமத்தில், பரபாஸ் (பிதாவின் குமாரன் என்று பொருள்படும்) அப்பொழுது சிறையில் இருந்தான். அதற்கு முன்னும், பின்னும் அவனைப்பற்றி எதுவும் கூறப்படவில்லை. ஆனால் அவனுடைய குற்றங்கள் ஆதாமுடைய குற்றங்களுக்குப் பொருந்துகிறது.

பஸ்காவின்போது ஒரு கைதியை விடுதலையாக்கும் பழக்கத்தைப்பற்றி, இதற்கு முன்னும், இதற்குப் பின்னும் வேதாகமத்தில் எங்கும் கூறப்படவில்லை. இது அந்நேரத்தில் கையளிக்கப் பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டது. கடந்த காலத்தில் நடந்திருக்கும் ஆனால் ஆதாரங்களைப் பார்க்கும்போது, அடிக்கடி இக்காரியம் நடக்கவில்லை.

அந்நேரத்தில் ரோம ஆளுநர்களும், தலைவர்களும் கொடூரமானவர்களாக இருந்தார்கள் - விசேஷமாக சீசரை தவிர தங்களை ஆளுநர்களாகக் கோரிக்கொண்டவர்கள் இப்படிப்பட்டவர்களாக இருந்தனர். ரோமர்களினால் நியமிக்கப்பட்ட ஒரு யூத ஆளுநர், இரண்டு வயதுக்கு உட்பட்டிருந்த அனைத்துக் குழந்தைகளையும் கொன்று போட்டான். ஆயினும் இயேசுவை நிரபராதி என்று உணர்ந்த ரோம ஆளுநர், தன்னுடைய மனைவி அனுப்பின செய்திகளைக் கேட்டு, கூடுமானளவு இயேசுவை விடுவிக்க முயற்சித்தான். இவைகள் அனைத்தும் பஸ்காவின் நேரத்தில் நடந்தது. மனித கண்ணோட்டத்திலிருந்து நாம் பார்க்கும்போது - இவைகள் அனைத்தும் ஏறத்தாழ ஒரே நேரத்தில் சம்பவிப்பது மிகச் சிறிய காரியமாகத் தோன்றலாம்.

இவ்வனைத்து காரியங்களிலும் நாம் பிதாவாகிய தேவனுடைய அருளைக் காணலாம். இவைகள் எதைப் பொருள்படுத்த வேண்டுமோ, அதற்காக இவ்வனைத்தையும், நம்முடைய பிதா நீண்ட காலத்திற்கு முன்னதாகவே திட்டமிட்டு ஏற்பாடு செய்திருந்தார். இந்தக் கதையை அறிந்துகொள்வதற்கு நம்முடைய விசுவாசம் எவ்வளவாக அதிகரிக்கிறது, இந்த வருடம், கிறிஸ்துவின் சரீரத்தையும், இரத்தத்தையும் குறிக்கக்கூடிய அந்த அடையாளத்தில் நாம் பங்கெடுக்கும்போது, நம்முடைய இருதயத்தில் - "இதோ இந்த மனுஷன்!" என்று அமைதியாக நம்முடைய இருதயத்தில் கூறுவோம்.

# ஐக்கியமா அல்லது பொதுவான ஐக்கியமா?



Daniel Beard

"நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா?" (1கொரிந்தியர் 10:16).

இந்த நினைவுகூருதலின் காலத்தில், ஐக்கியம் அல்லது பொதுவான ஐக்கியம் என்ற வார்த்தைகளின் முக்கியத்துவத்தை நாம் கருத்தில்கொள்ளாமல் இருக்க முடியாது. உறுதியான ஐக்கியத்திற்குத் திடமான அஸ்திபாரத்தைக்கொண்டுள்ள பொதுவான ஆர்வமும் அனுபவங்களும் தேவைப்படுகிறது.

நம்முடைய ஐக்கியம், ஒருமைபாடு மற்றும் ஒற்றுமையின் அடிப்படை என்ன? அஸ்திபாரம் உறுதியாக இருந்தால், ஐக்கியமும் உறுதியாக இருக்கும். கிறிஸ்துவுக்குள்ளான ஐக்கியம் அல்லது ஒருமைப்பாட்டை பல எடுத்துகாட்டுகள் மூலம் வசனங்கள் காட்டுகிறது.

ஒரே **சரீரம்** (ரோமர் 12:5; 1கொரிந்தியர் 12:12-13; கொலோசெயர் 3:15). ஒரே **ஆவி** (1 கொரிந்தியர் 6:17, 12-13; எபேசியர் 4:4; பிலிப்பியர்1:27). ஒரே **நம்பிக்கை** (எபேசியர் 4:4; ரோமர் 5:2; 8:23-25). ஒரே **கர்த்தர்** (1 கொரிந்தியர் 8:6; எபேசியர் 4:5). ஒரே **விசுவாசம்** (எபேசியர் 4:5, 13; யூதா 1:3). ஒரே **ஞானஸ்நானம்** (ரோமர் 6:3-5; எபேசியர் 4:5; கலாத்தியர் 3:27-28; கொலோசெயர் 2:12). ஒரே **தேவன்** மற்றும் அனைவருக்கும் பிதா (மாற்கு 12:32; 1 கொரிந்தியர் 8:6; எபேசியர் 4:6). கிறிஸ்துவின் **மணவாட்டிகளாக** நாம் அனைவரும் கிறிஸ்துவோடு ஒன்றாக இருக்கிறோம் (யோவான் 3:29; வெளிப்படுத்தல் 19:7; 21:2, 9; 22:17).

1 கொரிந்தியர் 10:16-ஆம் வசனத்தில் ஐக்கியம் என்ற வார்த்தைக்கு Strong's #2842 பங்கெடுத்தல் என்ற சிந்தையைக் கொண்டுள்ளதாக இருக்கிறது. கிருபையினால் மட்டுமே நாம் இரட்சிக்கப்பட்டோம். நாம் வருங்காலத்தில் அவருடைய மகிமையில் ஐக்கியப்படுவதற்காக இப்போது அவரோடுகூட பங்கெடுப்பதற்குத் தேவைப்படும் சகல காரியங்களையும் நமக்குக் கிருபையாக அருளுகிறார். நினைவுகூருதலின் பண்டிகையே இந்த ஐக்கியத்தை மிக உறுதியாக வெளிப்படுத்துகிறது.

### அப்போஸ்தலனாகிய பவுல் அதிகாரத்துடன் பேசுகிறார்

"நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தரிடத்தில் பெற்றுக்கொண்டேன்; என்னவெனில், கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து" (1 கொரிந்தியர் 11:23).

நியாயப்பிரமாணத்தின் நிழல்கள் - நமக்கு உதவியாக இருப்பதற்கு தேவன் அப்போஸ்தலனாகிய பவுலை தம்முடைய விரலாகப் பயன்படுத்தினார்.

இங்கு 23-ஆம் வசனத்தில் அப்போஸ்தலனாகிய பவுல் தூண்டுதலினால் தனக்கு வெளிப்படுத்தப்பட்டதைப் பேசுகிறார் (கர்த்தரிடத்தில் பெற்றுகொண்டேன்). இந்த நிருபம் கொரிந்து பட்டணத்து சபைக்கு எழுதப்பட்டிருந்தாலும், இதன் பொருளானது குறிப்பாக இனிவரும் யுகத்தின் முடிவிலுள்ள நமக்குப் பொருந்தக்கூடியதாக இருக்கிறது. பஸ்காவைப்பற்றியும் அதன் நிஜமான முக்கியத்துவங்கள் இருண்ட யுகத்தில் அதாவது, யூத மற்றும் சுவிசேஷ யுக அறுவடை காலத்தின் மத்தியில் தொலைந்துபோனது.

நாம் இந்த ஜனங்களையும், நியாயப்பிரமாணத்தின் நிழல்களையும் புரிந்துகொள்வதற்கு நம்முடைய ஆண்டவர் அப்போஸ்தலர்களைப் பயன்படுத்தின காரியம் அற்புதமாக உள்ளது. அப்போஸ்தலனாகிய பவுல் தமஸ்குவின் சாலையில் விழிப்புணர்வு பெறுவதற்கு முன் அவர், "பரிசேயனில் ஒரு பரிசேயனாகவும்" (பிலிப்பியர் 3:5). நியாயப்பிரமாணத்தை மற்றவர்களைக்காட்டிலும் அதிகமாகக் கற்றறிந்தும் இருந்தார். தேவனுடைய பிரமாணங்களை மீறுகிறவர்களைத் தண்டிப்பதும் நியாயம் என்றும் எண்ணினார். அவருடைய பிரமாணங்களை நேசித்த ஒருவரை, தெரிந்தெடுத்து இன்னும் ஆழமான சத்தியங்களை அவர் காணும்படி கண்களைத் திறந்து, பரிசுத்தவான்களுக்கு விசேஷித்த வெளிப்பாடுகளைப் போதிப்பதற்கு அனுமதித்த நம்முடைய தகப்பனைப்போல் ஒரு தேவனுண்டோ!

### ஆசீர்வாதத்தின் பாத்திரம்

வாசிக்கப்பட்ட வசனப்பகுதியில், நினைவுகூருதலின் பாத்திரம் ஆசீர்வதிக்கப்பட்ட பாத்திரம் என்று விவரிக்கப்படுகிறது. இது எந்த பாத்திரம்?

அனைத்து வசனங்களிலும், ஆண்டவரின் பாத்திரம் என்பது - அனுபவத்தின் பாத்திரம் என்று

அழைக்கப்படுகிறது (மத்தேயு 26:39). உபத்திரவத்தின் பாத்திரம் (சங்கீதம் 23:5), இரட்சிப்பின் பாத்திரம் (சங்கீதம் 116:13), புதிய ஏற்பாட்டில் உடன்படிக்கையின் பாத்திரம் (1 கொரிந்தியர் 11:25), ஆசீர்வாதத்தின் பாத்திரம் (1 கொரிந்தியர் 10:16), யேகோவா தேவனால் ஆயத்தம்பண்ணப்பட்ட பாத்திரம் (1 கொரிந்தியர் 10:21).

தேவன் இயேசுவுக்காக ஆயத்தம் பண்ணின பாத்திரமே, இயேசுவின் பாத்திரம். "பிதா எனக்குக் கொடுத்த பாத்திரத்தில் நான் பானம்பண்ணாதிருப்பேனோ" (யோவான் 18:11) என்று இயேசு கூறினார். யோர்தானிலிருந்து கல்வாரி வரைக்கும் பிதா கொடுத்தப் பாத்திரத்தில் "எல்லாம் முடிந்தது" என்று சொல்லி அனைத்தையும் பானம் பண்ணி முடித்தார் (யோவான் 19:30).

இது உபத்திரவம் மற்றும் பலியின் பாத்திரமாக இருக்கும்போது, ஆசீர்வாதத்தின் பாத்திரம் என்று எவ்வாறு அழைக்கிறது? "இது கிறிஸ்துவின் இரத்தத்தின் ஐக்கியமாக இருக்கிறது அல்லவா?" என்று பவுல் ஆவேசமாகக் கேட்கிறார். அதாவது, சொல்லப்போனால் கிறிஸ்துவின் உபத்திரவங்களுக்குப்பின் கிடைக்கக்கூடிய நன்மைகளுக்கு, இப்போது அவருடைய பாடுகளில் பங்கெடுப்பது மாபெரும் சிலாக்கியமாக இருக்கிறது அல்லவா? (கொலோசெயர் 1:24).

செபெதேயுவின் குமாரர்களுடைய தாய், இயேசுவிடம் சென்று, "அவள்: உம்முடைய ராஜ்யத்திலே என் குமாரராகிய இவ்விரண்டுபேரில் ஒருவன் உமது வலது பாரிசத்திலும், ஒருவன் உமது இடது பாரிசத்திலும் உட்கார்ந்திருக்கும்படி அருள்செய்யவேண்டும் என்றாள். இயேசு பிரதியுத்தரமாக: நீங்கள் கேட்டுக்கொள்ளுகிறது இன்னது என்று உங்களுக்குத் தெரியவில்லை. நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிக்கவும், நான் பெறும் ஸ்நானத்தை நீங்கள் பெறவும் உங்களால் கூடுமா என்றார். அதற்கு அவர்கள்: கூடும் என்றார்கள். அவர் அவர்களை நோக்கி: என் பாத்திரத்தில் நீங்கள் குடிப்பீர்கள், நான் பெறும் ஸ்நானத்தையும் நீங்கள் பெறுவீர்கள்; ஆனாலும், என் வலது பாரிசத்திலும் என் இடது பாரிசத்திலும் உட்கார்ந்திருக்கும்படி என் பிதாவினால் எவர்களுக்கு ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிறதோ அவர்களுக்கேயல்லாமல், மற்றொருவருக்கும் அதை அருளுவது என் காரியமல்ல என்றார்" (மத்தேயு 20:21-23). இந்த சீஷர்கள் ஆண்டவரின் பாத்திரத்தில் பானம் பண்ணினார்கள். கிறிஸ்துவின் சரீரத்தில் பங்குள்ளவர்கள் அனைவரும் இதில் பானம் பண்ணுவதற்கு சிறப்புரிமைப் பெற்றிருக்கிறார்கள். பொதுவான கூட்டாளிகளாக நாம் ஆசீர்வதிக்கக் கூடிய பாத்திரம் மற்றும் பலியில் பங்கெடுக்கக்கூடிய சிறப்புரிமை, தலையாகிய நம்முடைய ஆண்டவரோடு ஐக்கியப்பட்டிருக்கும் ஒவ்வொரு சரீர அங்கத்தினரும் பெற்றிருக்கிறோம்.

அந்த இராத்திரியில் இந்த அடையாளங்களை அறிமுகப்படுத்தி கடைசிமுறையாக இயேசு அந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணினார். தேவனுடைய இராஜ்யத்தில் நவமானதாக இதைப் பானம் பண்ணுவேன் என்று அவர் சொன்னபோது, அவருடைய மிகுதியான அன்பு, இராஜ்யத்தின் மகிழ்ச்சியில் முழு ஆசீர்வாதத்தையும் எட்டிப்பிடிக்கும் என்பதை அவர் செயலாற்றிக் காட்டினார். நாம் விசுவாசமுள்ளவர்களாக இருந்தால், "அவனுடைய எஜமான் அவனை நோக்கி: நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன்; உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி" (மத்தேயு 25:23) என்று சொல்லப்படும்போது நாம் அந்த மகிழ்ச்சியை ருசிப்பார்க்கலாம்.

**நாம் பிட்கிற அப்பம்**

அப்பம் இயேசுவின் சரீரத்தை அடையாளப்படுத்துகிறது. ஆனால் பஸ்காவின் விசேஷித்த போஜனத்தின்போது புளிப்பில்லா அப்பம், பரிமாறப்பட்டுக் கொண்டிருக்கும்போது, "இது என்னுடைய சரீரம்" என்று இயேசு கூறினார். வேதமாணவர்களாகிய நாம் புளிப்பு பாவத்திற்கு அடையாளம் என்பதை அறிந்திருக்கிறோம் (மத்தேயு 16:6; மாற்கு 8:15; லூக்கா 12:1).

"நாம் பிட்கக்கூடிய அப்பம்" என்ற சொற்றொடர் நம்முடைய பங்கெடுப்பைக் குறிக்கிறது. கிறிஸ்துவின் சரீரத்தின் வழியாக நீதிமானாக்கப்பட்ட நிலையை நாம் ஏற்றுக்கொண்டதினால், இனிவரும் காலத்தில் மனுக்குலத்தை ஆசீர்வதிப்பதற்காகவே கிறிஸ்துவின் சரீரத்தின் வழியாக நமக்குக் கொடுக்கப்பட்ட நீதிமானாக்கப்பட்ட நிலையை நாம் ஏற்றுக்கொண்டதின் நோக்கமாகும். அப்போது மனுக்குலம் பரிசுத்தமான பெரும்பாதையில் நடந்து முடிக்கும்போது அவர்கள் நீதிமானாக்கப்பட்ட நிலையைப் பெறுவார்கள்.

நாம் அநேகர் ஒரே அப்பமாக இருப்பதினால் நம் ஒவ்வொருவருக்கும் தனிதனியாக அப்பங்கள் கொடுக்கப்படுவதில்லை (அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம் என்று 1

கொரிந்தியர் 10:17 வசனம் கூறுகிறது. ஆயினும் சில மேம்பட்ட மொழிபெயர்ப்புகளில் - "நாம் அநேகர் ஒரே சரீரமாக இருப்பதினால், கிறிஸ்து என்ற ஒரே அப்பத்தில் பங்கெடுக்கிறோம்" என்று பெரும்பாலான பதிப்பாசிரியர்கள் கருதுகிறார்கள் - Waymouth,NASB, NIV, Rotherham, REB,English Standard Version,and Kingdom Interlinear) ஆகவே, "இதை வாங்கிப் புசியுங்கள் இது என்னுடைய சரீரமாக இருக்கிறது" (மத்தேயு 26:26) என்று இயேசு அப்பத்தைப் பிட்டு சிஷர்களுக்குக் கொடுத்ததுப்போல, நாம் ஒவ்வொருவரும் அந்த அப்பத்தின் ஒரு பகுதியைப் பிட்டு அதைப் புசிக்க வேண்டும். "அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை" (ரோமர் 12:1) என்று பவுல் மிக அருமையாகக் கூறுகிறார். "அப்பொழுது, இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி: ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்" (மத்தேயு 16:24).

பாலஸ்தீனாவில் அப்பத்தின் மதிப்பைக்குறித்து, International Standard Bible Encyclopidia வில் - "கிழக்கத்திய நாடுகளில் புனித ஸ்தலத்தின் தூய்மையைப்போல அப்பத்தின் தூய்மையும் மாற்றம் அடைவதில்லை. ... கோதுமை மற்றும் பார்லி பாலஸ்தீனாவில், அவர்களின் அடிப்படை உணவாக இருந்தபடியால், அப்பம் குறிப்பானவிதத்தில் பரிசுத்தமாகக் கருதப்பட்டது... அவர்கள் ஜீவன்... அறுவடையைச் சார்ந்திருந்தது. அந்த அறுவடை மழையைச் சார்ந்திருந்தது. ஆகவே அதன் விளைபொருளாகிய அப்பம் தெய்வீக செயல்பாடுகளினால் - அவர்களுக்கு தேவனிடத்தில் கிடைத்த பரிசாக அவர்கள் எண்ணியதால் தகுதியற்ற அவர்களை நித்தமும் அவருடைய பராமரிப்பை நினைவுகூர்ந்தார்கள். இந்நாளில் கிழக்கத்திய நாடுகளில், சாலை ஓரத்தில் ஒருவர் ஒரு அப்பத் துணிக்கையைக் கண்டால், அவர் அதை எடுத்து ஒரு தெரு நாய்க்கு வீசியோ, பறவைகள் அதைக் கொத்தி தின்னுவதற்கு ஏதுவாக மரக்கிளைகளிலோ, சுவற்றின் வெடிப்புகளிலோ வைப்பர்... இந்த அப்பத் துணிக்கைப் பொதுவாக தூசியில் காலின் கீழ் மிதிப்படக்கூடாது... எல்லா நன்மைகளையும் கொடுப்பவரிடமிருந்து வரக்கூடிய பரிசுத்தமும் மறைபொருளும் அதற்குள் அடங்கியுள்ளது."

அப்பம் பல நூற்றாண்டுகளாக ஜீவனுக்குரிய ஆதாரமாகக் கருதப்பட்டு வருகிறது. நம்முடைய மிகுந்த பயபக்திக்குப் பாத்திரமாக இயேசு தாமே அந்த ஜீவனைத் தரக்கூடிய அப்பம் என்று கூறுகிறார். அவருடைய மாம்சம் இந்த உலகத்தின் ஜீவனுக்காகக் கொடுக்கப்பட்டது. ஆகவே அதைச் சாதாரணமாக நினைக்கவோ, காலின்கீழ் போட்டு மிதிக்காமல் மிகுந்த பக்தியோடும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் (எபிரெயர் 10:29).

பார்லி, ஏழைகளின் உணவாகப் பயன்படுத்தப்பட்டது என்று McClintock, Strong's Encyclopedia கூறுகிறது. இதற்கான அடையாளத்தை லேவியராகமம் 23:11-ஆம் வசனத்தில் காணலாம். அதில் அந்தக் கதிர்க்கட்டு அசைவாட்டப்படுகிறது. இயேசு நமக்காக தரித்திரராகி, பலி செலுத்தினதை இது அடையாளப்படுத்துகிறது. ஐம்பது நாட்களுக்குப்பின் மணவாட்டியையும் திரள்கூட்டத்தாரையும் அடையாளப்படுத்தும், இரண்டு அப்பங்களை அசைவாட்டும் காணிக்கையாகச் செலுத்தினார்கள். தேவன், "இவ்வுலகத்தின் தரித்திரரை விசுவாசத்தில் ஐசுவரியவான்களாகவும், தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குத் தாம் வாக்குத்தத்தம் பண்ணின ராஜ்யத்தைச் சுதந்தரிக்கிறவர்களாகவும் தெரிந்துகொள்ள வில்லையா?" (யாக்கோபு 2:5; 1 கொரிந்தியர் 1:26-30). அனைவருக்கும் கிறிஸ்துவின் நீதியான வஸ்திரம் தேவைப்படுகிறது. இப்படியாக முழு சரீரமும் அவர் வழியாக இணைக்கப்படும். கிருபையினால் நாம் அனைவரும் கிறிஸ்துவுக்குள் நிற்கிறோம் (ஏசாயா 61:10).

நம்முடைய ஐக்கியம் அல்லது பொதுவான ஐக்கியத்தின் நிலை இதை அடிப்படையாகக் கொண்டதல்ல. ஏனெனில், ஆண்டவரின் ஜனங்கள் எங்கெல்லாம் காணப்படுகிறார்களோ, அவர்கள் அனைவரும் ஒரே சரீரத்தின் பகுதியாக இருக்கிறார்கள். ஒவ்வொரு தனிப்பட்ட சபையும் முழு சரீரத்தின் பிரதிநிதியாக இருக்கிறார்கள். ஆயினும் ஒவ்வொரு சபையும் மிகப் பெரிய சரீரத்தின் பகுதிகளாக இருக்கிறது - வெளியே அழைக்கப்பட்ட ஒவ்வொருவரும். கிறிஸ்துவுக்குள்ளான பெரிதான இரட்சிப்புக்கு, மிகப் பெரிய கூட்டமைப்பாகிய நாம் பங்காளிகள் என்பதை எப்போதும் நினைவில்கொள்ளுவோம்.

**அவருடைய சரீரமாகிய சபைக்காக**

இயேசு தம்முடைய ஜீவனை நமக்குக் கொடுத்து நம்மேல் அன்புகூர்ந்ததுப்போல, நாமும்

ஒருவரிலொருவர் அன்புகூர வேண்டுமென்று இயேசு நமக்குக் கட்டளையிட்டிருக்கிறார் (யோவான் 13:34). "இப்பொழுது நான் உங்கள்நிமித்தம் அநுபவிக்கிற பாடுகளில் சந்தோஷமடைந்து, கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை அவருடைய சரீரமாகிய சபைக்காக, என் மாம்சத்திலே நிறைவேற்றுகிறேன்" (கொலோசெயர் 1:24) என்று சொல்லப்படுகிறது. "அவர் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம்; நாமும் சகோதரருக்காக ஜீவனைக்கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம்" (1 யோவான் 3:16) என்று யோவானும் இதே கருத்தைக் கூறுகிறார்.

ஆண்டவரின் அடிச்சுவடுகளில் நாம் பின்பற்றி, அவருடைய சகோதரர்களுக்காக நம்முடைய ஜீவனைப் பலி செலுத்துவதற்காக நாம் எப்படிப்பட்ட சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம். கிறிஸ்துவின் அப்பத்திலும், பாத்திரத்திலும் நாம் பங்கெடுப்பதைப்போல, இந்த சுயநலமற்ற ஊழியத்தின் வழியாக நாம் கிறிஸ்துவின் பாடுகளில் பங்கடைகிறோம். தேவன் பேரிலுள்ள அன்பு மற்றும் கிறிஸ்துவின் பேரிலுள்ள அன்பின் கட்டினால், இரட்சிப்பின் திட்டத்தையும் நம்முடைய சகோதரர்களையும் அன்புகூருகிறோம். ஆகவே நாம் ஆசீர்வதிக்கப்பட்ட ஐக்கியத்தில், நினைவு கூருதலின் அடையாளங்களில் பங்கெடுப்போம். அடையாளத்தினால் மட்டுமல்ல, நம்முடைய கிரியைகள் ஆண்டவரின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி நித்தமும், ஒவ்வொரு மணி நேரமும், பலி பீடத்தின்மேல் தேவனுக்கும் மற்றும் சகோதரர்களுக்கும் நாம் ஊழியம் செய்ய வேண்டும்.

"அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும் ஏற்படுத்தினார். நாம் இனிக் குழந்தைகளாயிராமல், மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப்போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல், அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர்களாயிருக்கும்படியாக அப்படிச் செய்தார். அவராலே சரீரம் முழுவதும், அதற்கு உதவியாயிருக்கிற சகல கணுக்களினாலும் இசைவாய்க் கூட்டி இணைக்கப்பட்டு, ஒவ்வொரு அவயவமும் தன்தன் அளவுக்குத்தக்கதாய்க் கிரியைசெய்கிறபடியே, அது அன்பினாலே தனக்குப் பக்திவிருத்தி உண்டாக்குகிறதற்கேதுவாகச் சரீரவளர்ச்சியை உண்டாக்குகிறது" (எபேசியர் 4:13-16).

நம்முடைய தலையும், ஆண்டவருமாயிருக்கிற கிறிஸ்துவோடு ஐக்கியப்படக்கூடிய சிலாக்கியத்தில் விசுவாசத்தோடு தொடர்ந்து மகிழ்ந்து களிகூரலாம்.

ஒரே சரீரம்

# கிறிஸ்துவின் சரீரத்தின் ஐக்கியம்



"கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார்; சிறுமைப்பட்டவர்களுக்குச்
"அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்குபெறுகிறபடியால், அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம்" (1 கொரிந்தியர் 10:17).

Tom Gilbert

இஸ்ரயேலர்கள் 40 வருடங்கள் வனாந்தர பயணத்தில் செய்த விக்கிரக ஆராதனையைக் குறித்த பதிவுகள் மத்தியில், நினைவுகூருதலைப்பற்றிய பகுதி காணப்படுகிறது. இஸ்ரயேல் ஜனங்களின் மாதிரியைத் தவிர்க்கும்படி பவுல் நமக்கு ஆலோசனைக் கூறுகிறார். அவர்கள் வேசித்தனம் செய்து, புறஜாதியாரின் தெய்வங்களை வழிபட்டு, மன்னாவைக்குறித்து முறுமுறுத்து, யேகோவா தேவனை அடையாளப்படுத்தும் ஒரு பொன் கன்றுக்குட்டியைச் செய்தார்கள். வேவுகாரர்களின் தவறான அறிக்கையினால், அவர்கள் மோசே, ஆரோன் மற்றும் யேகோவா தேவனுக்கு விரோதமாகவும் முறுமுறுத்தார்கள். யேகோவா தேவனின் கிருபை, சிறப்பான வழிநடத்துதல் முன்னேற்பாடு மற்றும் பிரமாணங்களுக்கு மேலாக அவர்களின் இச்சைகள் தேவைகள் மற்றும் யோசனைகள் மேலோங்கியிருந்தது. அவர்கள் தேவனுடைய ஊழியங்களில் திருப்தியடையாமல், தங்களுடைய சொந்த வழிகளில் நடந்தார்கள். விக்கிரகாராதனைகளில் சுய விருப்பம், சுய சித்தம் என்ற விக்கிரகாராதனையே மிகுந்த அபாயகரமானதும், மிக தந்திரமுள்ளதாகவும் இருக்கிறது.

இதற்கிடையில், நினைவுகூருதலின் ஒரு எடுத்துக்காட்டைக் கூறி, இயேசுவின் பலியின் அடையாளங்களில் நாம் பங்கெடுப்பதினால் இயேசு வாழ்ந்து, சிலுவையில் தம்முடைய ஜீவனைக் கொடுத்ததன் நோக்கத்திற்கு ஊழியம் செய்வதற்காக நாம் நம்மை அர்ப்பணித்தோம் என்பதை நிரூபிக்கக்கூடியவர்களாக இருக்கிறோம் என்று பவுல் குறிப்பிடுகிறார். நாம் அந்த அடையாளங்களைப் புசிப்பதற்கும், நியாயப்பிரமானத்தின் கீழ் செலுத்தப்பட்ட பலிகளை இஸ்ரயேலிலுள்ள ஆசாரியர்கள் புசிப்பதற்கும், இடையிலுள்ள காரியங்களை பவுல் ஒப்பிட்டுக் காண்பிக்கிறார். லேவியராகமம் 6:14-30 வசனங்கள் போஜன பலிகள் மற்றும் பாவநிவாரண பலிகளைப்பற்றி பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட பலிகளைப் புசிக்கக்கூடிய ஆசாரியனும், "அர்ப்பணிக்கப்பட்டவர்களாக இருப்பார்கள்" (வசனங்கள் - 18, 27). அல்லது ஆலயத்திலோ, ஆசரிப்புக்கூடாரத்திலோ பணி செய்வதற்குத் தங்களை அர்ப்பணித்ததைக் காட்டுகிறது.

நாம் இயேசுவின் பலியின் அடையாளங்களைப் புசித்தால், பிதாவுக்கும், குமாரனுக்கும் நம்முடைய வாழ்க்கையை அர்ப்பணித்துவிட்டோம் என்று நாம் அறிக்கையிடுவதாகப் பொருள் என்று பவுல் கூறுகிறார். அதற்குப்பின் நம்முடைய வாழ்க்கை நம்முடைய சொந்த விருப்பங்களினாலும், சுய சித்தத்தினாலும் ஆட்கொள்ளப்பட்டால், அப்போது நாம் விக்கிரகாரதனைச் செய்பவர்களாக இருப்போம்.

நம்முடைய ஆதார வசனத்தின் சிந்தையை பவுல் இங்கு இணைக்கிறார். ஏனெனில், ஒரே அப்பம் மட்டுமே உள்ளது (இயேசுவின் சரீரம்). மேலும், நாம் அனைவரும் அந்த ஒரே அப்பத்தில் பங்கெடுப்பவர்கள், அதற்குப் பின் அநேகராகிய நாம் இயேசுவின் அர்ப்பணிக்கப்பட்ட சீஷர்களாகிய ஒரே சரீரமாக (ஐக்கியம்) இருக்கிறோம்.

**ஐக்கியம்**

கிறிஸ்துவின் சரீரத்தின் ஐக்கியத்தின் பொருளே - மீண்டும் மீண்டும் எழுதுவதன் வழியாக பவுல் சபைகளைச் சந்தித்தார். தம்முடைய சீஷர்கள் மத்தியில் உறுதியான ஐக்கியம் இருக்க வேண்டுமென்ற இயேசுவின் விருப்பத்தை பவுல் ஆழமாக அறிந்திருந்தார்.

இந்த உலகத்திற்குச் சாட்சியாக தன்னுடைய சீஷர்கள் ஐக்கியப்பட்டிருக்க வேண்டுமென்று இயேசு ஜெபித்தார். "நான் இவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுகிறேன். அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன். நாம் ஒன்றாயிருக்கிறதுபோல அவர்களும் ஒன்றாயிருக்கும்படி, நீர் எனக்குத்தந்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன். ஒருமைப்பாட்டில் அவர்கள்

தேறினவர்களாயிருக்கும்படிக்கும், என்னை நீர் அனுப்பினதையும், நீர் என்னில் அன்பாயிருக்கிறது போல அவர்களிலும் அன்பாயிருக்கிறதையும் உலகம் அறியும்படிக்கும், நான் அவர்களிலும் நீர் என்னிலும் இருக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்" (யோவான் 17:20-23).

கிறிஸ்தவர்கள் இப்படியாகவே வாழ்ந்தார்கள் என்று வரலாற்றில் பதிவுகள் காணப்படுகிறதா? இல்லை, நிச்சயமாக இல்லை. ஐக்கியம், இசைந்திருத்தல், இசைந்து செயல்படுதல் போன்ற காரியங்களைக்காட்டிலும், பிரிவுகள், சண்டைச் சச்சரவுகள் அதிகமாகக் காணப்படுகிறது. வெவ்வேறு கிறிஸ்தவ நம்பிக்கையுள்ளவர்கள் மத்தியில் யுத்தங்களும் உபத்திரவங்களும் காணப்படுகிறது. இன்று சுமார் 41,000 தனிப்பட்ட கிறிஸ்துவ அமைப்புகள் உலகமெங்கும் காணப்படுகிறது.

இவ்வளவு அமைப்புகளும், பிரிவுகளும் காணபடுவதன் காரணமென்ன? (1) வசனங்களின் விளக்கங்கள் மற்றும் நம்பிக்கைகள், (2) சபையின் ஆராதனை மற்றும் ஒழுங்குகள், (3) சபையின் அமைப்பு, அதிகாரம், (4) மனிதர்களுக்குள் காணப்படும் வித்தியாசங்கள், தாலந்துகள், தீவிர உணர்வுகள் போன்றவைகளில் ஒத்துபோகாத நிலை. சிலர் வேத அறிவை வலியுறுத்துவார்கள், சிலர் உருவாக்கும் ஆற்றலோடும், கலைரசனையோடும் ஆராதிக்க விரும்புவார்கள், சிலர் ஆராதனைக்கு மட்டும் கவனம் செலுத்துவார்கள்.

(5) பாரம்பரியத்திலிருக்கும் வித்தியாசங்கள் பல நூற்றாண்டுகளாக தலைமுறை தலைமுறையாக வந்துக்கொண்டிருக்கிறது. எடுத்துக்காட்டாக - சில கிறிஸ்தவர்கள் நவீன இசையைப் பயன்படுத்துகிறார்கள், சிலர் பாரம்பரிய பாமாலைகளைப் பயன்படுத்துகிறார்கள். (6) சில கிறிஸ்தவர்கள் ஒருவரோடொருவர் ஒத்துப்போவதில்லை. இந்தக் கிறிஸ்தவர்கள், பெருமை, சுயநலம் மற்றும் பிடிவாதம் போன்ற காரியங்களோடுப் போராடுகிறார்கள். சில முரண்பாடுகள் தனிப்பட்டவர்களுக்குப் பாதிப்புகளை ஏற்படுத்துகிறது. ஒருவேளை நாம் அன்பிலும் மன்னிக்கக்கூடிய குணத்திலும் வளர்ச்சியடைந்து, அவருக்கு ஏற்ற ஜனங்களாக இருக்க வேண்டுமென்று வலியுறுத்தும்படியாக இயேசு அன்பு மற்றும் மன்னிக்கக்கூடிய காரியங்களை மையப்படுத்திப் போதிப்பதற்குக் காரணமாக இருந்திருக்க வேண்டும்.

**வசனங்கள் என்ன கூறுகிறது?**

* "இதோ, சகோதரர் ஒருமித்து வாசம்பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது?" (சங்கீதம் 133:1).

* "மிகுந்த மனத்தாழ்மையும் சாந்தமும் நீடிய பொறுமையும் உடையவர்களாய், அன்பினால் ஒருவரையொருவர் தாங்கி, சமாதானக்கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்வதற்கு ஜாக்கிரதையாயிருங்கள். உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டதுபோல, ஒரே சரீரமும், ஒரே ஆவியும் உண்டு; ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும், எல்லாருக்கும் ஒரே தேவனும் பிதாவும் உண்டு; அவர் எல்லார்மேலும், எல்லாரோடும், உங்கள் எல்லாருக்குள்ளும் இருக்கிறவர். கிறிஸ்துவினுடைய ஈவின் அளவுக்குத்தக்கதாக நம்மில் அவனவனுக்குக் கிருபை அளிக்கப்பட்டிருக்கிறது.

"மேலும் நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரணபுருஷராகும்வரைக்கும், பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும், அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும் ஏற்படுத்தினார்" (எபேசியர் 4:2-7, 11-13).

**இதற்கு மனத்தாழ்மையே திறவு கோல்**

ஒவ்வொரு சரீர அங்கத்தினர்களுக்கும் விதவிதமான தாலந்துகளையும் வரங்களையும் கொடுத்து, அவர்களுக்குள் வேறுபாட்டை இயேசு உண்டுபண்ணினார் என்று பவுல் கூறுகிறார். ஆயினும், இந்த வேறுபாடுகள் இருந்தாலும், நாம் ஒரே ஆவி உடையவர்களாக இருக்க வேண்டுமென்று அவர் கூறுகிறார். இதை நாம் எவ்வாறு செய்வது? மனத்தாழ்மையைக்கெண்டு.

சக கிறிஸ்தவரோடு நாம் ஒத்துப்போகாவிட்டால், "நாம் எவ்விதத்தில் தவறினோம்" என்ற கேள்வியை நாமே கேட்டுக்கொள்ள முடியுமா? உண்மையான தாழ்மை நம்முடைய இருதயத்தில் இருந்தால் மட்டும் இதைச் செய்ய முடியும். பின் தொடர்ந்துவரும் சம்பாஷணையிலும், தனிப்பட்ட படிப்புகளிலும், நம்முடைய நிலை ஆராயப்படும்போது, மற்றவர்கள்

நம்மை வித்தியாசமாகக் கண்ணோக்குவதற்கு நாம் சுயாதீனம் கொடுப்போமா? உண்மையான தாழ்மை இருந்தால் மட்டுமே இவைகள் அனுமதிக்கப்படும்.

"மற்றவர்களைக்காட்டிலும் நாம் எவ்விதத்திலும் சிறந்தவரல்ல" என்று ஒவ்வொரு கிறிஸ்துவின் சரீர அங்கத்தினரும் மனதார நினைத்து, தேவனுடைய பிள்ளைகளின் மத்தியிலுள்ள வேறுபாடுகளுக்கு மதிப்புக் கொடுத்தால்மட்டுமே, இந்த சுவிசேஷ யுகத்தில் உண்மையான ஐக்கியத்தைப் பெற முடியும். இந்த மதிப்பு ஒவ்வொரு மனிதரையும், தேவனுடைய சிருஷ்டிப்பின் ஒரு பகுதி என்பதை உறுதிப்படுத்திகொள்ள வேண்டும். இதில் புதிய சிஷ்டிகளும் அடங்கும். மனத்தாழ்மை என்பது நம்முடைய இருதயத்திலும், சிந்தையிலும் ஆழமாகப் பதிந்திருக்க வேண்டும்.

"அல்லாமலும், எனக்கு அருளப்பட்ட கிருபையினாலே நான் சொல்லுகிறதாவது; உங்களில் எவனானாலும் தன்னைக்குறித்து எண்ணவேண்டியதற்கு மிஞ்சி எண்ணாமல், அவனவனுக்குத்தேவன் பகிர்ந்தவிசுவாச அளவின்படியே, தெளிந்த எண்ணமுள்ளவனாய் எண்ணவேண்டும். ஏனெனில், நமக்கு ஒரே சரீரத்திலே அநேக அவயவங்களிருந்தும், எல்லா அவயவங்களுக்கும் ஒரே தொழில் இராததுபோல, அநேகராகிய நாமும் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாயிருக்க, ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறோம். நமக்கு அருளப்பட்ட கிருபையின் படியே நாம் வெவ்வேறான வரங்களுள்ளவர்களானபடியினாலே, நம்மில் தீர்க்கதரிசனஞ்சொல்லுகிறவர் … ஊழியஞ்செய்கிறவன் … போதிக்கிறவன் … புத்திசொல்லுகிறவன் … பகிர்ந்துகொடுக்கிறவன் … முதலாளியானவன் … இரக்கஞ்செய்கிறவன் … உங்கள் அன்பு மாயமற்றதாயிருப்பதாக. தீமையை வெறுத்து, நன்மையைப்பற்றிக்கொண்டிருங்கள். சகோதரசிநேகத்திலே ஒருவர்மேலொருவர் பட்சமாயிருங்கள்; கனம்பண்ணுகிறதிலே ஒருவருக்கொருவர் முந்திக்கொள்ளுங்கள். ஒருவரோடொருவர் ஏகசிந்தையுள்ளவர்களாயிருங்கள்; மேட்டிமையானவைகளைச் சிந்தியாமல், தாழ்மையானவர்களுக்கு இணங்குங்கள்; உங்களையே புத்திமான்களென்று எண்ணாதிருங்கள்" (ரோமர் 12:3-10, 16).

தேவனுடைய பார்வையில், நான் மற்றவர்களைக் காட்டிலும் தேவனுடைய இரட்சிப்புக்கும் அன்புக்கும் பாத்திரவானல்ல என்பதை என் மனம் அங்கீகரித்தால் - அதுவே தாழ்மையாகும். ஏனெனில், ஒருவரும் தேவனுடைய பார்வையில் பாத்திரவானல்ல. என்னுடைய தேவைகள் மற்றவர்களின் தேவைகளைக்காட்டிலும் முக்கியமானதல்ல. என் புரிந்துகொள்ளுதல் எனக்கு விலையேறப்பெற்றதென்று நான் நம்பினாலும், பிறருக்கு அது முக்கியமாக இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. மற்றவர்களைக்காட்டிலும் என்னுடைய புரிந்துகொள்ளுதல் மிகச் சரியாக இருக்கிறதென்றும், மற்றவர்களின் புரிந்துகொள்ளுதல் தவறு என்றும் நம்புகிறேன். மற்றவர்கள் தேவனால் வழிநடத்தப்படுவதைக் கூறும்போது, நாம் அதைக் குறைவாக மதிப்பிடக்கூடாது.

விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவைகளைக்குறித்த விஷயத்தில், நம்மெல்லாருக்கும் அறிவு உண்டென்று நமக்குத் தெரியுமே. அறிவு இறுமாப்பை உண்டாக்கும், அன்போ பக்திவிருத்தியை உண்டாக்கும். ஒருவன் தான் ஏதேனும் ஒன்றை அறிந்தவனென்று எண்ணிக்கொள்வானானால், ஒன்றையும் அறியவேண்டியபிரகாரமாக அவன் இன்னும் அறியவில்லை" (1 கொரிந்தியர் 8:1-2).

"அன்பு ஒருக்காலும் ஒழியாது. தீர்க்கதரிசனங்களானாலும் ஒழிந்துபோம், அந்நிய பாஷைகளானாலும் ஓய்ந்துபோம், அறிவானாலும் ஒழிந்துபோம். நம்முடைய அறிவு குறைவுள்ளது, நாம் தீர்க்கதரிசனஞ் சொல்லுதலும் குறைவுள்ளது. நிறைவானது வரும்போது குறைவானது ஒழிந்துபோம்" (1 கொரிந்தியர் 13:8-10).

**போட்டி மனப்பான்மையைத் தவிர்க்கவும்**

சுய - முக்கியத்துவத்தின் உணர்வுகளையும், மற்றவர்களைக்காட்டிலும் நாம் அதிக மதிப்புள்ளவர்கள் என்ற சிந்தைகளைத் தவிர்க்கும்போது, நமக்குள்ளிருக்கும் அந்தப் போட்டி மனப்பான்மை நீக்கப்படும். நம்முடைய சிந்தையில் இந்தப் போட்டி மனப்பான்மை அகற்றப்படும்போது, நம்முடைய இருதயத்தில் சந்தோஷமும், மற்றவர்களைப் புரிந்துகொள்ளக்கூடிய நிலையும் அதிகரிக்கும். இதுவே உண்மையான தாழ்மை. இப்படியாகத்தான் நாம் சுயவிருப்பங்களை முழுமையாகத் தவிர்க்க முடியும். அந்நேரம் முதல் நாம், "நம்முடைய சத்துருக்களையும் நேசிக்க வேண்டும்" என்ற பொன்னானப் பிரமாணத்தை எளிதில் நடைமுறைப்படுத்த முடியும்.

நாம் தேவனுடைய விசேஷத்த பொக்கிஷங்களாக இருப்போம். இது ஒரு "தெய்வீக புதிராகும்" - இரண்டுமே உண்மையானது. தேவனோடு

நாம் கொண்டிருக்கும் தொடர்பு நிறமாலை பகுப்பைப் போன்றது (spectrum). ஒரு முனையில் நாம் தேவனுக்கு விசேஷித்தவர்களாக இருக்கிறோம். மற்றொரு முனையில் நாம் அவர் பார்வையில் ஒன்றும் இல்லாதவர்கள் போலிருக்கிறோம். இந்த இரண்டு கோணங்களுக்குமிடையில் நம்முடைய ஆண்டவராம் இயேசு கிறிஸ்துவே பாலமாக இருக்கிறார்.

என்னைக்காட்டிலும் வித்தியாசமான நம்பிக்கை உடையவர்களிடத்தில் எந்தவிதமான போட்டி மனப்பான்மையும் நாம் வளர்த்துவிடக்கூடாது. இந்த யுகத்தில் இவைகளைச் சரிப்படுத்துவதற்கான முயற்சிகளை நாம் எடுப்பதற்கு அவசியமில்லை. காலபோக்கில் இந்த வித்தியாசங்களை தேவனே சீர்படுத்துவார். நாம் இந்த வேறுபாடுகளை நினைத்து கவலைப்பட வேண்டாம். நாம் தவறு செய்கிறவராக இருந்தால் மட்டுமே கவலைப்பட வேண்டும்.

மற்றவர்களுடைய பார்வைகளையும் கண்ணோட்டங்களையும் நாம் மாற்ற முடியாது. தேவன் அவர்களின் இருதயத்தைத் திறந்தால் மட்டுமே அவர்கள் மாறுவார்கள். நாம் மற்றவர்களை ஜெயித்துவிட்டோம் என்ற உணர்வு நமக்குள் எப்போதும் வந்துவிடக்கூடாது. பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான தேவனுடைய கருவிகளாக இப்போது நாம் செயல்பட முடியாது. ஆயினும், நம்முடைய வித்தியாசமான கருத்துக்களை, மரியாதையோடு பேசலாம். இப்படிச் செய்வதினால், ஒருவரையொருவர் நாம் கனப்படுத்திக் கொண்டு பிரிவுகளில் நாம் பாலம் அமைக்கலாம்.

மற்ற வித்தியாசங்கள் எந்த வழியிலும் நம்மை மந்தமாக்காது. ஏனெனில், அவர்களை விட நாம் வித்தியாசமானவர்கள். இப்படியாக, மற்ற வித்தியாசங்கள் (நம்பிக்கை, ஊழியம், கிரியைகள்... ) நம்மை பயமுறுத்த வேண்டியதில்லை.

**பிரிவுகளின் மத்தியில் தாழ்மையைத் தக்க வைத்துக்கொள்ளுதல்**

நாம் அனைவரையும் சந்திக்கலாம், அவர்களைக் குற்றஞ்சாட்டாதபடிக்கு அவர்களோடு உறவாடலாம். மற்றும் நம்மை மேன்மையானவர்கள் என்று காண்பித்துக்கொள்ள வேண்டாம். தேவனுடைய குணலட்சணங்களை சீரழிக்கக்கூடிய சில நம்பிக்கைகள் - நித்திய ஆக்கினைப்போன்ற நம்பிக்கை இதற்கு வசனங்கள் ஆதரவளிக்காவிட்டாலும், இந்த விசுவாசத்தைக் கொண்டிருக்கும் ஜனங்களைக்காட்டிலும் நம்மை மேன்மையாக எண்ணிக்கொள்ள வேண்டாம்.

மற்றவர்களின் நிலையைப் பார்க்கும்போது மாய்மாலத்தைக் காணலாம். அதைத் தாழ்மையோடும், இரக்கத்தோடும் குறிப்பிடலாம். நாம் எதை நம்புகிறோமோ, அதையே நம்புகிறோம். ஏனெனில், நம்முடைய தேவனுடைய வார்த்தைகளைப்பற்றிய படிப்பும், நம்முடைய கிறிஸ்துவ அனுபவமும் நம்முடைய இருதயத்தில் இப்படிப்பட்ட முடிவுகளுக்கு வழிநடத்துகிறது. உண்மையில் மற்ற விசுவாசமுள்ள கிறிஸ்தவர்களிடமும் இது காணப்படுகிறது. மற்றவர்களின் முடிவுகளை ஒத்துக்கொள்ளாதபோதிலும், நாம் அவர்களை மதிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். தேவன் அவர்களை அழைக்காமல், அவருடைய ஆவியினாலே அவர்களைப் பெலப்படுத்தி, அதிகாரம் கொடுக்காமல், அவர்கள் சத்தியத்தைப் புரிந்துகொள்ள வேண்டும் என்று நாம் எப்படி எதிர்பார்க்க முடியும்?

வசனங்களைப் பொறுத்தவரையில் ஒரே சிந்தையுள்ளவர்களைச் சந்திப்பது இயல்பானக் காரியம். ஆனால் மற்ற சபைகளைக் குறைவான விசுவாசமுள்ளவர்களாகக் காண்பது தவறாகும். சமாதானத்திற்கும், ஆறுதலுக்கும் ஏற்படும் - பிரிவுகள் தீமையல்ல. பிரிந்த இரண்டு வகுப்புகள், ஒருவரையொருவர் ஆவியில் குறைவுள்ளவர்கள் என்றும், விசுவாசத்தில் குறைவுள்ளவர்கள் என்றும் நியாந்தீர்ப்பது மிக தவறு.

**பவுலின் நாட்களில் இருந்த பிரிவுகள்**

அப்போஸ்தலனாகிய பவுலின் நாட்களில் சபையில் பிரிவுகள் இருந்தன. "உங்களைப் புகழாமல் இதைக்குறித்து உங்களுக்குக் கட்டளைகொடுக்கிறேன்; நீங்கள் கூடிவருதல் நன்மைக்கேதுவாயிராமல், தீமைக்கேதுவாயிருக்கிறது. முதலாவது, நீங்கள் சபையிலே கூடிவந்திருக்கும்போது, உங்களில் பிரிவினைகள் உண்டென்று கேள்விப்படுகிறேன்; அதில் சிலவற்றை நம்புகிறேன். உங்களில் உத்தமர்கள் இன்னாரென்று வெளியாகும்படிக்கு மார்க்கபேதங்களும் உங்களுக்குள்ளே உண்டாயிருக்கவேண்டியதே" (1 கொரிந்தியர் 11:17-19).

நாம் அனைவரும் ஒருமித்து சிந்திக்க மாட்டோம். மற்றும் அனைவரும் ஒருமித்துக் கூடமாட்டோம். சிலர் ஆண்டவரால் அங்கீகரிப்பைப் பெற்றிருப்பார்கள். சிலர் அங்கீகரிப்பைப் பெற்றிருக்கமாட்டார்கள். ஆயினும் இந்த அழைப்பு ஐக்கியத்திற்காகவே அழைக்கப்பட்டிருக்கிறது என்று தெளிவாகக் கூறப்படுகிறது.

"சத்தியத்தின் பரிசுத்தத்தைப் பாதுகாப்பதற்காக நாம் இவைகளைச் செய்கிறோம்" என்று சொல்லிக்கொண்டு பிரிவுகள் மற்றும் பேதங்கள்

இருக்கும் இடத்தில், தங்களைத்தாங்களே சுய நீதியினால் போர்த்திக்கொள்ளக்கூடாது. ஒருவேளை நாம் சுய நீதியால் நம்மை மூடிக்கொண்டால், அது மற்றவர்களின் கருத்துக்களை நாம் பொறுத்துக்கொள்ள இயலாதவர்களாகவும், அதைப் புரிந்துகொள்ள முயற்சிக்க முடியாமல், நம்மைச் சுற்றி புகையைப்போல திரையைப் போட்டுக்கொள்ளக் கூடியவர்களாக இருப்போம்.

**மனத்தாழ்மை, சீரமைப்பைக் கட்டாயப் படுத்துவதில்லை**

மற்றவர்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவிக்கும் உரிமைகளை சில நேரங்களில், சபையின் மூப்பர்கள் கொடுப்பதில்லை. சில நேரங்களில் மீண்டும் கிறிஸ்துவுக்குள் சுதந்தரமாக இருப்பதற்கு சிலர் பிரிந்து போகிறார்கள்.

நம்முடைய சக கிறிஸ்தவர்களுக்கு அர்ப்பணிக்கப்பட்ட வாழ்க்கையை வாழக்கூடிய ஒரு மாதிரியாக நாம் இருப்பதாக எண்ணுகிறோம். ஆனால் இக்காலத்தில் நாம் ஒரு பகுதியை மட்டுமே அறிந்திருக்கிறோம் என்று பவுல் சொன்னதை நாம் நினைவில்கொண்டால், இது மற்றவர்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாக இருந்தாலும், தேவனுக்கு முன்நின்று நியாயத்தீர்ப்பைப் பெறுவதற்கான அடிப்படை மாதிரியாக இது இருப்பதில்லை.

தங்களுடைய கருத்துக்களை, மற்றவர்கள் ஏற்றுக்கொள்ளும்படிக்கு ஒருவர் மிகுந்த ஆர்வத்தோடு கட்டாயப்படுத்தி நம்ப வைக்கலாம். இது அதிகப்பட்டசமான அக்கறையினிமித்தம் தோன்றலாம். ஒருவேளை அவர்கள் பார்க்கும் வண்ணமாக நீங்கள் பாராமல் மகிழ்ச்சியாக இருப்பது எப்படியென்று புரிந்துகொள்வது அவர்களின் கற்பனைக்கு அப்பார்ப்பட்டதாக இருக்கின்றது. அல்லது ஒருவேளை அவர்கள் பார்த்ததை நீங்கள் பார்த்தால்மட்டுமே அவர்கள் மகிழ்ச்சியாக இருக்கமாட்டார்கள். இப்படியாக ஊழியஞ்செய்து மற்றவர்களை நம்ப வைக்கக்கூடிய காரியத்திற்கும், மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாக நிரூபிக்கப்படக் கூடிய வேத படிப்பின் மூலம் அறிந்துகொள்ளும் கருத்துக்களை மற்றவர்களோடு பகிர்ந்துக் கொள்வதற்கும் மிகப் பெரிய வித்தியாசமுண்டு.

**தாழ்மை சுயாதீனத்தையும், வேற்றுமையையும் தழுவுகிறது**

நித்திய உபத்திரவம், அழியா ஆத்துமா, திருத்துவம் போன்றவற்றில் நம்பிக்கையுள்ள சபைகளுக்குத் தொடர்ந்துபோவதை, வேத மாணவர்களாகிய நாம் விரும்புவதில்லை. ஆனால் நாம் கட்டாயமாகப் பொறுத்துக்கொள்ள வேண்டிய மற்றும் சில வேறுபாடுகள் உண்டு. ஏனெனில், நாம் ஒப்புக்கொள்ளக்கூடிய தேவனுடைய திட்டத்திற்கு எதிராக புரட்சி செய்வதில்லை. அல்லது தேவன் எதிர்பார்க்கும் குணங்களை அடையக்கூடிய வளர்ச்சிகளைப்பற்றி நம்முடைய புரிந்துகொள்ளுதல் அவர்களுக்குப் பாதிப்புகளை ஏற்படுத்துவதில்லை.

* ஆயிரம் வருடம் எங்கு துவங்கி, எங்கு முடிகிறது?

* புதிய உடன்படிக்கை - சுவிசேஷ யுகத்தின் துவக்கத்திலா அல்லது ஆயிரவருட ஆட்சியிலா? அல்லது ஆயிரம் வருட ஆட்சியின் முடிவிலா நிகழும்?

* காலகணக்கைப் பொறுத்தவரையில் சகோதரர் ரசல், ஒரு அற்புதமான ஆலோசனையைத் தந்திருக்கிறார் (R5348). "நம்மை ஆண்டவரோடும் அவரோடு உண்மையாக இருப்பவர்களோடும் ஒருமித்து கட்டக்கூடிய அன்பின் விலையேறப்பெற்ற கட்டுகளை நாம் முறித்துப் போடாதபடிக்கு ஒருநாள் அல்லது ஒரு வருடமாக எந்தவிதமான சண்டை சச்சரவுகளையும் நீடித்துக்கொள்ள வேண்டாம். விசேஷமாக நாம் அறியாத காரியங்களைக்குறித்து சம்பாஷணைகள் நடக்கும்போது, நாம் மிக எச்சரிப்போடிருக்க வேண்டும். ஒரு தரம் பரிசுத்தவான்களிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட விசுவாசத்திற்காக உண்மையோடு போராடும்போது, ஐக்கியத்தில் பிளவுகள் சில நேரங்களில் தேவைப்படுகிறது - தெய்வீக திட்டத்திலுள்ள விசுவாசம், இரட்சகரைக்குறித்து, அவருடைய ஆற்றல் மிக்க மரணம் - காலகணக்கு மற்றும் காலகணக்கைச் சார்ந்த அனைத்தையும் தள்ளுபடி செய்வதுபோல இவைகளைத் தள்ளிவிட முடியாது."

ஞானமுள்ள மற்றொரு ஆலோசனையையும் சகோ. ரஸல் கூறுகிறார் - Studies in the Scriptures, Volume 6, page 240-242. "விசுவாசத்தில் ஒருமனப்பாடு விரும்பத்தக்கது - அதற்கு நாம் முயற்சிக்க வேண்டும். ஆனால் இப்படிப்பட்ட ஐக்கியத்தை நோக்கி நாம் செல்ல இயலாது. "பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புகொடுக்கப்பட்ட விசுவாசத்திற்கு" ஏற்ற ஐக்கியத்தைப் பரிசுத்தத்தோடும் எளிமையாகவும், சிறிய காரியங்களில் வெவ்வேறு கண்ணோட்டங்களில் பார்க்கக்கூடிய சுயாதீனத்தோடும் வளர்த்துக்கொள்ள வேண்டும். சுவிசேஷத்தின் கோட்பாடுகளே ஐக்கியத்தின் அஸ்திபாரமாக இருக்க வேண்டும் என்று வசனங்கள் குறிப்பிடுகிறது. (1) விலையேறப்பெற்ற இரத்தத்தினால், நாம் மீட்கப்பட்டு நீதிமானாக்கப்பட்டோம் என்ற விசுவாசத்தை கிரியைகளினால் வெளிப்படுத்த வேண்டும். (2) நம்முடைய சுத்திகரிப்பு - நம்முடைய

ஆண்டவருக்கும் சத்தியத்திற்கும் செய்யப்படக்கூடிய ஊழியங்கள் - இதில் சகோதரர்களுக்கான ஊழியமும் அடங்கும். (3) இந்த முக்கியமான காரியங்களைத்தவிர வேறெந்தவிதத்திலும் நாம் ஐக்கியப்பட வேண்டிய அவசியமில்லை என்று வசனங்கள் குறிப்பிடுகிறது. இதற்குமேல் எல்லா காரியங்களிலும், அவரவர் தேவைக்கேற்ப முழு சுயாதீனம் கொடுக்கப்படலாம்."

ஐக்கியத்தைப் பொறுத்தவரையில், நம்முடைய நம்பிக்கையும், பழக்கவழக்கமுமே நமக்கு ஒரு சவாலாக இருக்கிறது. (1) வேதாகமத்தின் விளக்கவுரைகள் மற்றும் நாம் தேவனோடு கொண்டிருக்கும் உறவைப் பொறுத்தவரையில் நாம் சமஅளவில் நிற்கலாம். (2) பெரும்பாலான வாரக்கூடுகைகள் வெளிப்படையாக நடத்தப்படுகிறது. இப்படியாக நாம் வேதத்தை வாசித்து, பல முடிவுகளுக்கு வரலாம். நம்முடைய முடிவுகளைப் பகிர்ந்துகொள்வதற்கான நம்முடைய கூடுகை ஒரு பொது கூட்டமாகவும் இருக்கலாம்.

"வரங்களில் வித்தியாசங்கள் உண்டு, ஆவியானவர் ஒருவரே. ஊழியங்களிலேயும் வித்தியாசங்கள் உண்டு, கர்த்தர் ஒருவரே. கிரியைகளிலேயும் வித்தியாசங்கள் உண்டு, எல்லாருக்குள்ளும் எல்லாவற்றையும் நடப்பிக்கிற தேவன் ஒருவரே." இதிலிருந்து பிறந்த ஒருமைப்பாட்டை பவுல் வலியுறுத்தும்போது, மேற்கூறப்பட்ட வேறுபாட்டைக்குறித்துப் பேசினார். ஆவியினுடைய அநுக்கிரகம் அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று அளிக்கப்பட்டிருக்கிறது. எப்படியெனில், ஒருவனுக்கு ஆவியினாலே ஞானத்தைப் போதிக்கும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே அறிவை உணர்த்தும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே விசுவாசமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே குணமாக்கும் வரங்களும், வேறொருவனுக்கு அற்புதங்களைச் செய்யும் சக்தியும், வேறொருவனுக்குத் தீர்க்கதரிசனம் உரைத்தலும், வேறொருவனுக்கு ஆவிகளைப் பகுத்தறிதலும், வேறொருவனுக்குப் பற்பல பாஷைகளைப் பேசுதலும், வேறொருவனுக்குப் பாஷைகளை வியாக்கியானம்பண்ணுதலும் அளிக்கப்படுகிறது. இவைகளையெல்லாம் அந்த ஒரே அவியானவர் நடப்பித்து, தமது சித்தத்தின்படியே அவனவனுக்குப் பகிர்ந்து கொடுக்கிறார். எப்படியெனில், சரீரம் ஒன்று, அதற்கு அவயவங்கள் அநேகம்; ஒரே சரீரத்தின் அவயவங்களெல்லாம் அநேகமாயிருந்தும், சரீரம் ஒன்றாகவேயிருக்கிறது; அந்தப்பிரகாரமாகக் கிறிஸ்துவும் இருக்கிறார்" (1 கொரிந்தியர் 12:4-13).

### கிறிஸ்துவ செய்தி உள்ளடக்கமானது

சில சகோதரர்கள் இயல்பாகவே ஜனங்களை தன் வசப்படுத்துவதற்கான திறமையை உடையவர்களாக இருப்பார்கள். மீதியுள்ள நாம் இப்படிப்பட்ட காரியங்களைச் செய்வதற்கு கடுமையாக முயற்சிக்க வேண்டும். ஆனால் இந்தத் திறமையைப் பெற்றிருப்பது நம்முடைய ஆண்டவரின் இராஜ்யத்தின் வேலைகளில் மேலும் பயனுள்ளதாக இருக்கும். இந்த வாழ்க்கையில் ஜனங்கள் அனுபவிக்கும் காயங்களிலிருந்து வெளியேற்றுவதற்கும், ஆயிரவருட ஆட்சியைப்பற்றி தவறாக அவர்களின் புரிந்துகொள்ளுதல் மற்றும் தவறாக மற்றவர்களால் போதிக்கப்பட்டதிலிருந்தும், இந்த உலகத்தில் பிரிந்து வாழ்ந்த ஒவ்வொருவரும் இணைந்து, தேவன்மேல் நம்பிக்கைக்கொண்டு, உலகளாவிய குணங்களாகிய ஒருமனப்பாடு, சமாதானம் மற்றும் அன்பின் அடிப்படையில் இணைந்து செயல்பட நாம் உதவி செய்ய வேண்டும்.

அநேகரால், அறிவிக்கப்பட்ட, "கிறிஸ்தவ செய்திகள்" புறம்பாக்கப்பட்ட செய்திகளாக இருக்கிறது. ஆனால், இயேசு பிறந்தபோது, வானதூதர்களால் அறிவிக்கப்பட்ட செய்தி - ஏற்றுக்கொள்ளக்கூடிய செய்தியாக இருந்தது. "எல்லா ஜனங்களுக்கும் மகிழ்ச்சியை உண்டாக்கும் நற்செய்தி..." நம்முடைய உள்ளடக்கத்தை ஐக்கியத்தில் நாம் நடைமுறைப்படுத்துகிறோமா? விசேஷமாக, நம்முடைய ஐக்கியத்தின் மத்தியில் இதைப் பழக்கப்படுத்துகிறோமா?

சீஷர்கள், கனத்தைத் தேடினபோது, "உங்களில் பெரியவனாயிருக்கிறவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவன். தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்" (மத்தேயு 23:11-12) என்று இயேசு கூறினார். "பதினோராம் மணி வேளை" என்ற உவமையில் (மத்தேயு 20:1-16) எஜமான் எல்லா ஊழியக்காரருக்கும் ஒரேவிதமான கூலி கொடுத்தார். தேவனுடைய பார்வையில் அனைவரும் சமம் என்ற கருத்தை இது காட்டுகிறது. மேலும் நாம் பெற வேண்டிய தாழ்மையையும், மற்றெந்த ஊழியக்காரரைக்காட்டிலும் நாம் நமக்கு முக்கியத்துவம் கொடாமலிருக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்துகிறது.

### முடிவுரை

சரி எது, தவறு எதுவென்று அறிந்துகொள்வதற்கான ஆற்றல் உடையவர்களாக

நாம் இருக்கலாம். நம்முடைய வழி சிறந்த வழி என்றும், நம்முடைய பங்களிப்பு அதிகமானது என்றும், நாம் மிக முக்கியமானவர்கள் என்றும் நாம் அறிந்திருக்கலாம். இவைகளை நாம் நம்முடைய சிந்தையில் அனுமதித்தால், அடுத்தப்படியாக நாம் மற்றவர்களைக் குறைவாக மதிப்பிட துவங்குவோம். இந்த ஒருகருத்தை இயேசு மத்தேயு 5:22-ஆம் வசனத்தில் விவரிக்கிறார் - நம்முடைய சகோதர சகோதரிகளைத் தொடர்ந்து குறைவாக மதிப்பிட்டுக்கொண்டிருப்போம்.

வசனங்களை நாம் மிகச் சரியாகப் புரிந்துகொண்டோம் என்று எண்ணக்கூடிய சிந்தை நம்மில் யாருக்குண்டு? மற்றவர்கள்மேல் தேவனுடைய சத்தியத்தைப் "பாதுகாக்கக்" கூடிய கடமையை நாம் பெற்றிருக்கிறோமா? சரியானப் போதனைகளை நம்பவும், சரியான வழியில் நடக்க வேண்டும் என்ற மற்ற கிறிஸ்தவர்களுக்கு நாம் காட்டக்கூடிய அதிகமான பொறுப்புகளைப் பெற்றிருக்கிறோமா? கிறிஸ்துவின் சரீரத்தை வளர்ச்சியடையச் செய்யக்கூடிய விசேஷமான தேவனுடைய வேலையின் முக்கியத்துவத்தை நாம் பெற்றிருக்கிறோமா? அப்படியானால், இந்தப் பகுதிகளில் மற்றவர்களின் மதிப்பைக் குறைத்துக் கொண்டிருக்கிறோமே.

"தேவனுடைய திட்டத்தில் மிகுந்த சுயாதீனம் அளிப்பதே சிறந்த திட்டமாகும் - அந்த தேவனுடைய திட்டமானது, இருதயத்தின் விசுவாசத்தையும், முழுமையாக குணங்களை வளர்ச்சியடையச் செய்வதிலும், மற்றவர்களிடம் எதிர்பார்க்கும் காரியங்களை நாம் அவர்களுக்கு முதலில் செய்து, அன்பின் பிரமாணத்தை மற்றவர்களிடம் நடைமுறைப்படுத்தி, மனப்பூர்வமாக நிரூபிக்கப்படுவதற்கு நிச்சயமாக சோதிக்கிறது. இப்படிப்பட்ட ... ஒப்பனையான சுதந்தரம், ஆண்டவர் பொருள் கூறிய காரியம் இக்காலத்திற்கு மிகச் சரியாகப் பொருந்தக்கூடியதாக இருக்கிறது - சொல்லப்போனால், சிறுமந்தையின் தேறுதல், அவர்களின் குணங்களைப் பூரணப்படுத்துதல், வருங்காலத்தில் இராஜரீகமான ஆசாரியத்துவத்திற்கு அவர்களை ஆயத்தப்படுத்தல் போன்ற காரியங்களே - (Volume 6, page 196).

**சில வேண்டாமே, சில வேண்டுமே**

சோதோமின் சமவெளியைத் திரும்பிப்பார்க்க வேண்டாமே,

பாபேலின் மனதுக்கொவ்வா முயற்சி செய்ய வேண்டாமே,

எகிப்தின் ஆடல்பாடல்களும் உங்களுக்கு வேண்டாமே,

கிடைக்கவில்லை என்றெண்ணித்தான் கண்ணீர் சிந்த வேண்டாமே,

அங்கே பாயும் நைல்நதிக்காய் தாகம் கொண்டலைய வேண்டாமே,

கலப்பையின் மீதே கைவைத்தப்பின்னே, திரும்பிப்பார்ப்பதும் வேண்டாமே,

நமக்குக் கொடுக்கும் பரிசை வேண்டி சிறுமுயற்சி செய்திடல் வேண்டுமே,

அழிந்துபோகும் பொருளுக்காக ஆண்டவரிடம் ஜெபிக்க வேண்டாமே,

நமது வீடு, நமது கிரீடம், இன்னும் கொஞ்ச காலத்திலே,

நாமோ நமது வனாந்தரத்தைக் கடந்துவந்தே சேர்ந்திட்டோம்,

கடும் உழைப்போ முடிவு பெற்றதே, ஓய்வும்கூட ஆரம்பமானதே, யுத்தம் செய்தே

முடிந்துவிட்டதே, வெற்றிக்கனியும் கொய்யப்பட்டதே. (பறிக்கப்பட்டதே)

## தீர்க்கதரிசனத்தில் இன்று

## இணையவெளி போர் மற்றும் இணையவெளி தீவிரவாதம்

"உங்கள் மண்வெட்டிகளைப் பட்டயங்களாகவும், உங்கள் அரிவாள்களை ஈட்டிகளாகவும் அடியுங்கள்; பலவீனனும் தன்னைப் பலவான் என்று சொல்வானாக" (யோவேல் 3:10).

2012 ஜூலை மாதம் அமெரிக்க ஜனாதிபதி பாராக் ஒபாமா தமது மந்திரிசபை, உள்நாட்டு பாதுகாவலர், உளவுத்துறை மற்றும் இராணுவ அதிகாரங்களைக்கொண்டு, அமெரிக்காவில் உள்ள பொதுநலத்தொண்டு நிறுவனங்களான தொடர் வண்டிகள், மற்றும் குடிநீர் சுகாதார மையங்கள் உலகில் பல இடங்களிலுள்ள வரிகளால் இணயவெளி தாக்குதல் நடத்தப்பட்டதைக்குறித்து விவாதம் நடத்தனார். Wall Street Journal என்ற பத்திரிகையின் தலையங்கத்தில் ஒபாமா எழுதும் போது, "நம் நாடு, பொருளாதார ரீதியாகவும், நம் தேசத்தின் பாதுகாப்பிற்குச் சவாலாகவும் சந்திக்கும் மிகப் பெரிய அச்சுறுத்தலே இந்த இணயவெளி அச்சுறுத்தல் என்கிறார். இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு சோனி படங்கள் சூரையாடல் நடந்தபோது, அவர் கூறிய கருத்து உண்மையாகிவிட்டது. வடகொரியா அரசாங்கத்தின் கொள்கைகள், அவைகளை அழிக்கும் இணயவெளி அடக்கமுறை செயல்கள் (சோனிக்கு எதிராக)... அமெரிக்காவின் பாதுகாப்பிற்கும், அயல்நாட்டு கொள்கைகளுக்கும் மற்றும் பொருளாதாரத்திற்குத் தொடர்ந்து அச்சுறுத்தலை உருவாக்கும் என்று ஒபாமா கருதுகிறார். அமெரிக்காவில் இருக்கும் வடகொரியாவின் சொத்துக்கள் அனைத்தையும் முடக்கிவிட ஒபாமா உத்தரவிட்டார்.

கணினி மின் பொருளை நவீனமாக்குதலோ, தீச்சுவர் உபயோகப் படுத்துதலோ (firewalls) ஆன்ட்டி வைரஸ் மென்பொருள் பொருத்துதலோ ஒரு பயனுள்ள பாதுகாப்பு என்று கூற இயலாது. திறமைவாய்ந்த கொள்ளையர்கள் பாதிக்கப்பட்ட நிலையைக் கண்டறிந்து, கணினியைத் தாக்கி, தொலைவின் மூலம் (remote) தங்கள் கட்டுப்பாட்டிற்குள் வைத்துக்கொள்ள இயலும். திரைப்படங்களில் ஒரு காலத்தில் சித்தரிக்கப்பட்ட நிகழ்வுகள், இன்று உண்மையாகவே நிகழ்ந்துக்கொண்டிருக்கிறது. மரபு சார்ந்த போர்களுக்கு இணையாக அல்லது அதற்குப்பதிலாக இன்று இணயவெளி போர்கள் நடந்துக்கொண்டிருக்கிறது. Stuxnet "worm" மூலம் இஸ்ரயேல் கொள்ளையர்கள், ஈரானின் மின் அணு உற்பத்தி செய்யும் இடத்தைத் தாக்கினார்கள்.

பேராசிரியர் லில்லியன் அப்லோன், பார்டி ரான்டு, சமீபத்தில் தனது வலைப்பதிவில் (blog) எழுதுகையில், "2014-ஆம் வருடத்தில் நச்சு கொள்ளையிடப்பட்டது. Staples Inc., Neiman Marcus Inc., Michaels, Home Depot Inc., மற்றும் eBay Inc, போன்ற விற்பனையாளர்கள் இதன் முடிவை அறிவித்தார்கள். பல்லாயிரக் கணக்கான வாடிக்கையாளர்கள், தங்கள் கடன் அட்டை தகவல்களையும், தங்கள் தனிப்பட்ட குறிப்புகளையும் இந்த இணயவெளி தாங்குபவர் மூலம் வெளியே செல்வதைத் தடுக்க இயலாமல் தவித்தனர். இராட்சித விற்பனையாளரை மட்டும் அவர்கள் தாக்கவில்லை. சுகாதார நிறுவனங்கள், பொருளாதார நிறுவனங்கள் (JPMorgan chase & Co.), பொழுது போக்கு நிறுவனங்கள் (சோனி) போன்ற பெரிய நிறுவனங்களும் இந்த இணயவெளி தாக்குதலுக்குப் பலியானது. தாக்குதலைக் கண்டுபிடித்து அதனால் எற்படும் நஷ்டங்களைத் தடுப்பது பெரிய சவாலாகி விட்டது. Verizon Communications, Inc. ஆராய்ச்சி நிறுவனத்தின் படி, 70-லிருந்து 80 சதவிகிதம்வரை எதற்கும் தொடர்பு இல்லாத மூன்றாம் தரப்பினரே இந்த இணயவெளி தாக்குதலைக் கண்டுபிடிக்கின்றனர்.

2012-இல் தனது தலையங்கத்தில் ஒபாமா எழுதும்போது, "அந்நிய அரசாங்கம், குற்றவியல் ஆட்சிக்குழு மற்றும் பல தனி நபர்கள், அமெரிக்காவின் பொருளாதாரம், ஆற்றல் மற்றும் பொதுநல பாதுகாப்பு மையங்கள் தினந்தோறும் நுண்ணாய்வு செய்கின்றனர் என்கிறார். ஒரு வெற்றியுள்ள இணயவெளி தாக்குதலால் நிகழக்கூடிய விளைவுகளைக் கற்பனை செய்ய இயலாது. எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய சச்சரவுகளில், யுத்தகாலத்தில் அமெரிக்காவின் இராணுவ ஆதிக்கத்தை எதிர்கொள்ள முடியாத பகைவர்கள், அமெரிக்காவின் கணினியைத் தாக்கி அழிக்கக் கூடியவர்களாகிவிடுவார்கள். முக்கியமான வங்கி நிறுவனங்களைத் தூண்டினால், பொருளாதார இடர்பாட்டைக் கொண்டுவர இயலும். சுத்தமான குடிநீர் இல்லையென்றாலோ, நல்லமுறையில் மருத்துவமனைகள் செயல்படவில்லையென்றாலோ, பொது ஜனங்களின் சுகாதார நிலை ஒரு தீப்பொறியை உண்டாக்கும். மின் ஆற்றல் குறைவதால், வியாபாரங்கள், நகரங்கள் மற்றும் முழு மண்டலங்களே ஒரு அசையா நிலைக்குக் கொண்டு வரப்படும்.

கணினியுடன் நேரடி தொடர்புகொள்ளும் உலக மக்களின் எண்ணிகை, நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே போவதைப்பற்றின ஆராய்ச்சியை "cybergeddon" என்று கூறுகின்றனர். உலகப் பொருளாதார மன்றத்தைச் சார்ந்தவர்கள் (2004 ஜனவரி/பிப்ரவரி தீர்க்கதரிசனத்தில் இன்று ... காண்க).

அர்மகெதோனுக்கு வழிநடத்துதல் -

"ஆறாம் தூதன் தன் கலசத்திலுள்ளதை ஐபிராத் என்னும் பெரிய நதியின்மேல் ஊற்றினான்; அப்பொழுது சூரியன் உதிக்குந் திசையிலிருந்துவரும் ராஜாக்களுக்கு வழி ஆயத்தமாகும்படி அந்த நதியின் தண்ணீர் வற்றிப்போயிற்று. அப்பொழுது, வலுசர்ப்பத்தின் வாயிலும் மிருகத்தின் வாயிலும் கள்ளத்தீர்க்கதரிசியின் வாயிலுமிருந்து தவளைகளுக்கு ஒப்பான மூன்று அசுத்த ஆவிகள் புறப்பட்டுவரக் கண்டேன். அவைகள் அற்புதங்களைச் செய்கிற பிசாசுகளின் ஆவிகள்; அவைகள் பூலோகமெங்குமுள்ள ராஜாக்களைச் சர்வவல்லமையுள்ள தேவனுடைய மகாநாளில் நடக்கும் யுத்தத்திற்குக் கூட்டிச் சேர்க்கும்படிக்குப் புறப்பட்டுப் போகிறது. இதோ, திருடனைப்போல் வருகிறேன். தன் மானம் காணப்படத்தக்கதாக நிர்வாணமாய் நடவாதபடிக்கு விழித்துக்கொண்டு, தன் வஸ்திரங்களைக் காத்துக்கொள்ளுகிறவன் பாக்கியவான். அப்பொழுது எபிரெயு பாஷையிலே அர்மகெதோன் என்னப்பட்ட இடத்திலே அவர்களைக் கூட்டிச் சேர்த்தான்" (வெளிப்படுத்தல் 16:12-16).

இணயவெளி தாக்குதல் மூலம் நடக்கும் சம்பவங்கள் அனைத்தும் அதிகரித்துக் கொண்டிருக்கும். இடைதொடர்பு வன்முறைச் சார்ந்த உலகில் நிகழப்போகும் அபாயத்தைச் சுட்டிக்காண்பிக்கிறது. வேத மாணவர்கள் இதில் மூன்றுவகையான முக்கிய குறிப்புகளை கருத்தில்கொள்ள வேண்டும்.

**(1) மறைந்திருப்பவை வெளிப்படுத்தப்படுகின்றது.**

சமீபமாக சோனியின்மேல் நடத்தப்பட்ட தாக்குதல்கள், மற்றும் கசிவுகள் மேலும் வன்முறைச் சார்ந்த வெளிப்படுத்துதல்கள் யாவும் இயேசு கிறிஸ்துவின் எச்சரிக்கையை நிறைவேற்றுகின்றது (மத்தேயு 10:26). சோனி தாக்கப்பட்டபோது அதில் மறைந்திருந்த அதன் தொடர்புகள், கருத்துகள், ஒருதலை சார்ப்பான கொள்கைகள் அதன் தற்பெருமைகள் எல்லாம் பொது ஜனங்களின் பார்வைக்குக் கொண்டுவரப்பட்டது. இதுபோன்ற வெளிப்படுத்துதல்கள், பொது ஜனங்கள்... நிறுவனங்கள் மீதும், பெரும் தலைவர்கள் மீதும் கொண்டிருந்த மதிப்புக்களைக் குறையச் செய்கிறது.

**(2) வலிமையற்றவர்கள் தங்களை வலிமையுள்ளவர்கள் என்கிறார்கள்.**

யோயேல் 3:10-ஆம் வசனத்தில் கூறப்படும் கருத்தை சமீபமாக கொரில்லா போர்களை பயிற்சிவிக்கும் ஒரு சிறிய தீவிரவாத அமைப்புகள் தங்கள் போர்களில் செயல்முறைப் படுத்தியுள்ளார்கள். ஆனால் இன்று இணயவெளி தீவிரவாதிகள் பொருளாதார சம்பந்தப்பட்ட போர்களை நடத்துகிறார்கள். கூட்டு நிறுவனங்களின் இரகசியங்களைக் கண்டுபிடிப்பதில் வறையறுக்கப்பட்டிருந்த இணயவெளி தீவிரவாதம், இன்று சர்வதேச நிறுவனங்களுக்கு ஒரு பெரிய வீழ்ச்சியைக் கொண்டுவரும் வலிமைப் பெற்றுள்ளது. இவைகள் நிறைவேறிக்கொண்டிருக்கும் இந்தத் தலையீடுகளுக்கெல்லாம் எங்கும் எல்லை இருக்கிறது. 2012-ஆல் ஒபாமா தமது தலையங்கத்தில், ஒரு மின்தொகுப்பின் வீழ்ச்சியோ அல்லது வங்கி நிறுவனங்கள் மூடப்படுவதாலோ, நிகழக்கூடிய நிகழ்வுகளால், மரபு சார்ந்த யுத்தம் ஆரம்பமாக வாய்ப்புகள் உள்ளன.

**பொருளாதார அர்மகெதோன்**

ஆறாம் வானதூதரின் கொள்ளை-நோய் கொண்டுவரும் செயலால், ஐபிராத் நதி வற்றிக் கொண்டிருக்கிறது (வெளிப்படுத்தல் 16:12). பாபிலோன் பழங்கால நாட்களிலிருந்து, ஐபிராத் கரையோரம் வாடும் ஜனங்களுக்கு ஒரு முக்கியமான பாகம் வகித்தது. அதன்மேல் நீர் ஆற்றல் நிலையங்கள், நீர் பாசன திட்டம் மற்றும் தொலை தூரம் நீர் கொண்டுச் செல்ல பெரிய குழாய்கள் அமைக்கப்பட்டதால், கடந்த காலத்தைவிட இப்பொழுது ஜனங்கள் மின் ஆற்றலுக்காகவும், குடிநீருக்காவும் மேலும் பல அடிப்படை வசதிகளுக்காகவும் அந்த ஆற்றைச் சார்ந்துள்ளனர். மின்சாதனங்கள் சார்ந்த கருவிகளால் இன்று உலகப் பொருளாதாரம் முன்னேறிக் கொண்டிருக்கிறது. திறமைவாய்ந்த கொள்கைகாரர்கள் இந்த கணினிக்குள் ஊடுருவி பொருளாதாரத்தைக் குலைக்கும் வல்லமையைப் பெற்றுள்ளார்கள். தேசமோ நாடு இனி அழிவது பொருளாதார சீர் குலைவால் அல்ல, ஆனால் இந்தக் கொள்ளையர்கள் எதையெல்லாம் நிறைவேற்ற வல்லவர்களாய் இருக்கிறார்களோ, அதன் விளைவாகவே எல்லாம் நிகழும். வாடிக்கையாளர்களுக்கு எவ்வளவு வசதிகளும், பாதுகாப்பும் அளித்தாலும், பொருளாதாரத்தை எந்தளவிற்கு நிலைநிறுத்த முடியும், பாதுகாக்க முடியும் என்பது தெரியாத ஒன்றாக உள்ளது.

**கற்பனையில் ஒரு பாதுகாப்பான உலகம்**

வல்லரசு ஆதிக்கம் செலுத்திய காலம் நிறைவுற்றது. இன்றைய உலகம் ஒரு கற்பனை செய்யமுடியாத உலகமாய் மாறிவிட்டது. சிறிய அளவிலான பெரிய போர் கப்பல்கள் ஒன்றை மற்றொன்று சுற்றிவந்த நாட்கள்போய், இன்று சமுத்திரத்தில் பல கப்பல்கள், பல திறமையற்ற தலைவர்களால் வழி நடத்தப்பட்டுக்கொண்டிருக்கிறது. மோதலுக்குரிய அச்சுறுத்தல் மிகுதியாகிக்கொண்டே போகிறது.

இன்றைய அமைப்புகள் - பொது அமைப்பு, மதம், பொருளாதாரம் மற்றம் அரசியல் அமைப்புகள் விரைவில் ஜனங்களின் நலனுக்காக மாற்றி அமைக்கப்படும் (தானியேல் 5:27).

அர்மகெதோனில் இறுதி யுத்தம் எல்லா அமைப்புகளின் வல்லமையையும் குலைத்துவிடும். இயேசுவின் பிரசன்னம் எல்லா மனிதனையும் இராஜ்யத்திற்குள் வழிநடத்திச் செல்லும். "சகல ஜாதிகளையும் அசையப்பண்ணுவேன், சகல ஜாதிகளாலும் விரும்பப்பட்டவர் வருவார்; இந்த ஆலயத்தை மகிமையினால் நிறையப்பண்ணுவேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்" (ஆகாய் 2:7).

அவருடைய இராஜ்யத்திற்காக ஆயத்தம் செய்ய தேவன் இன்று நாடுகளைக் குலுக்குகிறார். தேவனின் தெய்வீக திட்டத்தின் கீழ், பூமியிலுள்ள அனைவரும் அமைதியையும், சமத்துவத்தையும் நிலைவாழ்விற்கான வாய்ப்பையும் அனுபவிப்பார்கள். நமக்கு இருக்கும் ஆவிக்குரிய விழிப்புணர்வுகளை நினைவில்கொண்டு, இந்தப் பூமியில் நடக்கும் எந்த நிகழ்ச்சிகளைக்குறித்தும் அச்சங்கொள்ளாமல் அதனை உதறித்தள்ளுவோமாக. சங்கீதம் நம்மை ஊக்குவிப்பதை நாம் நினைவிற்கொள்வோமாக "பூமியின் எல்லைகளெல்லாம் நினைவுகூர்ந்து கர்த்தரிடத்தில் திரும்பும்; ஜாதிகளுடைய சந்ததிகளெல்லாம் உமது சமுகத்தில் தொழுதுகொள்ளும். ராஜ்யம் கர்த்தருடையது; அவர் ஜாதிகளை ஆளுகிறவர்" (சங்கீதம் 22:27-28).


**சங்கிலியாண்டபுரம் வேத மாணவர்கள்,**

திருச்சி.

**Cell : 9244611241, 8122224919**